Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 28 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :232 ஆடி 03ஆம் நாள் சனிக்கிழமை 18 ஜூலை 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## குழந்தைக்கும் சிறுவனுக்கும் கொரோனா

கொழும்பு, ஜூலை 18
கம்பளை, பம்பரதெனிய பிரதேசத்தில் இரு வயதுக் குழந்தை ஒன்றுக்கும், அநுராதபுரம் ராஜாங்கனைப் பகுதியைச் சேர்ந்த 12 வயதுச் சிறுவனுக்கும் கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்

25 >

# தலைவிரித்தாடும் இராணுவத் தலையீடு பதவியை தூக்கிக் கடாசினார் குருபரன்

## ஒத்தூதிய பல்கலை பேரவைக்கு கரும்புள்ளி

யாழ்ப்பாணம், ஜூலை 18
சிறிலங்கா இராணுவத்தின் நெருக்குதல்- அழுத்தம் காரணமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எடுத்த முடிவுக்கு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவையும் ஒத்தூதியிருந்த நிலையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சட்ட முதுநிலை விரிவுரையாளர் பதவியிலிருந்து விலகுவதாக கலாநிதி குமாரவடிவேல் குருபரன் அறிவித்துள்ளார்.

27 >

## பலாலியில் இராணுவம் கட்டிய 'ஜிம்' திறக்கிறார் சவேந்திரசில்வா

யாழ்ப்பாணம், ஜூலை 18
பலாலியில் மக்கள் காணிகளை ஆக்கிரமித்து வைத்துள்ள இராணுவம் அங்கு தமக்கான உடல் வலுவூட்டல் கூடத்தை (ஜிம்) அமைத்துள்ளது. அதனை இராணுவத் தளபதி

4 >

## மிருசுவில் படுகொலை: பொதுமன்னிப்பு வழக்கு ஒத்திவைப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 18
மிருசுவில் கொலை வழக்குக் குற்றவாளியான சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்கவிற்கு எதிராக தொடரப்பட்ட 4 வழக்குகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.
உயர்நீதிமன்றத்தில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. குற்றவாளிக்கு பொதுமன்னிப்பளிக்கும் ஜனாதிபதியின் முடிவுக்கு எதிராக 4 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. 4 வழக்குகளும் ஒரே சமயத்தில் விசாரணைக்கு

25 >

வாசகர்களே!
உங்கள் அபிமான
சுடர் ஒளி
மாலைப்பதிப்பு
எதிர்வரும் புதன்கிழமை ( 22.07.2020) முதல்
சுடச் சுட செய்திகளுடன்
உங்கள் முகவரிடம் இப்போதே முற்பதிவு செய்து கொள்ளுங்கள்.

## கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று வெளியீடு!!!

யாழ்ப்பாணம், ஜூலை 18
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கையை வெளிப்படுத்தும் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று சனிக்கிழமை காலை 11 மணிக்கு வெளியிடப்படும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தலைவர் மாவை.சோ.சேனாதிராசா அறிவித்துள்

26 >

## அடங்க மறுக்கும் அரசியல்வாதி

### ஆணைக்குழுவில் ஈ.பி.டி.பி. முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 18
தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் வீதி திறப்பு விழாக்களை முன்னெடுக்க வேண்டாம் என்று தேர்தல்கள் ஆணைக்குழுத் தவிசாளர் மஹிந்த தேசப்பிரியவால் யாழ்ப்பாணத்தில் வைத்து அறிவுறுத்தல் விடுக்கப்பட்ட பின்னரும், யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் சப்ரிகம திட்டத்தில் அமைக்கப்பட்ட வீதிகளை திறந்து வைத்துள்ளார் என்று தேர்தல்கள் ஆணைக்குழுத் தவிசாளர் மஹிந்த தேசப்பிரியவிடம், ஈ.பி.

26 >

## தேர்தல் தொடர்பான சுகாதார வர்த்தமானி நேற்றிரவு வெளியீடு

கொழும்பு, ஜூலை 18
தேர்தல் அலுவலகங்கள், கூட்டங்கள், பரப்புரை நடவடிக்கைகள் தொடர்பில் சுகாதார செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட கோவிட் 19 ஒழுங்கு விதிகளை உள்ளடக்கிய வர்த்தமானி நேற்று இரவு வெளியிடப்

26 >

## பெற்றோல் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 18
யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவலர் வீதியில் உள்ள வீட்டின் மீது நிறுத்தி வைக்கப்பட்ட கார் ஒன்றின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இந்தச் சம்ப

28 >



## சின்னவன் கைது

### நகைகள், குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18
யாழ்ப்பாணத்தில் பல்வேறு கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர் ஒருவரைக் கொலை செய்

26 >

## கொரோனா ஒழிப்பில் பெரும் நெருக்கடி!!!

### பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் புறக்கணிப்பு

கொழும்பு, ஜூலை 18
நாடு முழுவதும் உள்ள பொதுச் சுகாதார ஊழியர்கள் கொரோனா ஒழிப்பு நடவடிக்கைகளில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளனர்.
இந்த முடிவு தொடர்பாக அந்தச் சங்கத்தின் தலைவர் எம்.ஜி.யூ ரோஹன

25 >



# சர்வதேசத்துக்கு தமிழரின் ஒற்றுமையை காண்பிக்க வீட்டுக்கு வாக்களிக்கவும்

## சம்பந்தன் கோரிக்கை



**திருகோணமலை, ஜூலை 18**

**கடந்த தேர்தலின் போது வடக்கு கிழக்கில் 16 ஆசனங்களைப் பெற்றிருந்தோம். இம்முறை 20 ஆசனங்களைப் பெறுவதற்கு உங்கள் வாக்குகளை வீட்டுச் சின்னத்துக்கு அளிக்க வேண்டும். சர்வதேச சமூகத்துக்கு எமது ஒற்றுமையை இதனூடாக காண்பிக்க வேண்டும். புதிய அரசமைப்பு உருவாக்குவதன் முக்கியத்துவத்தையும் எமது வாக்குகளே தீர்மானிக்கப் +போகின்றன.**

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் உள்ள அவரது பணிமனையில் நேற்று இடம்பெற்ற முதியோர் சங்கங்கள், இளைஞர் அமைப்புகள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார். திருகோணமலை மாவட்டத்தில் 90 ஆயிரம் தமிழ் வாக்குகள் இருப்பதாகவும் அதில் 70 ஆயிரம் வாக்குகளைப் பெற்றால் இரண்டு ஆசனங்களைப் பெறமுடியும் எனவும் இதனைக் கருத்தில் கொண்டு அனைத்து தமிழ் பேசும் மக்களும் மாற்றுக் கட்சிகளுக்கு வாக்களிக்காமல் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார். தற்பொழுது உங்களை அழைத்துப் பேசுவதன் நோக்கம் நீங்கள் உங்களது பகுதிகளில் மிகவும் பிரபலமானவர்கள் என்பதை அறிந்துள்ளோம். மாற்றுக் கட்சியினர் தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடிக்கும் வகையில் வேறு கட்சிகளுக்கு வாக்களிக்குமாறு கூறுவார்கள். ஆனாலும் நீங்கள் ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று எதிர்காலம் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிக்காமல் போனால் எவ்வாறு அமையும் என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஒ.5)

# அரசவை தகர்ப்பு விசாரணைக்கு பணிப்பு

கொழும்பு, ஜூலை 18


வரலாற்று சிறப்புமிக்க குருநாகல் புவனேகபாகு மன்னரின் அரசவை தகர்க்கப்பட்டமை தொடர்பான விசாரணைக்கு பிரதமரால் நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஐவர் அடங்கிய நிபுணர் குழுவொன்றே விசாரணை களுக்காக நியமித்துள்ளதாக கலாசார மற்றும் புத்தசாசன அமைச்சின் செயலர் அறிவித்துள்ளதாக அரச தகவல் திணைக்களம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் செனரத் திசாநாயக்க தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. குருநாகல் மாவட்டச் செயலாளர் சு.ஆ.சு.ரத்னாயக்க, தொல்லியல் ஆய்வாளர் குலதுங்க, கலாசார மற்றும் புத்தசாசன அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் பிரசாத் ரணசிங்க, மத்திய கலாசார நிதியத்தின் அபிவிருத்தி பிரிவு பணிப்பாளர், வாஸ்து சாஸ்திர நிபுணர் சுமேதா மாத்தொட்ட ஆகியோர் இந்தக் குழுவின் ஏனைய அங்கத்தவர்களாவர்.

குருநாகல் புவனேகபாகு மன்னரின் அரசவைக் கட்டம் கடந்த 14 ஆம் திகதி தகர்க்கப்பட்டமை தொடர்பில் துரித விசாரணையை மேற்கொள்ளுமாறு இந்தக் குழுவுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

விசாரணை அறிக்கையை எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார். (ஒ.5)



# மூன்று நாள்களுக்கு ஒருமுறை நிலைமையை ஆராய்ந்தே தேர்தல்

## மஹிந்த தேசப்பிரிய கட்சி தலைவர்களிடம் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 18

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி திட்டமிட்ட அடிப்படையில் பொதுத்தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய, அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளருக்கும், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்குமிடையிலான கலந்துரையாடலொன்று தேர்தல் ஆணைக்குழுவில் நேற்று நடைபெற்றது.

இதன்போது பொதுத்தேர்தல் தொடர்பான சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல், தேர்தல் நடத்தும் விதம் உட்பட சமகால விவகாரங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. குறிப்பாக பரப்புரைகளை முன்னெடுப்பதற்காக தேர்தல் ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்டுள்ள வழிகாட்டல்களை அவ்வாறே வர்த்தமானியில் அறிவித்தால், பரப்புரையை முன்னெடுக்கமுடியாத நிலை ஏற்படும். எனவே, மக்கள் பிரதிநிதிகளுக்கு தமது நிலைப்பாடுகளை வாக்காளர்களுக்குத் தெரிவிப்பதற்கு வாய்ப்பிருக்கவேண்டும், என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலர் தயாசிறி ஜயசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், கொரோனா வைரஸ் பரவலைக் கருத்திற்கொண்டு தேர்தலை நடத்துவது தொடர்பில் ஆணைக்குழு முடிவொன்றை எடுக்கவேண்டும் என்று சில அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆனால், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தேர்தல் நடைபெறும் என்றும், ஏதேனும் பகுதி முடக்கப்பட்டால் அங்கு பிறிதொரு நாளில் தேர்தலை நடத்தக்கூடியதாக இருக்கும் எனவும் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார் என்று அரசியல் கட்சியின் பிரதிநிதியொருவர் தெரிவித்தார்.

'மூன்று நாள்களுக்கு ஒரு முறை நாட்டின் நிலைமை கண்காணிக்கப்படும். அதற்கேற்ற வகையில் பாதுகாப்பான முறையில், சில மாற்றங்களுடன் தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் குறிப்பிட்டார் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் உப தலைவர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

அதேவேளை, அரச ஊடகங்கள் ஆளுங்கட்சிக்கு மாத்திரமே முக்கியத்துவம் வழங்குகின்றன. இது தொடர்பில்தேர்தல் ஆணைக்குழு கவனம் செலுத்த வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலர் கோரிக்கை விடுத்தார். (ஒ.5,44)

அனுமதிப்பத்திரமின்றி

# மணல் கொண்டு சென்றால் கைது

கொழும்பு, ஜூலை 18

அனுமதிப்பத்திரமின்றி மணலைக் கொண்டு செல்பவர்களைக் கைது செய்யுமாறு பதில் பொலிஸ் மா அதிபருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சுற்றாடல் சட்டத்திற்கமைய, மணலைக் கொண்டு செல்வதற்கு அனுமதிப்பத்திரம் அவசியமெனவும், அமைச்சரவைப் பத்திரத்தினூடாக அந்த அனுமதிப்பத்திர முறைமை இரத்து செய்யப்பட்டுள்ளது என்ற நிலைப்பாடு தவறான புரிதலால் ஏற்பட்டுள்ளதாகவும் சட்ட மா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக செலிசிட்டர் ஜெனரல் பாரிந்த ரணசிங்க நீதிமன்றத்தில் சுட்டிக் காட்டினார்.

இதனைக் கருத்திற்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதிநவாஸ் மற்றும் நீதிபதி ரோஹித ராஜகருணா ஆகியோர் பதில் பொலிஸ் மா அதிபருக்கு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளனர். (ஒ.5)

# தனிமைப்படுத்தலை உதறும் முன்னாள் அமைச்சர்கள்

கொழும்பு, ஜூலை 18

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர்களான எஸ்.எம்.சந்திரசேன மற்றும் துமிந்த திஸாநாயக்க ஆகியோருக்கு சுயதனிமைப்படுத்த அறிவுத்தல் வழங்கப்பட்டுள்ளபோதும், அதை மீறி அவர்கள் பரப்புரைகளில் ஈடுபட்டுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர்கள் இருவரும் ராஜாங்கன பிரதேசத்தில் இனங்காணப்பட்ட முதலாவது கொரோனா தொற்றாளர் கலந்துகொண்ட இறுதிச் சடங்கு ஒன்றில் கலந்துகொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அதையடுத்து அவர்கள் இருவரையும் சுயதனிமைப்படுத்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் அதைப் புறக்கணித்து அவர்கள் தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் இருவரும் சிறிலங்கா பொதுஜன பெரமுன சார்பில் அநுராதபுரம் மாவட்டத்தில் போட்டியிடுகின்றனர். (ஒ.எ)

# 30 பொலிஸார் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஜூலை 18

ஹோமாகம நுகேகொடை நான்காம் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட பொலிஸார் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அந்தப் பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் பெண் சார்ஜன்ட் ஒருவருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்தே பொலிஸார் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

ஒன்பது பொலிஸ் அதிகாரிகளும் நான்கு சிவில் பாதுகாப்பு அதிகாரிகளும் ஹபராதுவ தனிமைப்படுத்தல் நிலையத்துக்கும் 13 பொலிஸாரும் ஐந்து சிவில் பாதுகாப்பு அதிகாரிகளும் அத்திட்டிய தனிமைப்படுத்தல் நிலையத்துக்கும் அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ.த)

# யாழ்ப்பாணம் - கிளிநொச்சி
# தேர்தல் மாவட்டம்

## நாடாளுமன்றத் தேர்தல் - 2020




எங்கள் தேசம் எங்கள் சுவாசம்
எங்கள் எழுச்சி வாக்குப் புரட்சி
தமிழ் தேசத்தின் விடியலுக்காய்
உங்கள் கைகளில் உங்கள் தேசம்
இளைஞர்களே யுவதிகளே
வருங்கால சந்ததிகளே
உங்கள் எதிர்காலம் உங்கள் கைகளில்
விழித்தெழுவோம் காத்திடுவோம்
எங்கள் தமிழ்த் தேசத்தைக் கட்டி எழுப்புவோம்.

## பரநிருபசிங்கம்
## வரதராஜசிங்கம்
## (விண்ணன்)

5

## உண்மைகள் யாவும்
## அம்பலத்திற்கு....

## மரண அறிவித்தல்



### குமாரசாமி கிருஷ்ணசாமி

பொற்றொழிலாளர் வீதி, சங்கத்தானை சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி கிருஷ்ணசாமி நேற்று (17.07.2020) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - இராசமணி தம்பதியினரின். அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - நல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் இராசகுமாரியின் அன்புக் கணவரும் சோபனா ஜீவனா கிருஷ்ணகுமார் கல்பனா தீபா சஜீவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அருள்மாதவன் நேசராசா பானு சுதாகரன் ஹறிகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் மதுரா குலவர்மன் கஜலக்ஸன் தருட்சிகா டர்சிகா கிருத்திகா வினுஷா ஆர்விகா, அத்விகா ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.07.2020) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.30 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பொற்றொழிலாளர் வீதி**
**சங்கத்தானை, சாவகச்சேரி.**

**தகவல் :-**
**குடும்பத்தினர்**

## இராணுவம்...

சவேந்திர சில்வா இன்று திறந்து வைக்கவுள்ளார்.

வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்துள்ள இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, கிளிநொச்சியில் இராணுவத்தினருக்கான மருத்துவமனையை இரணைமடுவில் நேற்றுத் திறந்து வைத்தார்.

யாழ்ப்பாணத்துக்கு தொடர்ந்து நேற்று இரவு வருகை தந்துள்ள இராணுவத் தளபதி, பலாலியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவத்தினருக்கானமருத்துவமனை மற்றும் உடல் வலுவூட்டல் கூடத்தை திறந்து வைக்கவுள்ளார். (ஒ,5,26)

## மரண அறிவித்தல்

**பிறப்பு**
**25 . 09 . 2006**



**இறப்பு**
**16 . 07 . 2020**

### கலைச்செல்வன் தாருகா

காரைநகர் ஆயிலியைப் பிறப்பிடமாகவும் பெல்ஜியம் (Antwerpen) ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கலைச்செல்வன் தாருகா கடந்த (16.07.2020) பெல்ஜியத்தில் இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் கலைச்செல்வன் (கண்ணன்) சாந்தினி தம்பதியரின் கனிஸ்ர புத்திரியும், தர்சிகா, ஷகிலா (அமரர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சபாரத்தினம், மகேஸ்வரி, தம்பிராசா, சரஸ்வதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (24.07.2020) வெள்ளிக்கிழமை பி.ப 5.00 மணிக்கு பெல்ஜியத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நாகலிங்கம் வீதி,**
**கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**

**தகவல்:**
**முத்துக்குமாரு சபாரத்தினம்**

**தொடர்புக்கு:** 076 609 4313, +0032466015563

## மரண அறிவித்தல்

# திருமதி நவரட்ணம் இராஜேஸ்வரி



வராகி கோயிலடி, கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவரட்ணம் இராஜேஸ்வரி நேற்று (17.07.2020) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை (மாடர்) - நாகம்மா தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற வீரசிங்கம் நவரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், இரஞ்சமலர் (கொக்குவில்), மஞ்சுளா (கொக்குவில்), நவசேனா (சுவிஸ்), சுதாகரன் (சுவிஸ்), பிரகாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தர்மரட்ணம் (கொக்குவில்), காலஞ்சென்ற தவராஜலிங்கம், லிங்கேஸ்வரி (சுவிஸ்), மையூரி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தேவநாதன் - கேமாவதி, மேனகா, நவஜீவன், ஜீவனா, எழிலரசி, உதயஜோதி, கோபிநாத், மாதங்கி, நவஜோதி, நவீனா, நவீன், அபிஷ்னா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அபிசாயினி, லிபிசாயினி ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுத்திக்கிரியைகள் நாளை **(19.07.2020)** ஞாயிற்றுக்கிழமை முற்பகல் **10.00** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்.**

**021 222 3317, 077 953 8959**

# பிரபாகரனின் கதை முடிய முன்னரே கருணாவின் கதை முடிந்திருக்கும்

## காட்டிக் கொடுத்ததால் தப்பித்தார் என்கின்றது மஹிந்த அணி



கொழும்பு, ஜூலை 18

புலிகள் அமைப்பில் இருந்து விலகி அரசுடன் இணைந்திருக்காவிட்டால் கருணாவின் கதை தொப்பிக்கலவில் முடிந்திருக்கும் என்று தெரிவித்துள்ளார் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.வி.சானக்க.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

கருணா விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து பிரிந்து வந்து 2005ஆம் ஆண்டு ஒத்துழைப்பு வழங்கியிருக்காவிட்டால், நந்திக்கடலில் பிரபாகரனின் கதை முடிக்கப்படுவதற்கு முன்னரே தொப்பிக்கலவில் கருணாவின் உடலை மீட்கக் கூடியதாக இருந்திருக்கும்.

இனவாதத்தைப் பரப்புகின்றார் என்று கருணா மீது இப்போது குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. படையினர் தொடர்பில் அவர் வெளியிட்ட கருத்தைக் கண்டிக்கின்றோம். அதற்காக அவருக்கு எதிராக நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

கருணா வந்ததால் எமக்கு புலிகள் பற்றிய பல உளவுத் தகவல்கள் கிடைத்தன. போரை முடிப்பதற்கு அவை உதவியாக அமைந்தன. எது எப்படியோ அவர் எமது பக்கம் வந்திருக்காவிட்டால் தொப்பிக்கலவில் அவரின் கதை முடிந்திருக்கும். பிரேமதாசதான் புலிகளுக்கு ஆயுதம் வழங்கினார், அது போன்று நாம் வழங்கவில்லை.

ஈஸ்ரர் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் எமது பக்கம் இல்லை. ஈஸ்ரர் தாக்குதலுக்கு மைத்திரிபால சிறிசேனவும் பொறுப்புக் கூற வேண்டும், என்றார்.

(ஒ,எ,44)



# இளைஞர்களைத் தாக்கிய பொலிஸ் ஈச்சங்குள பகுதியில் பதற்றநிலை!

வவுனியா, ஜூலை 18

வவுனியா ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி இளைஞர்கள் இருவரைத் தாக்கியதால் அந்தப் பகுதியில் நேற்று மாலை பதற்றம் நிலவியது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட இளைஞர்கள், 'இன்றைய தினம் (நேற்று) மாலை குறித்த பகுதியில் நின்றிருந்த சமயம் அவ்வீதியால் வருகைதந்த ஈச்சங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்மை அங்கிருந்து செல்லுமாறு தெரிவித்து விட்டுச் சென்றார். பின்னர் சிறிது நேரத்தின் பின்னர் மீண்டும் வருகைதந்த அவர் திடீர் என்று எம்மைத் தாக்கினார். நாம் எந்தக் குற்றமும் செய்யாத நிலையில் அவர் எம்மைத் தாக்கினார்' என்று தெரிவித்தனர்.

குறித்த சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் ஒன்று திரண்ட இளைஞர்கள் மற்றும் ஊர்மக்கள் ஈச்சங்குளம் பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக உள்ள பிரதான வீதிக்குக் குறுக்காக தடைகளை ஏற்படுத்தியதுடன், வீதியை வழிமறித்து தமக்குரிய நீதியை வழங்குமாறுகோரி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற வவுனியா பொலிஸ் அத்தியட்சகர், வவுனியா தலைமை பொலிஸ் நிலைய உப பொறுப்பதிகாரி, மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன் ஆகியோர் போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடியிருந்தனர்.

தாக்குதலிற்குள்ளான இளைஞர்களை நாளையதினம் (இன்று) வன்னி மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகத்திற்கு சென்று முறையிடுமாறும், தற்போது போராட்டத்தை கைவிடுமாறும் பொலிஸ் அத்தியட்சகரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டதற்கமைய போராட்டம் கைவிடப்பட்டது.

(ம-110)

# ஓரிருவருக்கு எதிரான விசாரணையால் ஒட்டுமொத்த பேருக்கும் பாதிப்பு வராது

## ஐ.தே.க. விளக்கம்

கொழும்பு, ஜூலை 18

சர்வதேச அழுத்தங்களில் இருந்து படையினரை ஐக்கிய தேசியக் கட்சி அரசே பாதுகாத்தது. எமது ஆட்சியின் கீழ் புலனாய்வுப் பிரிவு பலவீனப்படுத்தப்படவில்லை. இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரும், முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான ருவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

புலனாய்வுத் துறையினரை வேட்டையாடுவதற்கோ, புலனாய்வுக் கட்டமைப்பை பலவீனப்படுத்துவதற்கோ எமக்கு எந்தத் தேவையும் இல்லை. நாம் எமது ஆட்சியில் அதைச் செய்யவுமில்லை.

2015ஆம் ஆண்டுக்கு முன்னர் மஹிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் சில கொலைகள் நடந்துள்ளன. கடத்தல் சம்பவங்களும் பதிவாகின என்று மக்கள் மத்தியில் கருத்து நிலவியது. அவை தொடர்பாக விசாரணை நடத்தப்படும் என்று ஜனாதிபதித் தேர்தலின்போது நாம் உறுதி வழங்கியிருந்தோம்.

அதன்படி விசாரணைகள் நடைபெற்றன. அந்தச் சம்பவங்களுடன் சில புலனாய்வு அதிகாரிகள் தொடர்புபட்டுள்ளனர் என்று தெரியவந்தது. அவர்களுக்கு அரசியல் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு அதைச் செய்திருக்கலாம். அப்படியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டபோதே புலனாய்வுப் பிரிவினரைப் பலவீனப்படுத்துகின்றோம் என்று எதிரணியால் பரப்புரை முன்னெடுக்கப்பட்டது.

புலனாய்வுத் துறையைப் பலவீனப்படுத்த நாம் முயற்சிக்கவில்லை. ஓரிருவருக்கு எதிராக நடத்தப்படும் விசாரணையால் ஒட்டுமொத்தப் புலனாய்வுப் பிரிவுக்கு அவமதிப்பு ஏற்படாது.

சர்வதேசத்திடம் இராணுவத்தைக் காட்டிக் கொடுத்தோம் என்ற குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர். நாம் ஆட்சியைப் பொறுப்பேற்றபோது நாட்டுக்கு எதிராகக் கடும் சர்வதேச அழுத்தங்கள் இருந்தன. பொருளாதாரத் தடைகள் கூட விதிக்கப்படவிருந்தன. நாம் தலையிட்டுத்தான் இந்த நிலைமையை மாற்றினோம். படையினரின் கௌரவத்தைக் காத்து, பொருளாதாரத் தடையையும் நீக்கினோம், என்றார். (ஒ,எ44)

# முன்னாள் போராளியின் வீடு உடைப்பு

கிளிநொச்சி, ஜூலை 18

முன்னாள் போராளி ஒருவர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவரது வீடு இடிக்கப்பட்டு உடைமைகள் வீதியில் வீசப்பட்டுள்ளன.

கிளிநொச்சி திருநகர் தெற்கில் வசித்து வந்த மூன்று மாவீரர்களின் சகோதரியும், கணவன் காணாமல் ஆக்கப்பட்ட முன்னாள் போராளியுமான எழில்வேந்தன் கோணேஸ்வரி என்பவரே தாக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து உயிரிழந்த தனது மூன்று சகோதரர்களில் ஒருவர் வாங்கிய காணியில் நான் வசித்து வந்த நிலையில் அரசியல் பின்புலத்துடன். காணியிலிருந்து வெளியேற்றுவதற்கு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அவ்வப்போது மாத்தளையிலிருந்து காணியை புலிகள் அமைப்புக்கு விற்பனை செய்துவிட்டு சென்றவர் என்று ஒருவரை வைத்து எனக்கு கடும் நெருக்கடி கொடுப்பட்டது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி பொலிஸாரின் ஆதரவுடன் சிலர் காணிக்குள் நுழைந்து வேலியை பிரித்து எறிந்துவிட்டு வீட்டுக்குள் நுழைந்த போது எதிர்த்து நின்றேன். என்னை தாக்கினார்கள். எனது வீட்டு உடைமைகள் வீதியில் எறியப்பட்டுள்ளன. வீடும் உடைக்கப்பட்டுள்ளது. மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பினால் எங்கு செல்வேன் என்றே தெரியவில்லை எனத் தெரிவித்தார்.

சில வருடங்களுக்கு முன் நள்ளிரவில் எனது தொலைபேசி அழைப்புக்கு தொடர்பு கொண்ட உள்ளூர் அரசியல்வாதி ஒருவர் கொத்துரொட்டி கட்டிக்கொண்டு வரட்டா எனக் கேட்ட விடயத்தை நான் அம்பலப்படுத்திய நாள் முதல் நெருக்கடியை சந்தித்து வருகின்றேன், என்றார் அவர்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸாரின் கவனத்துக்கு கொண்டு சென்றும் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

(ஒ,5,214)

## பெரமுனவின் பரப்புரைகளுக்கு பொதுமக்கள் வருவதில்லை!

### அதனாலேயே பரப்புரைக் கூட்டங்கள் நிறுத்தப்பட்டன என்கின்றார் விஜித்

கொழும்பு, ஜூலை 18
பொதுமக்கள் முன்னணியின் கூட்டங்களுக்கு மக்கள் வராத காரணத்தினால், கொரோனா பரவலைக் காரணம்காட்டி தனது தேர்தல் பரப்புரைக் கூட்டங்களை அந்தக் கட்சி நிறுத்தியுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட வேட்பாளர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்தார்.
கம்பஹாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார் அவர். அவர் மேலும் தெரிவித்ததாவது:
இது நெருப்பும், குளிரும் போன்றது. கொரோனாவை பயன்படுத்தி அலையைத் தடுக்க முயற்சித்து வருகின்றனர். அதிகாரம் இன்மை, அதிகாரத்தை இழந்து வருவது, கூட்டங்களில் மக்கள் இல்லை. இவற்றை மறைக்க முயற்சித்து வருகின்றனர். கூட்டங்களை நிறுத்துமாறு கூறினர். கோத்தாபய ராஜபக்ச கண்டிக்கு சென்றிருந்தார், அந்தக் கூட்டத்தில் மக்கள் இருக்கவில்லை. தற்போது இவர்கள் மீது நாட்டு மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர் - என்றார். (ம)

## ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்களை வளைத்துப்போட மொட்டு அணி வியூகம்!

### பச்சை ஒளி அமைப்பும் உருவாக்கம்

**கொழும்பு, ஜூலை 18**
**ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாக பிளவுபட்டுள்ள நிலையில் அந்தக் கட்சியின் ஆதரவாளர்களை தம்பக்கம் வளைத்துப் போடும் முயற்சியில் இறங்கியுள்ள பொதுமக்கள் முன்னணி, இதற்காக 'பச்சை ஒளி' (கொல எலிய) எனும் அமைப்பையும் உருவாக்கியுள்ளது.**

பொதுமக்கள் முன்னணியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போது அந்தக் கட்சியின் உறுப்பினரான லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன இந்தத் தகவலை வெளியிட்டார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
'ஐக்கிய தேசியக்கட்சி இரண்டாகப் பிளவுபட்டதன் பயனாக அக்கட்சியின் ஆதரவாளர்கள் பலர் எம்முடன் இணைந்துவருகின்றனர். மாவட்ட மட்டத்திலும் இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பரந்தப்பட்ட கூட்டணி அமைத்து பொது மக்கள் முன்னணி அழைப்பு விடுத்ததால் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அவர்களை நாம் பாதுகாப்போம். தற்போது 'கொல எலிய' (பச்சை ஒளி) எனும் அமைப்பை உருவாக்கியுள்ளோம். ஐக்கிய தேசியக்கட்சியின் அடிமட்ட தொண்டர்கள் பலர் இவ்வமைப்பில் இணைந்துள்ளனர். ஏனையோருக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.
அதேவேளை, புதிய கருத்து கணிப்பின் பிரகாரம் 139 ஆசனங்களை நாம் வெல்வது தற்போது உறுதியாகியுள்ளது. இனிவரும் நாட்களில் நிலைமைமாறும். எனவே, மூன்றிலிரண்டுக்கு அப்பால் பெறுவோம்' - என்றார். (ம-44)



## பிரசன்னவின் சகோதரரின் செயலர் போதை வர்த்தகத்துடன் தொடர்பு!

### தயாசிறி தன்னிடம் தெரிவித்தாரென ரஞ்சன் ராமநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 18
அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் தனிப்பட்ட செயலாளரின் சகோதரர் போதைப் பொருள் வியாபாரத்துடன் நேரடியாக சம்பந்தப்பட்டுள்ளார் என்று ஆளும் கட்சியைச் சேர்ந்த தயாசிறி ஜயசேகர தன்னிடம் தெரிவித்தார் என்று ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் வேட்பாளர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.
வழக்கு விசாரணை ஒன்றில் முன்னிலையாகுவதற்காக நேற்றுமுன்தினம் நீதிமன்றத்திற்குச் சென்றிருந்தபோது அங்கு செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தயாசிறி ஜயசேகர, பிரசன்ன ரணதுங்கவைப் பற்றியே கூறினார். கம்பஹா மாவட்டத்தில் வயிறு பெருத்த, உடல் பெருத்த, தலையில்லாத ஒருவர் எனக் கூறினார். பிரசன்ன ரணதுங்கவை பற்றியே அவர் இப்படி கூறியுள்ளார். டயில் சமிந்த என்பவர் பிரசன்ன ரணதுங்கவின் தனிப்பட்ட செயலாளரின் தம்பி. பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பணியகத்தின் 16 பேருடன் இணைந்து ஹெரோய்ன் போதைப் பொருளை விற்பனை செய்த சம்பவம் தொடர்பாக டயில் சமிந்தவே சிக்கியுள்ளார்.
இவர்கள் இணைந்து போதைப் பொருளை விற்பனை செய்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. பிரசன்ன ரணதுங்க போதைப்பொருள் விற்பனையுடன் சம்பந்தப்பட்டுள்ளமை உறுதியானது என்றே தயாசிறி ஜயசேகர கூறுகிறார். குறித்த நபர் போதைப்பொருள் விற்பனையுடன் சம்பந்தப்பட்டவர் என்பது அந்த காலத்தில் இருந்தே தெரிந்த ஒரு விடயம். அப்படியானால் ஏன் அவரை தனது தனிப்பட்ட செயலாளராக பிரசன்ன ரணதுங்க வைத்துள்ளார் - என்றார். (ம)

## வாகனங்கள் விபத்து தப்பினர் சாரதிகள்!

வவுனியா, ஜூலை 18
வவுனியாவில் மின்சார சபை வாகனத்துடன் மீன் ஏற்றிவந்த வாகனம் விபத்துக்குள்ளாகியது. எனினும் சாரதிகள் இருவரும் சிறு உராய்வுக் காயங்களுடன் தப்பினர்.
வவுனியா - கண்டி வீதியில் பழைய பேருந்து நிலையத்திற்கு அருகே நேற்று இரவு 8 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.
கண்டி வீதியூடாக வவுனியா நோக்கி பயணித்த இலங்கை மின்சாரசபையின் வாகனம் இரண்டாம் குறுக்குத்தெரு வீதிக்கு திரும்ப முற்பட்ட சமயத்தில் கண்டி வீதியூடாக தென்பகுதி நோக்கி மீன் ஏற்றிச் சென்ற வாகனத்துடன் மோதியது.
வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர். (ம-18)

### யாழ்ப்பாணத்தில்

## தேர்தல் கடமைகளுக்காக 795வாகனங்கள் பணியில்

யாழ்ப்பாணம், ஜூலை 18
யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் கடமைகளுக்காக 795 வாகனங்கள் போக்குவரத்துப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளன என்று யாழ் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலக தகவல்கள் தெரிவிக்கின்றன.
தேர்தல் நடவடிக்கைகளுக்காக 508 வாக்குச் சாவடிகளுக்கும் மற்றும் தேர்தல் கடமைகளில் ஈடுபட்டுள்ள விசேட பிரிவுகளுக்குமாக 795 வாகனங்களும் பயன்படுத்தப்படவுள்ளன. இதற்கென யாழ் மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்களுக்கு சொந்தமான வாகனங்கள் 145, இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் வண்டிகள் 53, தனியார் மினி பஸ்கள் 120, உள்ளடங்களாக மொத்தம் 795 வாகனங்கள் பயன்படுத்தப்படவுள்ளன. (ம)

## நிர்மாணத்துறையுடைய புரட்சிக்கு பொறியியலாளர்களுக்கு அழைப்பு

### ஜனாதிபதி கோத்தாபய விடுத்தார்

நகர மற்றும் கிராம மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் நிர்மாணத்துறையில் புரட்சியை ஏற்படுத்த ஒன்றிணையுமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உள்நாட்டு பொறியியலாளர்களுக்கு அழைப்பு விடுத்தார்.
இது தொடர்பில் ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:
'குடிப்பதற்கும் பயிர்ச் செய்கைக்கும் நீரைப் பெற்றுக்கொள்வதில் உள்ள தடைகள் காரணமாக நாடு முழுவதும் பல பிரதேசங்களில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். குளங்கள் மற்றும் நீர்ப்பாசனக் கட்டமைப்புகள் பாதிக்கப்பட்டுள்ளன. கிராமிய வீதிக் கட்டமைப்பின் அபிவிருத்தியும் துரிதப்படுத்தப்பட வேண்டும். மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியாத திருப்பின் அபிவிருத்தித்திட்டங்களில் எந்தப் பயனும் இல்லை. அவ்வாறே அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியாதிருப்பின் பல எதிர்பார்ப்புகளுடன் ஜனாதிபதியாக பதவியேற்ற என்னாலும், நாட்டு மக்களுக்கு எந்தப் பயனும் இல்லை என்று இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தின் அங்கத்தவர்களுடன் நேற்று பிற்பகல் (நேற்றுமுன்தினம்) ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி குறிப்பிட்டார்.
பல வருடங்களாக அபிவிருத்தித் திட்டங்களை வரைதல் முதல் நிர்மாணப் பணிகளை கண்காணிப்பு செய்தல் மற்றும் நிர்மாணங்களை மேற்கொள்ளுதல் போன்ற அத்தனை விடயங்களும் வெளிநாட்டு பொறியியலாளர்களினாலேயே மேற்கொள்ளப்பட்டது. அவர்கள் தலைமை வகித்த செயற்திட்டங்களில் மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படவில்லை. வெளிநாடுகளிலிருந்து வருகை தந்து செயற்திட்டங்களை முன்னெடுக்கும் கலாசாரத்தை நிறுத்த வேண்டுமென்றும், எதிர்கால அபிவிருத்தி வேலைத்திட்டங்களை உள்நாட்டு பொறியியலாளர்களிடமும் நிறுவனங்களிடமும் ஒப்படைப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.
பயங்கரவாதத்திலிருந்து நாட்டை மீட்டெடுப்பதில் இளைஞர்களின் மீது நம்பிக்கை வைக்கப்பட்டது. நிர்மாணத்துறையில் ஏற்படுத்த எதிர்பார்க்கும் புரட்சியிலும் உள்நாட்டு பொறியியலாளர்கள் மீது நம்பிக்கை வைப்பதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, வரலாற்றில் மிகச் சிறந்த பொறியியலாளர்கள் உருவாகிய யுகத்தை மீண்டும் உருவாக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார் என்றுள்ளது. (ம)

# தமிழ்க் கூட்டமைப்பிலிருந்து தமிழர்கள் விலகமாட்டார்கள்

## சத்தியலிங்கம் தெரிவிப்பு

மன்னார், ஜூலை 18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் கட்சி. அற்ப சொற்ப சலுகைகளுக்காகவும், சிலரின் அதிருப்தியான கருத்துக்களுக்காகவும் மக்கள் கூட்டமைப்பை விட்டு வெளியே செல்லமாட்டார்கள் இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட வேட்பாளரான ப.சத்தியலிங்கம்.

மன்னார் அடம்பன் பிள்ளையார் பிட்டிப்பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வன்னியில் ஒரு சிங்கள நாடாளுமன்ற உறுப்பினரை உருவாக்குவதற்காக அரசு படாதபாடு பட்டுக்கொண்டிருக்கின்றது. அதன் தொடர்ச்சியான நடவடிக்கைதான் பல சுயேட்சைக் குழுக்களின் களமிறக்கம். பிரதான கட்சிகளின் அளவுக்கு அவர்களும் பணத்தை வாரி இறைக்கின்றனர். அவர்களுக்கு இந்தப் பணம் எங்கிருந்து வந்தது. எல்லாம் அரசபணம். தமிழ்மக்களின்வாக்குகளைச் சிதறடித்து கூட்டமைப்பை பலம் இழக்கச் செய்வதுதான் இந்த வியூகத்தின் நோக்கம்.

எம்மால் முடிந்தளவு அபிவிருத்திகளையும் செய்துள்ளோம். அதேபோல் எமது தேசியத்தையும் காப்பாற்றியுள்ளோம். எனவே வருகின்ற நாடாளுமன்றத் தேர்தல் மிக முக்கியமானது. எமது பூர்வீக நிலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். எமது மக்களின் அடிப்படைப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். அதற்கு எமது மக்கள் ஒற்றுமையாக நிதானமாகச் சிந்தித்து செயற்பட வேண்டும். (ம-213)




# வன்னியில் கூட்டமைப்பு பின்னடைவைச் சந்திக்கும்

## பிரபா கணேசன் தெரிவிப்பு

வவுனியா, ஜூலை 18

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கடும் வீழ்ச்சியே கிட்டும் என்று தெரிவித்தார் முன்னாள் பிரதி அமைச்சரும், ஜனநாயக இடதுசாரி முன்னனியின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளருமான பிரபா கணேசன்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் பல வித்தியாசமான கருத்துக்களைக் கூறி வருகிறார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கி விடுதலைப் புலிகளை ஏளனமாக பேசுவதும் பின்பு அதனை திரும்பப்பெறுவது போன்று பேசுவதும் வழமையாகிவிட்டது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே குழம்பியுள்ளது. வேறு கட்சிகள் தமிழரசுக் கட்சியில் இணைந்து போட்டியிடுகின்ற போதும் அவர்களுக்குள் மோதல்கள் தொடர்வதைப் பார்க்க முடிகிறது. தமக்குள் ஒற்றுமையில்லாத இவர்கள் எதிர்காலத்தில் மக்களுக்கு என்ன செய்யப் போகிறார்கள்.

ஏற்கனவே மக்களின் வாக்குகளைப் பெற்ற காலத்திலும் எதுவுமே செய்யவில்லை. தற்போது மீண்டும் ஒரு சந்தர்ப்பம் தரவேண்டும் என கூறுகிறார்கள். திடமான கொள்கையுடன் இருப்பதாக கூறுகிறார்கள். இப்படியான வேடிக்கையான பேச்சுக்களைப் பார்த்து மக்கள் அவர்களை ஏளனமாக கருதுகிறார்கள்.

வன்னி மாவட்டத்தைப் பொறுத்தவரை பெரும் வீழ்ச்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இம்முறை பெறும். கிராமங்களுக்கு சென்று பார்க்கின்றபோது மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நிராகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உள்ளது தெரிகிறது. நாங்கள் செல்லும்போதுகூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருந்தால் உள்ளே வரவேண்டாம் என்கிறார்கள். அவ்வளது தூரம் மக்களின் மனங்கள் மாறியுள்ளன. இது ஒரு மாற்றத்தை நோக்கிய பயணமாகவுள்ளது. மாற்றம் வேண்டும் என மக்கள் துணிந்து விட்டதால் சென்ற முறையைவிட வாக்களிப்பு வீதம் அதிகரிக்கும். ஆகவே மக்கள் நேர்மையாக, ஊழலற்ற, மக்களுக்கு சேவையாற்றக் கூடிய நபர்களைத் தெரிவு செய்ய வேண்டும் - என்றார். (ம-18)

# போலிப் பிரகடனங்களையே ஐ.தே.க வெளியிட்டுள்ளது!

## யாப்பா தெரிவிப்பு

போலியான வாக்குறுதிகள் உள்ளடங்கிய கொள்கைப் பிரகடனத்தையே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க மக்கள் மத்தியில் முன்வைத்துள்ளார். ஜனாதிபதியின் சுபீட்சமான எதிர்கால கொள்கைத்திட்டமே பொதுமக்கள் முன்னணியின் பொதுத்தேர்தலுக்கான தேர்தல் விஞ்ஞாபனமாகும். புதிய கொள்கைத்திட்டங்களை வகுக்க வேண்டிய தேவை எமக்குக் கிடையாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க மக்கள் மத்தியில் வாக்குறுதி வழங்குவதில் துறைபோனவர். 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் 100 நாள் திட்டத்தை தேர்தல் விஞ்ஞாபனமாக வெளியிட்டார். ஆட்சிக் காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் ஏதும் நிறைவேற்றப்படவில்லை. மாறாக இருந்த பல உரிமைகளும் இல்லாதொழிக்கப்பட்டன.

நிறைவேற்ற முடியாத போலியான கொள்கைத்திட்டத்தையே முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க வெளியிட்டுள்ளார். இந்த வாக்குறுதிகளுக்கு மக்கள் இம்முறை ஏமாற்றமடையமாட்டார்கள். இடம்பெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்த கொள்கைப் பிரகடனம் நாட்டின் இறையாண்மைக்கு முரணானது என்ற காரணத்தினால் மக்கள் அக்கொள்கைகளை முழுமையாக புறக்கணித்தார்கள்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி தேர்தல் காலத்தில் வெளியிட்ட சுபீட்சமான எதிர்காலக் கொள்கையினை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். ஜனாதிபதியின் கொள்கைத்திட்டத்தை மக்கள் முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள். ஆகவே அவர் தலைமையில் அமையவுள்ள அரசாங்கத்துக்கு புதிதாக கொள்கைத்திட்டத்தை தயாரிக்க வேண்டிய அவசியம் கிடையாது.

கொரோனா வைரஸ் தாகக்கத்தைக் காரணம்காட்டி எதிர்த்தரப்பினர் அரசைப் பலவீனப்படுத்தி அதனூடாக பொதுத் தேர்தலைப் பிற்போட முயற்சிக்கிறார்கள். தேர்தல் சுகாதார பாதுகாப்பு அறிறுவுத்தல்களுக்கு மத்தியில் இடம் பெறவுள்ளது. தபால் மூல வாக்களிப்பில் எவ்வித குறைபாடுகளும் காணப்பட்டதாக இதுவரையில் அறிய முடியவில்லை. வாக்களிக்க வாக்காளர்கள் தயாராகவே உள்ளார்கள். போட்டியிட எதிர்தரப்பினர் தயார் இல்லை என்பதை அவர்கள் வெளிப்படுத்திக் கொள்கிறார்கள் - என்றார். (ம)



## கூட்டமைப்பு ஏக்கத்துடனேயே அரசுக்கு ஆதரவு கொடுத்தது

*முன்னாள் எம். பி. சித்தார்த்தன் தெரிவிப்பு*

வவுனியா, ஜூலை 18

தமிழ் மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளுக்கும் தமிழ் மக்களுடைய தேசியப் பிரச்சினைக்கும் ஒரு நியாயமான தீர்வைப் பெற முடியுமா என்ற ஏக்கத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகப்பெரிய ஆதரவை அரசுக்கு வழங்கியது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

வவுனியா கோவில்குளத்தில் உள்ள உமாமகேஸ்வரன் நினைவுத் தூபி வளாகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற புளொட் அமைப்பின் 31வது வீரமக்கள் தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கூட்டமைப்பு தீர்வு விடயத்திலே தவறு செய்துவிட்டதாக விமர்சனங்கள் வெளியிலே வைக்கப்படுகின்றன. இந்த விமர்சனங்கள் அரசியல் ரீதியானதே தவிர எந்த ரீதியாகவும் யதார்த்தமானதாகவோ அல்லது நியாயமானதாகவோ இல்லை. அவர்களைப் பொறுத்தவரை நாங்களும் வெளியே இருந்திருந்தால் இந்த விமர்சனங்களைச் செவி மடுக்காமல் இருந்திருக்கலாம். நியாயமான தீர்வைப் பெறவேண்டும் என்ற ரீதியிலே தமிழ் மக்கள் எங்கள் மீது ஒரு பொறுப்பைத் தந்து வாக்களித்திருந்தார்கள்.




ஆகவே பொறுப்பான கட்சியாக, நடக்க வேண்டியது எங்களது கடமையாகும். எனவே நாங்களாக இத்தீர்வு விடயத்தை குழப்பிவிட்டு தமிழ் மக்களை மிகப்பெரிய பின்னடைவுக்குள் தள்ளி விட முடியாது. அரசாங்கத்திற்கு வரவு செலவுத் திட்டத்திலே வாக்களித்தது தொடர்பாக விமர்சனங்கள் எழுகின்றன. வெறுமனே வாக்களித்திருந்தால் விமர்சனம் சரியாக இருக்கும். ரணில் விக்கிரமசிங்கவுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்காவிட்டால் அரசமைப்பில் மாற்றத்தைச் செய்யுங்கள் என்று சர்வதேசம் அழுத்தங்களை வழங்குகின்றபோது எம்மிடம் பெரும்பான்மை இல்லை என அவர் இலகுவில் பதில் சொல்லிவிடுவார். எனினும் கூட்ட மைப்பின் ஆதரவினால் அந்தப் பெரும்பான்மை கிடைத்தால் அதனை தீர்க்கவேண்டிய தேவையும் உருவாகும் என்ற நோக்கத்திற்காகவே அந்த ஆதரவை வழங்கினோமே தவிர எமக்கு வேறு எந்த இலாபமும் இல்லை - என்றார். (ப-110)

---

## இலங்கை பௌத்த நாடு!

# எங்கு வேண்டுமென்றாலும் அரசு ராணுவ முகாம்களை அமைக்கலாம்

*இ.தொ.கா. நிதிச் செயலர் இறுமாப்பு*

கொழும்பு, ஜூலை 18

**இலங்கை என்பது பௌத்த நாடு. இங்கு எங்குவேண்டுமானாலும் இராணுவ முகாம்களை அமைக்கலாம் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலாளரும்,ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான மருதபாண்டி ரமேஷ்வரன் தெரிவித்தார்.**

கொட்டகலையில் இராணுவ முகாமொன்று அமைக்கப்படவுள்ளது என தமிழ் முற்போக்குக் கூட்டணியால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுத் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தேர்தலின்போது கடந்த காலங்களில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸையும், ஆறுமுகன் தொண்டமானையும் விமர்சித்துதான் சிலர் அரசியல் செய்தனர். இன்று தலைவர் மறைந்துவிட்டார். எனவே, எதையாவதுகூறி அரசியல் நடத்தவேண்டும் என்பதற்காகவே கொட்டகலையில் இராணுவ முகாம் அமையவுள்ளது என்ற விடயத்தைக் கூறிவருகின்றனர். இது ஒரு பௌத்த நாடு. எவ்வித வேறுபாடுமின்றி அனைத்து இன மக்களும் இங்கு ஒற்றுமையாக வாழ்கின்றோம். இந்த நாட்டில் எங்கு வேண்டுமானாலும் இராணுவ முகாம்களை, பொலிஸ் நிலையங்களை அமைக்கலாம். கொட்டகலைப் பகுதியில் ஏதேனும் அனர்த்தம் ஏற்படும்பட்சத்தில் நுவரெலியாவில் இருந்தும், லக்ஷபான பகுதியில் இருந்துமே வந்து இராணுவத்தினர் செயற்படுகின்றனர். கொட்டகலைப் பகுதியில்தான் அண்மைக் காலமாகக் கூடுதல் அனர்த்தங்கள் இடம்பெற்றன. அதேபோல் கொவிட் 19 பிரச்சினையும் இருக்கின்றது. எனவேதான் தற்காலிக முகாமொன்று அமைக்கப்பட்டுள்ளது. இதனையே அரசியல் தேவைகளுக்காகச் சிலர் விமர்சிக்கின்றனர். சில அரசியல்வாதிகள் தமிழில் ஒன்றையும் சிங்களத்தில் வேறொன்றையும் பேசுகின்றனர் - என்றார். (ப)

---

## தமிழ்த் தேசியத்தில் தீவகத்தின் வகிபாகம்

*இன்று சிறப்புரை*

யாழ்ப்பாணம், ஜூலை 18

தமிழ்த் தேசியத்தில் தீவகத்தின் வகிபாகம் எனும் பொருளிலான சிறப்புரை ஒன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா தலைமையில் இன்று மாலை 3 மணிக்கு 282 , அரசடி வீதி , கந்தர்மடத்தில் இடம்பெறவுள்ளது. இதில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா கலந்துகொண்டு சிறப்புரையாற்றவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

---

## வாக்களிப்பை ஒளிப்படம் எடுத்து வெளியிட்டவருக்கு விசாரணை

*புதுக்குடியிருப்பில் சம்பவம்*

முல்லைத்தீவு, ஜூலை 18

வாக்களிப்பை ஒளிப்படம் எடுத்து, அதை சமூகவலைத்தளத்தில் வெளியிட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு ஒருவர் பொலிஸாரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு வாக்களிப்பைப் படம் எடுத்து வெளிப்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும் என்று முல்லைத்தீவு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் க.காந்தீபன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இடம்பெற்ற தபால் மூல வாக்களிப்பையே குறித்த நபர் ஒளிப்படம் எடுத்துள்ளார். அவர் பொலிஸாரால் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் க.காந்தீபன் தெரிவித்ததாவது;

அரச உத்தியோகத்தர்களுக்கான தபால்மூல வாக்குப்பதிவுகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரச உத்தியோகத்தர்களுக்கான தபால்மூல வாக்களிப்பை படம் எடுத்து வேறு ஒரு நபர் சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார். இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைவாக குறித்த ஒளிப்படத்தைப் பதிவேற்றியவர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தலின் போது வாக்காளர்கள் எக்காரணம் கொண்டும் ஒளிப்படம் எடுப்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதுடன் இது தேர்தல் விதிமுறையை அப்பட்டமாக மீறும் செயற்பாடாகும். வாக்காளர்களின் வாக்களிப்பின் இரகசியத்தன்மை பேணப்படவேண்டும். இதனை வெளிப்படுத்துவது வாக்களிப்பின் நோக்கத்தை இல்லாமல் செய்யும் நோக்கமாகக் கருதப்பட்டு சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும் - என்றார். (ப-19)

---

## 13ஆவது திருத்தம் ஒருபோதும் ஒழிக்கப்படமாட்டாது

*பிரபா கணேசன் கூறுகின்றார்*

முல்லைத்தீவு, ஜூலை 18

13 ஆவது திருத்தச்சட்டம் இல்லாதாக்கப்படும் என்று கூட்டமைப்பின் வேட்பாளர்கள் சொல்லி வருகின்றார்கள். அது ஒரு போதும் ஒழிக்கப்படமாட்டாது என்று பிரதமர் தெளிவாக எடுத்துரைத்துள்ளார் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் வேட்பாளர் பிரபா கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

வன்னியில் பிரபாகணேசனுக்கு இருக்கின்ற மக்கள் செல்வாக்கைச் சகித்துக்கொள்ள முடியாமல் அனைத்துக் கட்சியினரும் எனக்கு எதிராகத் தேவையில்லாப் பிரசாரங் களை முன்னெடுத்து வருகின்றார்கள். கொழும்பிலிருந்து வந்தவன் என்ற குற்றச்சாட்டை வைக்கின்றார்கள். கடந்த மூன்றரை ஆண்டுகளாக நான் வன்னியில் இருக்கின்றேன். வன்னியில் இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கணக்கிட்டுப் பார்த்தால் அவர்கள் கொழும்பில்தன் அதிகம் இருந்துள்ளார்கள். வன்னி மக்கள் சுவர்க் கடிகாரச் சின்னத் துக்கு வாக்களிக்கத் தயாராக இருக்கின்றார்கள். மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று இந்த அரசு 13, 19 ஆவது திருத்தச் சட்டத்தையும் ஒழித்து விடுவார்கள் எங்களுக்கு மீண்டும் ஆணையைத் தாருங்கள் என்று கூட்டமைப்பு கேட்கின்றார்கள். 13 ஆவது திருத்தச்சட்டம் ஒரு போதும் ஒழிக்கப்படமாட்டாது என்று பிரதமர் தெளிவாகச் சொல்லியுள்ளார்.

கூட்டமைப்பினர் மக்கள் மத்தியில் அதையாவது சொல்லி வாக்கைக் கேட்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். கடந்த நல்லாட்சி காலத்தில் பல விடயங்களை மக்களுக்குச் செய்யக்கூடியதாக இருந்தும் கூட எதனையும் செய்யாமல் ரணில் விக்கிரமசிங்கவையும், ஐக்கிய தேசியக் கட்சியையும் காப்பாற்றுவதில் மட்டும்தான் மும்முரமாக இருந்தார்கள் மக்களுக்கு வேறு எதனையும் செய்யவில்லை - என்றார். (ப-19)

# கூட்டமைப்பு என்ற கூட்டை எவராலும் உடைக்க முடியாது

## முன்னாள் எம்.பியும் கூட்டமைப்பின் வேட்பாளருமான ஈ.சரவணபவன் பெருமிதம்



யாழ்ப்பாணம், ஜூலை 18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு கூடு. இந்தக் கூட்டை எவராலும் உடைக்கவோ அழிக்கவோ முடியாது. அழிக்க முற்பட்டவர்கள் எல்லாரும் அழிந்து போனமையே வரலாறு. - இவ்வாறு கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், ஆவரங்கால் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

எமது தாயகப் பிரதேசம் சிங்களப்பேரினவாதிகளாலும் அவர்களது கொந்துராத்துக்காரர்களாலும் கொஞ்சம் கொஞ்சமாகச் சூறையாடப்படுகிறது. நல்லூரைத் தம் ஊர் எனச் சொந்தம் கொண்டாட முயல்பவர்கள், கந்தரோடைக்கும் ஒரு கதையைக் கூறிக்கொண்டு வருவார்கள், எனவே நாங்கள் எல்லாவற்றையும் எதிர்க்கத் தயாராக இருக்க வேண்டும்.

இந்த அரசு பேரினவாதிகளால் கட்டமைக்கப்பட்ட அரசு. எனவே பேரினவாதச் செயற்பாடுகள் தடை இன்றி இடம்பெற வழிவகுக்கப்பட்டுள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்குவங்கியை உடைக்க வேண்டும், தமிழர்களின் ஒற்றுமையைச் சீர்குலைக்க வேண்டும் என்பதில் சிங்கள தேசம் ஒற்றுமையாகவுள்ளது. ஆனால் நாம் தான் நமக்குள் முரண்பட்டு நிற்கிறோம். கூட்டமைப்பில் இருந்து நாம் யாரையும் கட்டாயப்படுத்தி வெளியேற்றியது கிடையாது. தாமாகவே அனைவரும் வெளியேறினர். முக்கியமாக மக்களால் நிராகரிக்கப்பட்ட வர் கள் மற்றும் கட்சிக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் தமது இருப்பு கேள்விக்குறியான துடன் வெளியேறினர். எனினும் வீடு எனும் இந்தக் கூட்டை விட்டு வெளியேறியவர்கள் வென்றனர் என்ற சரித்திரம் கிடையாது. இனி மேலும் அப்படி ஒரு சரித்திரம் உருவாகப் போவதுமில்லை. எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரிப்பதன் மூலம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் எமது மக்கள் சார்பாகப் பேரம் பேசும் சக்தியாக உருவாக முடியும் - என்றார். (ப)

# ஒரு வேட்பாளர் இரு கட்சிகளில் போட்டி?

## தெளிவுபடுத்துமாறு வாக்காளர் கோரிக்கை

இரத்தினபுரி, ஜூலை 18

இரத்தினபுரி மாவட்டத்தில் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் இரு கட்சிகளின் கீழ் தேர்தலில் போட்டியிடுகிறார் என அந்த மாவட்ட வாக்காளர்கள் தெரிவிக்கின்றனர்.

தபால் திணைக்களம் விநியோகித்த வாக்காளர் அட்டைகளுடன் வழங்கப்பட்ட தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் கட்சிகளின் விவரங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரத்தில் அந்த வேட்பாளரின் பெயர் இரண்டு கட்சிகளில் இருப்பதைக் காண முடிந்துள்ளது.

இதனடிப்படையில் ஐக்கிய தேசிய மக்கள் சக்தி கூட்டணியில் 3 ஆம் இலக்கத்திலும், ஜனசெத பெரமுன வின் சார்பில் 2 ஆம் இலக்கத்திலும் ஒருவரே போட்டியிடுகிறார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தேர்தல் ஆணைக்குழு உடனடியாகத் தேடி அறிந்து, அவர் ஒரு வேட்பாளரா அல்லது இரண்டு பேரா என்பதை வாக்காளர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்று அவர்கள் கேட்டுள்ளனர். (ஐ)

# முன்னாள் எம்.பிக்களை மக்கள் நிராகரிக்கவேண்டும்

## சுயேச்சை வேட்பாளர்கள் இருவர் இப்படிக் கோருகின்றனர்

யாழ்ப்பாணம், ஜூலை 18

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களை மக்கள் நிராகரிக்க வேண்டும் எமக்கு எம்.பி தேவையில்லை. நாம் வென்றால், வெல்ல வைத்தால் மக்களுக்காகச் செயற்படுவோம் என சுயேச்சை வேட்பாளர்களான பொன் சுபாஷ் சிங்கம் மற்றும் தமிழ்ச்செல்வன் ஆகியோர் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

ஆரம்பத்தில் நாம் ஒரு கட்சியாக இயங்கி இருந்தோம். தேசிய ஜனநாயக மக்கள் முன்னணி என்ற கட்சியாகத் தொடர்ந்து ஜனாதிபதித் தேர்தலில் எமது கட்சி சிங்கள தேசத்தில் தமிழ் மக்களுக்காக இயங்கக் கூடியவர்களை ஒன்று சேர்த்து தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டது. எங்களது கட்சி பதிவு செய்யாததால் சுயேச்சையாக முன் வந்தோம். சமூக சேவையாளர்கள், பட்டதாரிகள், முன்னாள் போராளிகள் ஆகியோரை இணைத்து தேர்தலில் இறங்கி உள்ளோம்

எங்கள் மக்கள் காலம் காலமாக ஏமாற்றப்பட்டு வருவகின்றமையை பிரதேசங்களில் பிரசார நடவடிக்கைகளின் போது மக்களே முறையிடுகின்றனர் - என்றார். (ப)

# பத்தில் ஒன்றாக எம்மை நினைக்க வேண்டாம்

## டக்ளஸ் தெரிவிப்பு

வவுனியா, ஜூலை 18

கடந்த காலத்தில் பலருக்கு வாக்களித்திருப்பீர்கள் அதன் மூலம் பலத்த ஏமாற்றம் உங்களுக்கு இருந்திருக்கும். எனினும் பத்தில் ஒன்றாக எம்மை நினைக்க வேண்டாம் என்று கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

தேர்தல் காலத்தில் உங்களுடைய வாக்குகளை அபகரிப்பதற்காகப் பலர் வருவார்கள். வாக்குகளை அபகரிப்பதுதான் அவர்களின் நோக்கம். நாங்கள் எதைச் சொல்லுகின்றோமோ அதைச் செய்கின்றவர்கள். செய்கின்றதையே சொல்லுகின்றவர்கள். அந்தவகையில் நீண்ட காலத்திற்குப் பிறகு நான் இங்கு வந்திருக்கின்றேன். இனிவரும் காலங்களில் நீங்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினை களுக்கு நிச்சயம் தீர்வு காண்போம்.




உங்களது பிரதேச சபை தொடர்பாகத் தெரிவித்திருந்தீர்கள் அந்தப் பிரதேச சபையை நீங்கள் வாக்களித்து தெரிவு செய்திருப்பீர்கள் என நினைக்கின்றேன். எனவே நீங்கள் வாக்களித்து தெரிவு செய்தவர்கள் உங்களது பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க வேண்டும். ஆனால் அவர்கள் உங்களது பிரச்சினை களைத் தீர்க்கவில்லை. கடந்த காலத்தில் பலருக்கு வாக்களித்திருப்பீர்கள் அதன் மூலம் பலத்த ஏமாற்றம் உங்களுக்கு இருந்திருக்கும். பத்தில் ஒன்றாக எம்மை நினைக்க வேண்டாம். நாம் அதில் இருந்து வேறுபட்டவர்களாக மக்களின் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையில் அணுகுவதுதான் ஈபிடிபியின் வரலாறு - என்றார். (ப-110)

# நாட்டை அபிவிருத்தி செய்யும் அரசென்றால் அது பெரமுனவே

## இப்படித் தெரிவித்தார் கனகர்

முல்லைத்தீவு, ஜூலை 18

எமது நாட்டை அபிவிருத்தி செய்யும் அரசு என்றால் அது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியே என்று முல்லைத்தீவு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ச.கனகரத்தினம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்த அரசாங்கம் நீண்டகாலமாக அபிவிருத்திகளைச் செய்து கொடுத்துள்ளது. மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் நூறுவீதம் மின்சாரத்தைக் கொண்டுவந்து கொடுத்தார். பிரதானமான கட்டடங்கள் எல்லாம் அவர் காலத்தில்தான் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அபிவிருத்தி செய்யக்கூடிய கட்சி எது என்று பார்த்தால் அது பொதுஜன பெரமுன கட்சி தான் கோத்தபாய ராஜபக்ச ஜனாதிபதியாக வந்ததுடன் ஒரு கிராம அலுவலர் பிரிவில் இருபது இலட்சம் ரூபா என்று முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 27 கோடி ரூபா நிதியை ஒதுக்கியுள்ளார். இந்த அரசாங்கம் அமைந்தால் ஆட்சி நிலைக்கும். நீண்டகாலம் மக்கள் அபிவிருத்தியைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். இந்த அரசினர் தான் அபிவிருத்தியைத் தருவார்கள் வேலைவாய்ப்பைத் தருவார்கள். மக்களுக்கான அபிவிருத்தியைச் செய்யக்கூடிய தகுதியுள்ள அரசை சேர்ந்தவர்களுடன் நிற்பது எங்கள் அபிவிருத்தியை நோக்கியே தவிர எங்கள் தனிப்பட்ட தேவைக்காக அல்ல - என்றார். (ப-19)

# அரச ஊடகங்களில் அரசுக்கே முதலிடம்

## கண்டிக்கிறது சஜித் அணி

கொழும்பு, ஜூலை 18
அரச ஊடகங்கள் அரசுக்கே முதலிடம் கொடுத்து செயற்பட்டு வருகின்றன. பிரதான எதிர்க்கட்சியான தங்களுக்கு வழங்கும் காலத்தையும்விட, ஐக்கிய தேசியக் கட்சிக்கு அதிகமான நேரத்தை ஒதுக்கி கொடுப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளர் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது ஏன்? அவர் நித்திரையிலா இருக்கின்றார்? என்றும் மத்தும பண்டார கேள்வி எழுப்பினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கோத்தாபய ராஜபக்சவின் அரசு ஆட்சிக்கு வந்து எட்டு மாதங்கள் கடந்துள்ள நிலையில் , 'எந்தவித செயற்றிறனும் இல்லாத அரசு' என்ற பெயரைப் பெற்றுக் கொண்டுள்ளது.

பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு நெருக்கடியைத் தோற்றுவிக்கும் வகையில் மின் கட்டண தொகை விவரத்தை வெளியிட்டு மின் விநியோகத்தை துண்டிக்க முயற்சித்து வருகின்றது. அரச அலுவலர்களுக்கும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

இராணுவத்தினரையும் அங்கவீனமடைந்துள்ள இராணுவத்தினரையும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுத்தி அதன் மூலம் ஆட்சியைக் கைப்பற்றிய அரசு தங்கள் ஆட்சியில் அவர்களின் வேண்டுகோள்களை நிறைவேற்றியுள்ளாதா?

தபால் மூல வாக்களிப்புகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இந்தநிலையில் பொலிஸாரும், இராணுவத்தினரும் வாக்களிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

பொலிஸாரின் ஊதியத்திலும் கை வைத்துள்ள அரசுக்கு பொலிஸார் உரிய பதிலடி வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம். அரசின் செயற்பாடுகள் முறையற்றதாக இருக்கின்றன. வாழ்வதற்கான உரிமையையும் ஜனநாயகத்தையும் மக்கள் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்- என்றார். (த)

# நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஊடாக தீர்வுத் திட்டங்கள் நடைமுறைக்கு வரும்

## குறிப்பிடுகின்றது ஐக்கிய தேசியக் கட்சி

**கொழும்பு, ஜூலை 18**
**தேசிய இனப்பிரச்சினைக்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஊடாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் தீர்வுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி, இந்து சமுத்திரத்தின் போக்குவரத்து சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான முன்னோடிப் பணிக்கு இலங்கையை தலைமைதாங்க வைப்பதுடன் ஐ.நா உள்ளிட்ட எந்தவொரு அமைப்பிலிருந்தும் விலகாமலும் அணிசாரா கொள்கையைப் பாதுகாத்தும் செயற்படுவதாக அறிவித்துள்ளது.**

பொதுத்தேர்தலை முன்னிட்டு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்டுள்ள கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:

நாடாளுமன்றத் தேர்தலுக்கு இன்னமும் சில வாரங்களே உள்ளன. அரசு அனைத்தையும் கொரோனா தொற்றின் மீது சுமத்தி தப்பிக்கும் தந்திரோபாயத்தில் ஈடுபட்டுள்ளது. வெளிநாட்டு அந்நிய செலாவணி படிப்படியாகக் கரைந்து செல்கின்றது. இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதாகக் கூறி 450 பில்லியன் ரூபா பெறுமதியான நாணயத்தாள்களை தேசிய பொருளாதாரத்தில் புழக்கத்தில் விடுவதற்கு அரசு செயற்பட்டதன் பிரதிபலனாக நெருக்கடிகளே மேலும் அதிகரித்துள்ளன.

கொரோனா இரண்டாம் அலை பரவினால் மீண்டும் பொருளாதார வீழ்ச்சி ஏற்படும். சர்வதேசத்தின் ஒத்துழைப்பை வென்றெடுக்க வேண்டும். தனிப்பட்ட அரசாக செயற்பட்டு இந்தச் சவாலை வெற்றிகொள்ள முடியாது. அதற்காக ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் சுதந்திரம் போன்றவை 100 வீதம் பாதுகாக்கப்படல் வேண்டும். வெளிநாட்டு வருமானங்களின் மூலம் நாட்டுக்குக் கிடைக்கும் 700 கோடி அமெரிக்க டொலர் வருவாயை நாம் இந்த வருடம் இழக்கக்கூடும். கடன் மற்றும் சேவைகளுக்காக இந்த வருடம் 500கோடி அமெரிக்க டொலரைச் செலுத்த வேண்டியேற்படும்.

இதனால் அடுத்த இரண்டு வருடங்களில் 600 கோடி அமெரிக்க டொலரை தேசிய பொருளாதாரத்துக்கு சேர்க்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி மதிப்பிட்டுள்ளது. அடுத்த வருடத்தில் குறைந்த பட்சம் 300 கோடி அமெரிக்க டொலர் தேவைப்படும்.

இலங்கையால் எந்தவொரு சர்வதேச ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்வதற்கு இதுவரை முடியாது போயுள்ளது. நாட்டை ஆட்சி செய்யும் ஆட்சியாளர்களிடம் பொருளாதாரக் கொள்கைகளோ அல்லது திட்டங்களோ இல்லாததன் காரணமாக தெளிவற்ற நிர்வாக முறைமையால் சர்வதேசத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளோம்.

நாடுகளுடன் பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான திட்டமொன்றை நாம் நடைமுறைப் படுத்துவோம். என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (த)




# மத்திய கொழும்பு ஐ.தே.க. வசமே!

## கொழும்பு மாநகரசபை உறுப்பினர் எம்.ஏ. ஷரப்தீன் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 18
அரசு.கொரானாவுடன் அரசியல் செய்வதை நிறுத்திவிட்டு மக்களின் உயிர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன் எத்தனை கட்சிகள் உருவானாலும் மத்திய கொழும்பை ஐக்கிய தேசிய கட்சியே வெற்றிகொள்ளும் இவ்வாறு கொழும்பு மாநகரசபை உறுப்பினர் எம்.ஏ. ஷரப்தீன் தெரிவித்தார்.

கொழும்பு மாநகரசபை ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொழும்பு மாநகரசபை ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் 60 பேரில் 53 பேர் ஐக்கிய தேசியக் கட்சிக்கே ஆதரவளிக்கின்றனர். மீதிப் பேர் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்து சென்று புதிய கட்சி அமைத்திருப்பவர்களுடன் இணைந்து கொண்டுள்ளனர். அவர்களுக்கெதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவர்களை கட்சியில் இருந்து நீக்கிவிட்டு, அவர்களின் இடங்களுக்கு புதிய உறுப்பினர்களை தெரிவுசெய்யுமாறு கட்சித் தலைவருக்கு தெரிவித்திருக்கின்றோம்.

துரோகிகளுக்கு மத்திய கொழும்பு மக்கள் பொதுத் தேர்தலில் சிறந்த பாடத்தைப் புகட்டுவார்கள். மத்திய கொழும்பின் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஐக்கிய தேசிய கட்சியின் அதிகாரத்தில் இருக்கும் கொழும்பு மாநகரசபையே மேற்கொண்டுவருகின்றது.

அத்துடன் கொரானோ வைரஸ் அச்சுறுத்தலுக்கு மத்தியிலே தேர்தல் இடம்பெறுகின்றது. அரசாங்கம் கொரானோ வைரஸ் தொடர்பான உண்மைத் தகவல்களை மக்களுக்கு மறைக்கின்றதா என்ற சந்தேகம் எமக்கு இருக்கின்றது.

வேட்புமனுத் தாக்கல் செய்யும்வரை நாட்டை முடக்காமல் இருந்த ஜனாதிபதி, வேட்புமனு நிறைவடைந்த மறுதினமே நாட்டை முடக்கினார்.

அதேபோன்று விமான நிலையத்தை மூடிவிட்டு நாட்டைப் பாதுகாக்குமாறு சுகாதார துறையினர் தெரிவித்தும் ஜனாதிபதி அதனைக் கண்டுகொள்ளாமல் இருந்துவிட்டு, கொரானோ நோயாளர்கள் இனம் காணப்பட்ட பின்னரே விமான நிலையத்தை மூடிவிடத் தீர்மானித்தார். அரசாங்கத்தின் பொறுப்பற்ற நடவடிக்கை காரணமாகவே நாட்டில் கொரானோ தொற்றாளர்கள் அதிகரிக்க நேர்ந்தது. அதனால் அரசாங்கம் கொரானோத்வுடன் அரசியல் செய்து, மனித உயிர்களுடன் விளையாடா மல் மக்களைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் -என்றார். (ஐ)

# மொட்டுச் சின்னத்துக்கே மக்கள் அதிக ஆதரவு

## ரொஷான் ரணசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 18
நாடாளுமன்றத்துக்கு பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களை அதிகமாக உள்வாங்குவதே எமது பிரதான எதிர்பார்ப்பு என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

பொலன்னறுவை பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை நம்பி பொதுஜன பெரமுன பொதுத்தேர்தலில் களமிறங்கவில்லை.

கூட்டணியமைத்திருந்தாலும் இரு தரப்புக்களின் கொள்கைகளும் வேறுப்பட்டவையாகவே உள்ளன.

பெரும்பான்மையின மக்கள் மொட்டுச் சின்னத்துக்கே அதிகமான ஆதரவை வழங்குவார்கள்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி 2015ஆம் ஆண்டு அரசியல் ரீதியில் ஏற்படுத்திய மாற்றங்களினால் பொதுஜன பெரமுனவை தனித்து உருவாக்கினோம். இரண்டு பிரதான அரசியல் கட்சிகளுக்கும் சவால் விடுக்கும் விதத்தில் பொதுஜன பெரமுன மக்களாணையை 2018 ஆம் ஆண்டு தொடக்கம் பெற்று வருகிறது. இடம்பெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் எமது வெற்றி மேலும் உறுதிப்படுத்தப்பட்டது.

சுதந்திரக் கட்சியினால்தான் பொதுஜன பெரமுன ஜனாதிபதி தேர்தலில் வெற்றிப் பெற்றது என்று சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் குறிப்பிட்டு வருவது தவறானதாகும். சுதந்திரக் கட்சியினரது ஆதரவு இல்லாமல் 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றோம். ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுஜன பெரமுன தனித்து போட்டியிட வேண்டும் என பெரும்பாலான மக்கள் கோரிக்கை முன்வைத்தார்கள்.

பொதுத்தேர்தலுக்கு பின்னர் சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தின் பொறுப்பை பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஒருபோதும் ஏற்க மாட்டார். பொதுஜன பெரமுனவே புதிய அரசாங்கத்தில் பலமான ஆட்சியை அமைக்கும்-என்றார். (ஐ)

# போராட்டத்தை நசுக்கியது போன்றே கூட்டமைப்பை உடைக்கவும் முயற்சி

## முன்னாள் எம்.பி. செல்வம் காட்டம்

**மன்னார், ஜூலை 18**

**ஆயுதப் போராட்டத்தை மௌனிப்பதற்காக உலக நாடுகளோடு சேர்ந்து எந்தச் சதியைச் செய்தார்களோ, அதே போல இந்த ஆயுதப் போராட்டத்தின் எழுச்சியிலே உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்து நாசம் செய்வதற்கான திட்டத்தை பல நபர்களை களம் இறக்கிச் செய்துகொண்டிருக்கின்றனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், வேட்பாளருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

தேர்தல் முடிந்தவுடன் புதிதாக முளைத்த சுயேச்சைக்குழுக்கள் எல்லாம் எங்கே போனது என்று தெரியாது காணாமல் போய் விடும். விக்னேஸ்வரனும் காணாமல் போய் விடுவார். யாரையும் தாக்கிக் கதைக்க வேண்டிய அவசியம் இல்லை. எமக்கு ஆதங்கம் உள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ மற்றும் இன்றைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ ஆகியோர் எப்படி கொத்துக் கொத்தாக எங்களுடைய மக்களைக் கொன்று குவித்தார்களோ அதே நிலைமைபோல அற்ப சொற்ப ஆசைகளுக்காக ஆசைப்படுகின்ற சுயேச்சைக் குழுக்களையும் ஏனையவர்களையும் இறக்கி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழிக்கின்ற போது உங்களுக்காக குரல் கொடுக்க, எங்களுக்காக தட்டிக்கேட்க யாருமே இருக்க மாட்டார்கள். மஹிந்த ராஜபக்ஷ சொல்வது போல் இந்த நாட்டிலே தமிழர்கள் என்று பூர்வீகம் இல்லை.

யாரும் வாழலாம் என்கின்ற அளவுக்கு எங்களுடைய வன்னி மாவட்டம் அனைத்து மக்களாலும் நிரப்பப்படும். சிங்கள மக்களால் நிரப்பப்படும்.

இந்த மண்ணை மீட்பதற்காக தம் உயிரைத் தந்தவர்கள் தமிழர்கள் என்று சொல்லுகின்ற வரலாற்றை அழிக்க நினைக்கின்றார்கள். அந்தச் சந்தர்ப்பத்தை தமிழர்களாகிய நாங்களும் சேர்ந்து செய்யப் போகிறோமா? என்பது தான் இன்றைய கேள்வியாக இருக்கிறது - என்றார். (ப-56)

# கொரோனா பரவல் தொடர்பில் வெளிப்படைத் தன்மை வேண்டும்

## கரு ஜயசூரிய வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 18

நாட்டில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துதல் மற்றும் கையாளுதல் ஆகிய விடயங்களில் அரசாங்கம் உயர்வான வெளிப்படைத் தன்மையைப் பேணவேண்டும் என்று முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளில் வெளிப் படைத்தன்மை இல்லை என்ற குற்றச்சாட்டு தற்போது பல்வேறு தரப்பினராலும் முன்வைக்கப் பட்டு வருகின்றது.

இது தொடர்பில் கரு ஜயசூரிய தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவிலே இவ்வாறு தெரிவித்தார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

கொரோனா வைரஸ் தொற்றுநோய் பரவலின் மற்றொரு பக்கத்தில், இந்தத் தொற்றுநோயைக் கட்டுப்படுத்தல் மற்றும் கையாளுதல் செயற்பாடுகளில் அரசாங்கம் உயர்வான வெளிப்படைத் தன்மையைப் பேண வேண்டும். அரசியல் கட்சிகள், சிவில் சமூக அமைப்புக்கள் இது குறித்து தொடர்ச்சியாக வலியுறுத்திவருகின்றன.

வெளிப்படைத்தன்மை மூலமாக உருவாகும் இடைத்தொடர்பு வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் பொதுமக்களின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் பெறுவதற்குப் பெரிதும் வழிகோலும் - என்றார். (ஐ)

# கவனயீனமாக இருந்தால் அநாதைகளாக்கப்படுவோம்

## எச்சரிக்கிறார் ஹரிஸ்

மட்டக்களப்பு, ஜூலை 18

நிலவுரிமை விடயத்தில் நாம் கவனயீனமாக இருப்போமானால் அதனால் முஸ்லிம் சமூகம் அபிவிருத்தியை இழந்தும் நிலங்களை இழந்தும் ஓர் அநாதையான சமூகமாக மாறிவிடும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் சட்டத்தரணியுமான எச்.எம்.எம். ஹரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

என்னுடைய முழுக்கவனமும் நிலவுரிமை விடயத்தில் தான் உள்ளது. இந்த நிலவுரிமை விடயத்தில் நாம் கவனயீனமாக இருப்போமானால் அதனை முஸ்லிம் சமூகம் அபிவிருத்தியை இழந்தும் நிலங்களை இழந்தும் ஓர் அநாதையான சமூகமாக மாறிவிடும். அபிவிருத்தி தொடர்பில் குற்றஞ் சுமத்துபவர்கள் இந்த நிலவுரிமை விடயத்தில் அக்கறை செலுத்துவதில்லை. பிரபாகரன் தனது மக்களின் சுயநிர்ணய உரிமை விடயத்தைப் பெற்றுக் கொடுப்பதிலேயே குறியாக இருந்தார். சம்பந்தன் கூட இந்த தள்ளாத வயதில் தங்களைத் தாங்களே ஆளுகின்ற சுயாட்சியைப் பெற்றுக்கொள்ள உச்சக்கட்ட அரசியலைச் செய்கின்றபோது எங்களுடைய தலைவர்கள் எமது மக்களை வேறு திசை நோக்கிப் பயணிக்கச் செய்கின்ற ஆபத்தான விடயங்களை நோக்கி வழிநடத்திக்கொண்டிருக்கின்றார்கள் - என்றார். (ப)




# பிடிவாத அரசாங்கத்துக்கு தகுந்த பாடம் கற்பிப்போம்

## நிசாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 18

வாழ்வாதாரப் பிரச்சினையை எதிர்நோக்கி வரும் நாட்டு மக்களுக்கு எந்தவித நலனையும் பெற்றுக் கொடுக்காமல் இருக்கும் ஜனாதிபதி கோத்தாபயவின் பிடிவாத அரசாங்கத்துக்கு தகுந்த பாடத்தை கற்பிக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட வேட்பாளர் நிசாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொரோனா வைரஸ் பரவல் நாட்டுக்குள் வருவதை தடுப்பதற்கு முறையான செயற்பாடுகளை மேற்கொள்ளாமையால் முழு நாடும் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான நிவாரணங்களை பெற்றுக் கொடுப்பதற்குக் கூட இந்த அரசாங்கத்தால் முடியாமல் போயுள்ளது. தங்களை மக்கள் மீது அக்கறை கொண்ட தலைவர்களாகவே காண்பித்து வந்தனர். இரு மாதங்களுக்கு 10,000 ரூபாவை மாத்திரம் பெற்றுக் கொடுத்தால் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியுமா? ஜனாதிபதியின் பிடிவாத குணமிக்க ஆட்சிமுறைக்கு எதிர்வரும் பொதுத் தேர்தலில் தகுந்த பாடத்தைக் கற்பிக்க வேண்டும் - என்றார். (ஐ)

# வைரஸைக் கட்டுப்படுத்தி அரசு மக்களை பாதுகாக்கும்

## பிரதமர் மஹிந்த கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 18

நாட்டில் ஏற்பட்டுள்ள சுகாதார நிலைமை தொடர்பில் அரசாங்கம் மிகுந்த அவதானத்துடன் செயற்பட்டு மக்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த பிரதமர் ,

கொவிட் தொற்று முதன் முதலாக வந்தபோது அதனைக் கட்டுப்படுத்த முடிந்தது. கொரோனா ஒழிப்பு ஜனாதிபதி பணிக்குழு, அத்தியாவசிய சேவை ஜனாதிபதி பணிக்குழு, அரச துறை, சுகாதாரத் துறை, இராணுவம் உள்ளிட்ட முப்படையினர், பொலிஸார் அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர். விசேடமாக உளவுத்துறை மற்றும் சுகாதாரத் துறை ஆகியன செய்த அர்ப்பணிப்பை இங்கு நிச்சயம் நினைவுகூற வேண்டும். இக்காலப்பகுதியில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களைச் சந்தித்து வருகின்றனர், அது தொடர்பாக இங்கு நிபுணர்கள் தெளிவுபடுத்துவர். நாங்கள் எப்போதும் மக்களின் பாதுகாப்புக்காக நடவடிக்கை எடுத்தவர்கள். அதனால் எதிர்காலத்திலும் மக்களை பாதுகாப்பதற்கு நாம் நடவடிக்கைகளை ஏடுத்து வருகிறோம் - என்றார். (ப)

# அரசின் வீழ்ச்சி நோக்கிய பயணம் ஆரம்பித்துவிட்டது

## இராதாகிருஷ்ணன் சுட்டிக்காட்டு

தபால்மூல வாக்களிப்பில் அரச ஊழியர்கள் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களித்து வருகின்றமையைக் காணமுடிகின்றது. தபால்மூல வாக்குகள்தான் வெற்றிபெறும் தரப்பை ஆரம்பத்தில் தீர்மானிக்கும். எனவே, இந்த அரசாங்கத்தின் வீழ்ச்சிப்பயணம் ஆரம்பித்துவிட்டது என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான கலாநிதி வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

மலையகத்தில் நாம் கணித, விஞ்ஞானப் பாடசாலைகளை உருவாக்கினோம். அனைத்து பௌதீக வளங்களையும் கொடுத்தோம். ஆனால், சில பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை இருந்தது. எனவே, கணிதம் மற்றும் விஞ்ஞானம் கற்பிக்கக் கூடிய 100 ஆசிரியர்களை இந்தியாவில் இருந்து வரவழைப்போம் என நான் யோசனை முன்வைத்திருந்தேன். பல கட்சிகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தன. இதனால் திட்டத்தைக் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டது. எதிர்காலத்தில் இந்திய ஆசிரியர்களை வரவழைக்கக் கூடியதாக இருந்தால் அதனை நிச்சயம் செய்வோம். அவ்வாறு இல்லாவிட்டால் இங்குள்ளவர்களுக்கு இந்தியாவில் பயிற்சி வழங்கப்படவேண்டும். நான் மாகாணசபையில் இருக்கும் போது இவ்வாறான பயிற்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. அதேவேளை, சர்வமதத் தலைவர்களிடமும் ஆசியும் ஆதரவும் திரட்டி வருகின்றோம். நான் இந்து சமயத்துக்கு பல சேவைகளை ஆற்றியுள்ளேன். எதிர்காலத்திலும் ஆற்றுவதற்கு எதிர்பார்க்கின்றேன் - என்றார். (ப)

# வாக்களிக்க விடுமுறை பெற சிக்கலா? உடன் அழையுங்கள்

## கபே அமைப்பு அறிவுறுத்துகின்றது

**கொழும்பு, ஜூலை 18**

**வாக்களிப்பதற்கு தனியார் நிறுவனங்களிடமிருந்து விடுமுறை பெறுவதில் ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால் தம்மிடம் முறைப்பாடு செய்யுமாறு மக்களிடம் கபே அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.**

கபே அமைப்பின் முறைப்பாட்டு பிரிவு, குறித்த முறைப்பாடுகளை ஏற்குமென அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் அஹமட் மனாஸ் மக்கீன் அறிவித்துள்ளார்.

முறைப்பாடுகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்களுடன் கலந்தாலோசித்து தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

ஒவ்வொரு தேர்தலிலும் பல தனியார் நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களின் வாக்குரிமையை மீறுகின்றன. இது பாரதூரமான நிலைமை. தேர்தல்கள் ஆணைக்குழுவின் பரிந்துரையின் பிரகாரம், தாம் வாழும் பிரதேசத்துக்கு ஏற்ப விடு முறையைப் பெற்றுக்கொள்வது ஊழியர்களின் உரிமை. நிறுவனங்களின் தலைவர்கள் தமது ஊழியர்களுக்கு கட்டாயம் விடுமுறை வழங்க வேண்டும்.

விடுமுறை வழங்க மறுக்கும் நிறுவனங்கள் மற்றும் அவற்றின் தலைவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது தொடர்பாக கபே அமைப்பு கவனம் செலுத்துகின்றது என்றும் இவ்வாறான முறைப்பாடுகளை 0114 341524 என்ற இலக்கத்துக்கு அல்லது 0112866 224 என்ற தொலைநகல் இலக்கத்துக்கு அல்லது info@caffesrila nka. org என்ற மின்னஞ்சல்ஊடாககபேஅமைப்பின் முறைப்பாட்டுப் பிரிவுக்கு அறிவிக்குமாறு அஹமட்மனாஸ் மக்கீன் கோரியுள்ளார். (து)

# கொரோனாவும் அரசின் தேர்தல் காரணியானது

## சுஜீவ சேனசிங்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 18

இனவாதத்தின் ஊடாக தேர்தலை வெற்றி கொண்ட ராஜபக் ஷக்கள், கொரோனா காரணமாக நாடு எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் தேர்தலை வெற்றி கொள்ளவே முயற்சித்து வருகின்றனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிப் பொதுச் செயலாளர் சுஜீவ சேன சிங்க குற்றஞ்சாட்டியுள் ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொவிட் 19 வைரஸ் பரவல் தொடர்பில் மீண்டும் அச்சம் எழுந்துள்ளது. முதல் கட்டத்தைவிட இரண்டாம் கட்டத்தில் பாதிப்புகள் அதிகரிக்குமோ என்ற பயம் மக்கள் மத்தியில் தோன்றியுள்ளது.

இந்நிலையில் இதனால் நாட்டு மக்களுக்கு உயிர் ஆபத்துகள் எதுவும் ஏற்பட்டால். இதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ , சுகாதார சேவைகளின் பிரதானி , தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட அனைவருமே பொறுப்புக் கூற வேண்டும்.

இதேவேளை கொலை குற்றத்தின் கீழ் நாட்டு மக்கள் இவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவும் முடியும்.

இம்முறை தேர்தலில் ராஜபக் ஷக்களின் குடும்பத்தைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையானோர் போட்டியிடுகின்றனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நாட்டின் ஜனாதிபதி ,பிரதமர், பாதுகாப்பு அமைச்சர்,பொருளாதார அமைச்சர் மற்றும் சபாநாயகர் ஆகியோர் பதவி வகிக்கும் முதல் நாடு இலங்கையே.

இந்த நிலைமையை எண்ணி நாம் தலைகுனிய வேண்டும். இது ஓர் அடிமைத்தனமாகும். அரச குடும்பங்களின் ஆட்சிகள் இடம்பெறும் நாடுகளில் கூட எல்லா பதவிகளையும் அவர்களே வகிப்பதில்லை. இந்த நிலைமைக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிர மசிங்கவே பொறுப்புக் கூறவேண்டும். அவர்தான் ராஜபக்ஷக்களின் குடும்பத்தின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியவர்.

யுத்தத்தை வெற்றி பெற்றதாகவே ராஜபக் ஷாக்கள் பெருமை கொள்கின்றனர். ஆனால் ஒவ்வொரு நாளும் யுத்தத்தை சாப்பிட்டு உயிர் வாழ முடியுமா? சிங்கள பௌத்தம் என்று இனவாதத்தை போசித்து வந்தார்கள். அதே சிங்கள பௌத்தத்தை மதிக்கும் பல உறுப்பினர்கள் எம்முடனும் இருக்கின்றார்கள். சிங்கள பௌத்த குணம் என்பது இந்நாட்டு மக்கள் அனைவரையும் வாழவைப்பதே தவிர , தமிழ் , முஸ்லிம் மக்களைக் கொலை செய்து கடலில் எறிவது அல்ல. சிங்கள பௌத்த மக்களுக்கு முன்னுரிமை கொடுப்பதுடன் ஏனைய, இனத்தவர்களும் சமமான முறையில் வாழ்வதற்கான சூழலை நாங்கள் ஏற்படுத்திக்கொடுப்போம்- என்றார். (ஐ).

# ஜனநாயகமாகவுள்ள அமைப்பின் உறுப்பினர்களுக்கு வாக்களியுங்கள்

*கூட்டணியின் வேட்பாளர் சங்கையா கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஜூலை 18

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலாவது கடந்த தேர்தல்களில் தமிழ் மக்கள் செய்த தவறை மீண்டும் செய்யாது, கற்றுக்கொண்ட பாடங்களை அனுபவமாகக் கொண்டு, ஒரு ஜனநாயக அமைப்பின் உறுப்பினர்களுக்கு வாக்களித்து, வெற்றிபெறச் செய்து நாடாளுமன்றம் அனுப்பவேண்டியது காலத்தின் கட்டாயம் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற வேட்பாளர் இரா.சங்கையா தெரிவித்துள்ளார்.

ஆனைக்கோட்டை பொதுமண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடந்த தேர்தல் பரப்புரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:




போர் முடிந்தபின் நடைபெற்ற இரண்டு நாடாளுமன்ற தேர்தல்களில் மாறிமாறி வந்த அரசுகள் போரில் மேற்கொள்ளப்பட்ட ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாடுகளையும் அடிப்படை மனித உரிமை மீறல்களையும் தட்டிக்கேட்பதற்கு தமிழ் மக்கள் ஒரு ஜனநாயக கட்சியை அனுப்பத் தவறிவிட்டார்கள்.

தட்டிக்கேட்கும் தகுதியுள்ளவர்கள் அடிப்படை மனித உரிமை மீறல்களிலும் ஜனநாயகத்துக்கு விரோதமான செயற்பாடுகளிலும் ஈடுபடாதவர்களாக இருக்க வேண்டும். தேர்தலுக்கான ஜனநாயகத்தையே மீறி 2004ஆம் ஆண்டு நாடாளுமன்றம் சென்றவர்கள் அரசினுடைய ஜனநாயகத்துக்கு விரோதமான செயற்பாடுகளையும், அடிப்படை மனித உரிமை மீறல்களையும் நாடாளுமன்றுக்கு உள்ளேயும் வெளியேயும் தட்டிக்கேட்கும் தகுதியை இழந்துள்ளனர்.

அன்று தெரிவுசெய்யப்பட்ட 22 நாடாளுமன்ற உறுப்பினர்களும், இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட மூன்று கட்சிகளாக பிரிந்து, தமிழ் மக்களின் உரிமை பற்றி பேசுகின்றார்கள். இந்த மூன்று கட்சிகளுக்குள்ளும் ஜனநாயகத்துக்கு எதிரான, அடிப்படை மனித உரிமைகளை மீறிய செயற்பாடுகளைச்செய்த [illegible] உடந்தையாகச் செயற்பட்டவர்களே அதிகமாக [illegible] அரசைக் தட்டிக்கே[illegible] முடியும்? தேவை ஏற்பட்டால் அரசில் உள்ளவர்களும் இவர்களும் தாங்கள் செய்த செயற்பாடுகளை ஒப்பிட்டு விவாதித்து கலந்துரையாடிக் கொள்ளலாம்- என்றார். (து)

# மன்னாரில் ஓரிருவரே தீவிரமான பரப்புரையில்

தலைமன்னார், ஜூலை 18

வன்னித் தேர்தல் தொகுதியில் 45 கட்சிகள் களத்தில் குதித்திருக்கின்ற போதிலும், மன்னார் மாவட்டத்தில் ஓரிரு கட்சிகளின் வேட்பாளர்களே தீவிர பரப்புரையில் இறங்கியுள்ளமையை அவதானிக்கமுடிகின்றது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக சுகாதாரப் பகுதியினரால் விடுக்கப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக பொதுக் கூட்டங்கள் பெரும்பாலும் தவிர்க்கப்பட்டுள்ளன. வீடு வீடாக பரப்புரைகள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, கடந்த 21ஆம்திகதியிலிருந்து இன்றுவரை மன்னார் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு நிலையத்துக்கு இருபது முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-60)

# பொருளாதார வீழ்ச்சியை மீட்க ரணிலே திட்டம் வகுத்துள்ளார்

## கூறுகின்றார் அவரது அணி வேட்பாளர் பைரூஸ்

கொழும்பு, ஜூலை 18

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார வீழ்ச்சியை ரணில் விக்கிரமசிங்கவால் மாத்திரமே கட்டியெழுப்ப முடியும். அதற்கான வேலைத்திட்டங்களையும் முன்வைத்திருக்கின்றார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் மொஹமட் பைரூஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப அரசிடம் முறையான வேலைத்திட்டம் இல்லை. சாதார[illegible] கொரோனா வைரஸ் தாக்கத்தாலும் பொருளாதாரம் பெருமளவில் வீழ்ச்சியடைந்திருக்கின்றது. வீழ்ந்திருக்கும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பத் தேவையான வேலைத்திட்டத்தையும் அரசு இதுவரை முன்வைக்கவில்லை. தேர்தலை எப்படியாவது வெற்றிகொள்ளவேண்டும் என்பது மாத்திரமே இவர்களின் திட்டம்.

கொரோனாத் தொற்று அச்சுறுத்தல் தற்போதும் இருந்து வருகின்றது. தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளை நாங்களும் அச்சத்துடனேயே மேற்கொள்கின்றோம். ஆனால் வாக்காளர்களைப் பாதுகாக்க அரசிடம் எந்த வேலைத்திட்டமும் இல்லை. தேர்தல் தொடர்பான சுகாதார வழிகாட்டலையும் அரசு வர்த்தமானிப்படுத்தாமல் இருக்கின்றது. அதனால் பொதுத் தேர்தலில் 50 வீத வாக்களிப்புகூட இடம்பெறுமா என்ற சந்தேகம் இருக்கின்றது. தேர்தல் முடியும் வரை அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கப்போவதில்லை.

நாடாளுமன்றம் 5 மாதங்களாக மூடி இருக்கின்றது. அதை மூடிக்கொண்டு எவ்வாறு சர்வதேச உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்?. எனவே நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார பிரச்சினையைத் தீர்க்கவும் வீழ்ந்திருக்கும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும் ரணில் விக்கிரமசிங்கவால் மாத்திரமே முடியும். அதற்கான வேலைத்திட்டங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்திருக்கின்றது. வேறு எந்தக் கட்சிகளின் தலைவர்களும் பொருளாதாரத்தை கட்டியெழும்புவதற்கான வேலைத்திட்டத்தை இதுவரை முன்வைக்கவில்லை- என்றார். (து)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அமைச்சுப் பதவிக்கு அலைதல்

மன்னன் ஒருவன் காட்டுக்கு வேட்டையாடப் புறப்பட்டான். அப்படி வேட்டையாடப் போவதற்கு முன்தனது அமைச்சரை அழைத்து 'மழை வருமா?' எனக் கேட்டான். வானத்தை அண்ணாந்து பார்த்தார் அமைச்சர். வானம் மிகத் தெளிவாக இருந்தது.

'மழை வராது' என்றார் அமைச்சர். மன்னனும் திருப்தியோடு தன் பரிவாரங்களோடு காடு நோக்கி விரையத் தொடங்கினான். வழியிலே ஒரு கழுதைமேல் வந்து கொண்டிருந்த குடியானவன் ஒருவன் மன்னனை வணங்கினான். 'அரசே, கொஞ்ச நேரத்தில் மழை வரும். திரும்பிச் செல்லுங்கள்' என அரசனிடம் பணிவாகச் சொன்னான்.

ஆனால் மன்னன் அதைப் பொருட்படுத்தவில்லை.

'என் அமைச்சருக்கு இல்லாத அறிவு அவனுக்குண்டா?' என நினைத்துக்கொண்டு, காட்டுக்குள் போய் வேட்டையாடத் தொடங்கினான். அப்போது திடீரென கடும் மழை கொட்டத்தொடங்கியது. அத்தோடு வேட்டையைக் கைவிட்ட மன்னன் நனைந்தபடியே அரண்மனைக்குத் திரும்பினான். அடுத்த நாள் காவலர்களை அனுப்பி கழுதையில் வந்த குடியானவனை அரண்மனைக்கு அழைத்துவரக் கட்டளையிட்டான்.

அவனிடம், 'மழைவரும் என்று உனக்கு எப்படித் தெரியும்?' என மன்னன் கேட்டான்.

அவனோ, 'மன்னா எனக்கு மழை வருமா, வராதா எனத் தெரியாது. ஆனால் என் கழுதைக்குத் தெரியும். அது மழை வரும்முன் காதுகளை முன்னுக்கு நீட்டிக் கொள்ளும். அதை வைத்தே உங்களை எச்சரித்தேன்' என்றான்.

உடனே மன்னன் தன்னுடைய அமைச்சரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு கழுதையை அமைச்சராக்கினானாம்.

இந்தக் கதையை அமெரிக்காவின் புகழ்பூத்த முன்னாள் ஜனாதிபதியான ஆபிரஹாம் லிங்கன் அடிக்கடி கூறுவார். அப்படிக் கூறிவிட்டு இப்படிச் சொல்வார்,

'ஒரு கழுதையை அமைச்சராக்கி மன்னன் மிகப்பெரிய தவறு செய்துவிட்டான், ஏனெனில் அதற்குப் பின்னர் எல்லாக் கழுதைகளும் ஏதாவது அமைச்சுப் பதவி வேண்டும் என அலைகின்றன'

ஆபிரஹாம் லிங்கன் சொன்னது, இப்போது எங்களுக்கும் நன்றாகவே பொருந்துகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உரிமைக்காக எமது அரசியல் பயணத்தைத் தொடர்ந்துவரும் இந்தவேளையிலே வேட்பாளர்கள் சிலர் அமைச்சுப் பதவிகளைப் பெறுவது பற்றியும் கனவு காண்கின்றனர். இந்தக் கனவு தற்செயலானதல்ல. முன்னரும் ஒரு தடவை ஊடகப் பேட்டியொன்றில் குறித்த கூட்டமைப்பின் வேட்பாளர் அமைச்சுப் பதவிகளைப்பெறுவது பற்றிதன்னுடைய விருப்பத்தை வெளியிட்டிருந்தார். அப்படி அமைச்சுப் பதவிகளைக் கூட்டமைப்பு பெறுமாயின், எந்த இணக்க அரசியலுக்கு எதிராக கூட்டமைப்பு தோற்றம் பெற்றதோ, அதே இணக்க அரசியல் என்னும் படுகுழிக்குள் தள்ளும் முதல் படியாகவே இருக்கும். கூட்டமைப்பு என்றாலே தென்னிலங்கைப் பேரினவாதக் கட்சிகளின் கண்களுக்கு தெரிவதென்னவோ புலிகளின் ஜனநாயக உருவம்தான். எனவே கூட்டமைப்பை அமைச்சுப் பதவிகளுக்காக அடகுவைப்பதென்பது புலிகளை அடகுவைப்பது போன்றதே. அப்படிக் கொள்கைகளை அடகுவைப்போரை நிராகரித்து, களைகளைக் களைந்து, வீட்டைப் பலப்படுத்த வேண்டும். சில புல்லுருவிகளுக்காக ஒட்டுமொத்தமாக கூட்டமைப்பையே புறக்கணிப்பதென்பது, மூட்டைப் பூச்சித் தொல்லையால் வீட்டையே எரிப்பது போன்றது. எனவே கடந்த தேர்தல்களைப் போலவே இம்முறையும் கூட்டமைப்பின் கரங்களைப் பலப்படுத்துவதே எமக்காக மாண்ட மறவர்களின் கனவை மெய்ப்பிக்கும்.

# வீதிகளில் பயணிக்கும் போது நகைகளை அதிகம் அணியாதீர்

## யாழ். பெண்களுக்கு பொலிஸார் அறிவுறுத்து



யாழ்ப்பாணம், ஜூலை 18

**யாழ்ப்பாணத்தில் வீதிகளில் பயணிக்கும் பெண்கள் தங்க நகைகளை அதிகளவில் அணிந்து செல்வதைத் தவிர்க்குமாறு யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவுப் பொலிஸ் பொறுப்பதிகாரி நிகால் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அண்மைய நாள்களில் வீதிகளில் செல்லும் பெண்களிடம் நகைகள் கொள்ளையிடப்படும் சம்பவங்கள் அதிகளவில் இடம் பெற்று வருகின்றன. இது தொடர்பான முறைப்பாடுகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் பொதுமக்களால் பதியப்பட்டுள்ளன. அவை தொடர்பில் யாழ் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரால் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு பலர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இன்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

மக்களுக்கு நான் ஒரு கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றேன். யாழ்ப்பாணக் குடாநாட்டில் வீதிகளில் பயணிக்கும் பெண்கள் தங்க நகைகளை அதிக அளவில் அணியாது செல்வதன் மூலம் திருட்டுச் செயல்களைக் கட்டுப்படுத்த முடியும். எனினும் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் பலர் நாளாந்தம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு வருகின்றார்கள். எனவே இது தொடர்பில் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும் - என்றார். (ப)

## மன்னாரில் ஆரம்பகட்டத்தில் வெட்டுக்கிளிகளின் தாக்கம்

### எச்சரிக்கிறார் பயிர் பாதுகாப்பு உத்தியோகத்தர்

மன்னார், ஜூலை 18

மன்னார் மாவட்டத்தில், சிறு போகப் பயிர்களில் வெட்டுக்கிளிகளது தாக்கம் ஆரம்ப நிலையில் உள்ளது. எனவே, விவசாயிகளை அவதானமாக இருக்குமாறு பயிர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எஸ்.ஏ.ஜே. லெம்பேட் எச்சரித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் சிறுபோகப் பயிர்களில் வெட்டுக்கிளிகளின் தாக்கம் ஆரம்பநிலையில் உள்ளது. இதன் தாக்கம் அதிகரிக்க இடமளிக்காமல் விவசாயிகள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இந்த வெட்டுக்கிளிகளது தாக்கம் மறிச்சுக்கட்டி, பெரியமடு பகுதிகளிலும் அடையாளம் காணப்பட்டுள்ளது. விவசாயிகள் தங்கள் எது வயல்களில் வெட்டுக்கிளிகளின் தாக்கம் அடையாளம் காணப்பட்டால் உடனடியாகப் பிரதேசத்தில் கடமையாற்றும் விவசாய உத்தியோகத்தர்களிடம் தெரிவித்து அதற்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்தார். (ப-213)



## விளம்பரங்களை அகற்றும் பொலிஸார்

வவுனியா, ஜூலை 18

வவுனியாவில் பல பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ள தேர்தல் பரப்புரை விளம்பரங்களுக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர் .

வவுனியா பண்டாரிகுளம் பாடசாலைக்கு முன்பாக ஒட்டப்பட்டிருந்த தேர்தல் பரப்புரை விளம்பரங்களை பொலிஸார் நேற்று அகற்றினர். மதில்கள் மின்கம்பங்களில் ஒட்டப்பட்டுள்ள விளம்பரங்களுக்கு ஒயில் பூசும் நடவடிக்கையையும் அவர்கள் மேற்கொண்டனர். நகரின் பல்வேறு பகுதிகளில் அரசியல் கட்சிகள் சுயேச்சைக்குழுக்களின் தேர்தல் பரப்புரைப் பிரசுரங்கள், விளம்பரங்கள் ஒட்டப்பட்டுள்ளன. (ப-110)

# புத்தளத்தில் சிறுமி கொல்லப்பட்டாரா?

## மருத்துவமனையில் குழப்பநிலை

புத்தளத்தில் 10 வயதுச் சிறுமி ஒருவரின் இறப்பில் சந்தேகம் காணப்படுவதாக புத்தளம் மருத்துவமனையின் பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த சிறுமியை அவரது தாயார் மருத்துவமனையில் சேர்த்துள்ளார். தனது மகளை நாக பாம்பு தீண்டியதாக மருத்துவர்களிடம் அவர் கூறியுள்ளார். சிறுமிக்கு அதிதீவிர சிகிச்சையளிக்கப்பட்டது. எனினும், சிகிச்சை பயனளிக்காது சிறுமி உயிரிழந்துள்ளார்.

அதிகமான குருதிப் பெருக்கே சிறுமியின் இறப்புக்குக் காரணம் என்று மருத்துவமனை நிர்வாகம் அறிவித்துள்ளது.

ஆனால் சிறுமியின் இறப்பில் சந்தேகம் காணப்படுவதாக புத்தளம் மருத்துவமனையில் கடமையிலிருந்த பொலிஸார் புத்தளம் பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்துள்ளனர்.

விசாரணையின் பின்னர் சிறுமியின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்.

மேலும் சிறுமி குருதிப் பெருக்கால் இறந்தாரா? அல்லது கொல்லப்பட்டாரா அல்லது வேறு ஏதேனும் காரணங்களால் இறப்பு ஏற்பட்டதா என்பது தொடர்பில் விசேட விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் கூறியுள்ளனர். (கு)



# 13 இப்போது பிளஸா? மைனஸா?



சிங்களமூலம் : மேஞ்ஞுநாத
தமிழில் : வீஎஸ் ரீ

கடந்த ஜனவரி மாதம் 14ஆம் திகதியன்று இடம்பெற்ற பிரதமர் மஹிந்த மற்றும் தமிழ் ஊடகவியலாளர் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு ஒன்றின்போது ஊடகவியலாளரொருவர் அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பான பிரதமரது தற்போதைய நிலைப்பாடு என்ன? எனக் கேள்வி எழுப்பியிருந்தார். அதற்குப் பதிலளித்த பிரதமர் 13ஆவது திருத்தம் குறித்த தமது முன்னைய நிலைப்பாட்டில் எதுவித மாற்றமுமில்லையெனத் தெரிவித்திருந்தார்.

அரசமைப்புக்கான 13ஆவது திருத்தத்தில் மாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டுமென அரச தரப்பைச் சேர்ந்த சிலர் கருத்து வெளியிட்டுவரும் இன்றைய நிலை யில்,பிரதமரது 13+ என்ற மேற்குறித்த நிலைப்பாடு விசேடம் மிக்கதொன்றாகக் கொள்ளத்தக்கது.

அண்மையில் வடபகுதிக்குப் பயணம் மேற்கொண்டிருந்த சஜித் பிரேமதாச ஒருமித்த நாட்டுக்குள் அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த தாம் தயாரெனக் கூறியிருந்தார். சஜித்தின் வடபகுதிப் பயணத்தின்போது, அவரது வாயிலிருந்து வரும் கருத்தைச் சர்ச்சைக்கு உட்படுத்தவெனக் காத்திருந்த தரப்பினருக்கு சஜித்தின் அந்தக் கருத்து ஏமாற்றமளித்தது. இதனாலேயே உதய கம்மன்பில தரப்பினர், சஜித்தின் குறித்த நிலைப்பாடு நாட்டை ஒன்பது பிரிவுகளாகப் பிரிக்க வழி வகுக்குமென விமர்சித்துள்ளனர். அது கடும் கோட்பாட்டாளர்களாக மூளைச்சலவை செய்யப்பட்டவர்களின் பேசுபொருளாக இருந்தபோதிலும் ,சிந்தனைத்திறன் கொண்ட எவரும் அதனை நம்பத் தயாராக இல்லை. மாகாண சபை நடைமுறை சஜித்தின் தந்தையார் ரணசிங்க பிரேமதாசவின் ஆட்சிக் காலத்திலேயே செயற்படுத்தப்பட்டது என்பதை அறியாத அவர்கள் அவ்விதம் மாறுபாடான விமர்சனத்தை முன்வைத்து வருகின்றனர்.

**சஜித்தின் நிலைப்பாடு**

இந்த விமர்சனம் குறித்து சஜித் தன் தரப்பு நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியுள்ளார். ஒருமித்த இலங்கைக்குள் நாட்டின் சுயாதிபத்தியம் மற்றும் இறைமையைப் பாதுகாக்கும் வகையிலான கொள்கையே தமது நிலைப்பாடு என சஜித் தெரிவித்துள்ளார்.

"பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்ற வார்த்தையைப் பயன்படுத்தி சஜித் சமஷ்டி முறைக்கு ஆதரவானவர் என என் மீது முத்திரைகுத்த முயல்கிறார். 13+ என்ற நிலைப்பாடுதான் சமஷ்டி முறையிலான நிர்வாகம் எனக் கொள்ளத்தக்கது. ஐக்கிய இலங்கை என்ற கருத்து தவறானதல்ல. உண்மையில் அது ஐக்கியப்பட்ட நாடு என்ற கருத்தையே தாங்கியுள்ளது. ஆயினும் மஹிந்தவுக்குத் தேவைப்படுவதோ ஐக்கிய என்ற சொல்லை சமஷ்டி என நிறுவுவதே ஆகும். வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ளும் வேளைகளில் அங்கெல்லாம் 13ஆவது திருத்தத்துக்கு மேற்சென்று தீர்வு எனக் கூறிவிட்டு , நாடு திரும்பியதும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில்லை என்ற விதத்தில் 13 மைனஸ் எனக் கூறுகிறார். இருவேறு நிலைப்பாட்டில் அரசியல் செய்வது யாரென்பதை நாட்டு மக்கள் நன்கறிவர். ஒருமித்த நாட்டுக்குள் தீர்வு என்ற நிலைப்பாட்டையே நான் கைக்கொள்கிறேன்" என சஜித் தெரிவித்துள்ளார்.

**மாகாண சபை அறிமுகம்**

1987ஆம் ஆண்டில் அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் மேற்கொள்ளப்பட்டதன் மூலம் நாட்டில் மாகாண சபைகள் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. அது நாட்டின் இனப்பிரச்சினைக்கான தீர்வாக அமைவதாக அப்போதைய அரசால் தெரிவிக்கப்பட்டது. குறித்த 13ஆவது திருத்தம் நாட்டைப் பிளவுபடுத்துமொன்று எனக்கூறி அதனை ஜே.வி.பி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்பவை எதிர்த்தன. விடுதலைப்புலிகள் தரப்புக்கூட பின்னர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது. ஆயினும் அப்போது இடதுசாரிக்கட்சிகள் மட்டும் அதற்கு ஆதரவு தெரிவித்தன.

மாகாண சபை முறைக்கான எதிர்ப்பு படிப்படியாக நலிவடைந்து போக, அந்த நடைமுறை முழுநாட்டிலும் செயற்படுத்தப்பட்டது. மாகாணசபைகளுக்கான முதலாவது தேர்தலைப் புறக்கணித்த ஜே.வி.பி.மற்றும் சுதந்திரக் கட்சி என்பவை பின்னர் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தல்களில் பங்குபற்றி, மாகாண சபைகளிலும் இடம்பிடித்துக்கொண்டன. இருந்த போதிலும் பின்னர் பதவிக்கு வந்த சுதந்திரக்கட்சியின் தலைமையிலான அரசால், நாட்டின் மூன்றாவது அரசமைப்பின் மூலம் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளுக்கு குறித்தொதுக்கப்பட்ட காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்காதிருக்க எழுந்தமானமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன்காரணமாக மாகாண சபைகள் நடைமுறை முக்கிய அதிகாரங்கள் எதுவுமற்ற, நாட்டு மக்களது பணத்தை வீண் விரயமாக்கும் வெள்ளையானையின் நிலைக்குத் தள்ளப்பட்டது. இன்று மாகாண சபை நடைமுறை 13 மைனஸ் என்ற நிலையிலேயே உள்ளது. கடந்த 25ஆண்டுகளுக்கு மேலாக அரசமைப்பு விதிகளுக்கு முரணான விதத்தில் மாகாண சபைகளுக்கு இதுவரை வழங்கப்படாதிருந்த 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் உள்ளடக்கப்பட்ட அதிகாரங்களை உடனடியாக மாகாண சபைகளுக்கு வழங்குவதே இன்று மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய பணியாகும். வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தொடர்பாக பரந்த அதிகாரப் பகிர்வை மேற்கொள்வதாக 2010ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக் ஷவினால் வழங்கப்பட்ட இராஜதந்திர மட்டத்திலான உறுதிமொழி விரைவாகச் செயற்படுத்தப்பட வேண்டுமென இந்தியப் பிரதமர் மோடியால் வலியுறுத்தப்பட்டுள்ளதாக 'இந்து'பத்திரிகை தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

> இன்று மாகாண சபை நடைமுறை 13 மைனஸ் என்ற நிலையிலேயே உள்ளது.கடந்த 25ஆண்டுகளுக்கு மேலாக அரசமைப்பு விதிகளுக்கு முரணான விதத்தில் மாகாண சபைகளுக்கு இதுவரை வழங்கப்படாதிருந்த 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் உள்ளடக்கப்பட்ட அதிகாரங்களை உடனடியாக மாகாண சபைகளுக்கு வழங்குவதே இன்று மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய பணியாகும்.

**பயனற்ற செயற்பாடுகள்**

இத்தகைய நிலையில் உதய கம்மன்பிலவின் அண்மைய வெற்றுப் புலம்பல்களால் பயனேதுமுண்டா?

மஹிந்த ராஜபக் ஷவின் ஜனாதிபதிப் பதவியின் இரண்டாவது ஐந்தாண்டுப் பதவிக்காலத்தில், அரசு இந்த நாட்டை ஆசியாவின் ஆச்சரியமாக ஆக்கப்போவதாக அரச தரப்பினர் அடிக்கடி கயிறு திரித்து வந்தனர். ஆனால் அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தத்தின் மூலம் நாட்டுக்கு ஏற்பட்ட பெரியளவிலான நட்டம் குறித்து பலரும் மறந்து போய்விட்டனர்.

கொழும்புத் துறைமுக நகரத்திட்டம்கூட பெரும் தடபுடல் விளம்பரங்களுடன் மஹிந்த அரசின் ஆட்சிக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டதொன்றே. சீன நிறுவனமொன்றிடம் அதன் நிர்மாணப் பணி கையளிக்கப்பட்டது. குறித்த கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் குறித்த விவரங்களை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்குமாறு அவ்வேளைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த கோரிக்கையையடுத்து ஜனாதிபதி மஹிந்தவால் கொழும்புத் துறைமுக நகர அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் அமைச்சரவைக்கு விவரங்கள் வழங்கப்பட்டன. குறித்த அபிவிருத்தித் திட்டத்தின் நிர்மாணப் பணி சீன நிறுவனமொன்றிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் அதற்கெனச் செலவாகும் 1337 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை ஈடுசெய்வதற்காக சீனாவுக்கு 108 ஹெக்டேயர் நிலம் கையளிக்கப்படவுள்ளதாகவும் அதில் தெளிவுபடுத்தப்பட்டிருந்தது. இவையாவற்றையும் தற்போது நாட்டு மக்கள் மறந்து போய் விட்டனரா?

கொழும்புத்துறைமுக அபிவிருத்தித் திட்டத்தையடுத்து மஹிந்த அரசு கையிலெடுத்ததே ஷங்கிரிலா ஹோட்டல் திட்டமாகும் ஆட்சியாளர்கள் மேற்கொண்ட இத்தகைய செயற்பாடுகளை மறந்து போய் விட்டனரா? "மஹிந்த தரப்பினருக்கு நாட்டின் தேசியப்பிரச்சினை குறித்து எவ்வித அக்கறையும் இருந்ததில்லை. நாமே பலாத்காரமாக அவர்களைக் கொண்டு 'ஒருமித்த' என்ற கொள்கை நிலைப்பாட்டை கொள்கைப் பிரகடனத்தில் புகுத்து வித்தோம்" என ரத்னதேரர் ஒரு சந்தர்ப்பத்தில் தெரிவித்திருந்தார். இந்தக் கருத்தின் உண்மை,பொய் குறித்து எம்மால் எதுவும் கூற இயலாது. அந்தவகையில் மஹிந்த ராஜபக் ஷவின் 'ஒருமித்த அல்லது 13 +' கதை குறித்து எவருக்கும் தற்போது ஞாபகம் இல்லை என்பதே யதார்த்தம்.

# தீவக அபிவிருத்திக்கு 15 ஆயிரம் கோடி ரூபா : அந்த உறுதிமொழியாலேயே தேர்தலில் போட்டி!



## பரநிருபசிங்கம் வரதராஜசிங்கம் (விண்ணன்)

நேர்கண்டவர்: இரா.புத்திரசிகாமணி

**யாழ்.-**
**கிளிநொச்சி மாவட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் கை சின்னத்தில் போட்டியிடும் பரநிருபசிங்கம் வரதராஜசிங்கம் (விண்ணன்) உதயனுக்கு அளித்த நேர்காணல் இது.**

**கேள்வி:** பிரபல வர்த்தகரான நீங்கள் இதுவரை எந்த ஒரு அரசியல் கட்சியினதும் நேரடி உறுப்பினராக இல்லாதவர். இப்போது திடீரென தமிழ் மக்கள் மத்தியில் வரவேற்பில்லாத தென்னிலங்கைச் சிங்களக் கட்சியில் போட்டியிடுவதின் நோக்கம் என்ன?

**பதில்:** நான் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நிரந்தர உறுப்பினரில்லை. எமது பிரதேச மக்களின் அடிப்படைத் தேவைககளையும் அபிவிருத்தியையும் மேற்கொள்வதற்காக தற்காலிகமாகவே இணைந்துள்ளேன். எங்கள் தீவகப் பிரதேச அபிவிருத்திக்காக 15 ஆயிரம் கோடி ரூபா வழங்குவதாக உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. அதன் முலம் எனது பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய முடியும் என்ற நம்பிக்கையுடனேயே களத்தில் இறங்கியுள்ளேன்.நான் எனது இளமை காலத்தில் தமிழரசுக்கட்சி மேடைகளில் ஏறிய அனுபவம் உண்டு. அதன்பின் போராட்டக்குழுக்கள் அனைத்திற்கும் ஆதரவையும் பொருள் உதவிகளையும் செய்துள்ளேன். அந்த வகையில் பொது மக்களிடமும் பரிச்சயம் உண்டு. எனவேதான் துணிந்து அரசியலில் இறங்கினேன்.

**கே:** இன்னும் தேர்தல் முடியவில்லை யார் ஆட்சிக்கு வருவார் என்பதும் தெரியாது. வெற்றி மதில் மேல் பூனையாக இருக்கும்போது எப்படி இவ்வளவு பெரிய தொகை கிடைக்கும் என்று நம்புகின்றீர்கள்?

**ப:** எங்களுடைய கட்சியில் நல்ல அனுபவம் உள்ள மூன்று ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன ,கோத்தபாய ராஜபக்ச ஆகியோர் இணைந்து செயற்படுகின்றனர். தென்னிலங்கை மக்கள் ஒட்டு மொத்தமாக இவர்கள் பக்கமே இருக்கின்றனர். இவர்களின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. இவர்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கை உண்டு.

**கே:** ஆரம்ப காலத்தில் தமிழரசுக்கட்சி மேடைகளில் ஏறியிருந்த நீங்கள், இப்போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிட்டிருக்கலாமே?

**ப:** அவர்கள் கடந்த 3 தசாப்தங்களாக எம்மை ஏமாற்றிவிட்டனர். எங்கள் இளமையைத் தொலைத்து விட்டோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மாகாண சபைக்கு தமிழ் மண்ணில் இருந்து ஒரு தலைவரை தெரிவு செய்ய முடியாமல் கொழும்பில் இருந்து ஒருவரை இறக்குமதி செய்தனர். அதன் பலனை இப்போது அனுபவிக்கின்றனர். இவர்களை நம்பி எப்படி களம் இறங்குவது.

**கே:** இப்பொழுது நமது பிரதேசத்தில் போதைப்பொருள் பாவனை கொலை, கொள்ளை, வாள்வெட்டு, கடத்தல் என அன்றாடம் இடம்பெறுகின்றன. உங்கள் நம்பிக்கைக்கு உரிய ஜனாதிபதியும் பிரதமரும் இது தொடர்பில் ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியாதா?

**ப:** இன்று இளைஞர்கள் இப்படி தவறான வழிக்குக் சென்றதற்கான முழுப் பொறுப்பையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதான் ஏற்க வேண்டும். இவர்கள் தமிழ்த் தேசியம் என்று எல்லா அரசுகளுடனும் முட்டி மோதிக்கொண்டே காலம் கடத்தி விட்டனர். இளம் சமுதாயத்தைப் பற்றி சிந்திக்கத் தவறி விட்டனர். உரிமை, உரிமை என்று அபிவிருத்தியை மறந்துவிட்டனர். பல ஆயிரம் இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்புகள் இன்றி தெருவில் அலைய நேரிட்டது. இவர்களே இன்று போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டு தறிகெட்டுள்ளனர்.

> “நான் எனது இளமைக் காலத்தில் தமிழரசுக்கட்சி மேடைகளில் ஏறிய அனுபவம் உண்டு. அதன்பின் போராட்டக்குழுக்கள் அனைத்திற்கும் ஆதரவையும் பொருள் உதவிகளையும் செய்துள்ளேன். அந்த வகையில் பொதுமக்களிடமும் பரிச்சயம் உண்டு.”

**கே:** அப்படியானால் தமிழருக்கு உரிமை தேவை இல்லை, அபிவிருத்திதான் வேண்டும் என்கின்றீர்கள்?

**ப:** நான் அப்படிக் கூறவில்லை. நாடாளுமன்றத்தில் பலமிக்க சக்தியாக இருந்த போதே கூட்டமைப்பினர் பதவியில் இந்த அரசுகளுடன் நல்லுறவை ஏற்படுத்தி நமது பிரதேசத்துக்கு வேண்டிய சகல தேவைகளையும் பெற்று நமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்திருக்க முடியும். நாட்டின் எந்தப்பகுதியிலும் இல்லாத நிலவளம், கடல் வளம், கனிய வளம் எல்லாம் எமது பகுதியில் நிறைந்துள்ளன. அரசின் அனுசரணையுடன் விவசாயம், மீன்பிடி மற்றும் தொழிற்சாலைகளை அமைத்து பலருக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி தன்னிறைவு கண்டிருக்க முடியும். ஆனால் தமிழ்த் தேசியம் என்ற பேரில் எதிர்ப்பு அரசியலை நடத்தி பிரதேசத்தையே அழித்து விட்டார்கள். நாடு அபிவிருத்தி அடையும் போது உரிமைகள் தானாகவே கிடைத்து விடும்.



வாசகர் கடிதம்

## ஆடி அமாவாசையைப் பொதுவிடுமுறை தினமாக்க வேண்டும்

இந்துக்களின் புனித நாள்களில் ஒன்றான ஆடி அமாவாசை தினத்தினை பொது விடுமுறை தினமாக அங்கீகரிக்க எமது இந்து மகா சபைகளும், அரசியல் வாதிகளும் அரசுக்கு கோரிக்கை விடவேண்டும். குறிப்பாக தந்தையினை இழந்த உத்தியோகத்தர்கள் இதன் மூலம் அதிகம் பயன்பெறுவர். ஆடி அமாவாசை தினத்தன்று விடுமுறையின்மையால் பல உத்தியோகத்தர்கள் தமது சொந்த விடுமுறையிலும் நிற்க முடி யாத துர்ப்பாக்கிய நிலையை அடைந்துள்ளனர். காரணம் ஒரே தினத்தில் எல்லோருக்கும் விடுமுறையினை நிறுவனத் தலைவரால் கொடுக்க முடியாது. எனவே அன்றைய தினம் உளரீதியாக பா... படைந்தே குறிப்பிட்ட தினத்தில் உத்தியோகத்தர்கள் பணியா... வேண்டி உள்ளது. சிங்கள மக்களின் புனித நாளான பௌர்... தினத்துக்கு 12மாதங்களும் விடுமுறை வழங்கும்போது ,இந்... ளுக்கு ஆடி மாதத்தில் வரும் அமாவாசை தினத்தில் மட்டும் ... முறை வழங்குவதால் எதுவும் குறைந்துவிடப் போவதில்லை. என... சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறித்த விடயம் தொடர்பில் கவ... செலுத்தி அரசுக்கு கோரிக்கை விடுத்து ஆடி அமாவாசை தி... தினை விடுமுறை தினமாக அங்கீகரிக்க ஆவன செய்யவேண்டு...

பாலசுரேஷ், (அரச உ...

# கொரோனாவைத் தடுத்தோர் ராணுவத்தினரும் புலனாய்வுத்துறையினருமே

## கூறுகின்றனர் அமைச்சரவைப் பேச்சாளர்கள்

கொழும்பு, ஜூலை 18
கொவிட் 19 வைரஸ் பரவலில் இருந்து இதுவரை காலமாக நாம் பாதுகாப்பாக இருக்கவும் தாக்கங்களை குறைத்துக் கொள்ளவும் இராணுத்தினரும் புலனாய்வுத்துறையினருமே முக்கிய காரணம். மருத்துவர்களின் செயற்பாடுகளும் இதற்குக் காரணம். வெறும் அரசியல் நோக்கங்களுக்காகவே இராணுவத்தை விமர்சிக்கின்றனர் என்று அரசு கூறுகின்றது.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன மற்றும் அமைச்சர் ரொமேஷ் பத்திரன ஆகியோர் இவ்வாறு தெரிவித்தனர்.

ரொமேஷ் பத்திரன தெரிவிக்கையில்:

சகல தரப்புக்களும் இணைந்து பெற்ற வெற்றியே இது. இதில் மருத்துவத் துறையினர், சுகாதார அதிகாரிகள் மிக முக்கிய வேலைத் திட்டத்தை முன்னெடுத்தனர். அதுபோன்று பாதுகாப்புத் தரப்பினர் இந்தச் செயற்பாடுகளை இணைக்கும் மற்றும் துரிதப்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்தனர். அவர்களின் பங்களிப்பும் அத்தியாவசியமானது. அதனை மறுக்க முடியாது - என்றார். (த)

# சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டவை

## ஆவணக் காப்பகத்தில் நாளை கருத்துரை

யாழ்ப்பாணம், ஜூலை 18
சமகாலக் கலை, கட்டடக்கலை, மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தின் 72ஆவது நிகழ்வாக சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டவை எனும் தொனிப்பொருளிலான கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு, நாளை ஞாயிற்றுக்கிழமை, முற்பகல் 10.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை இல. 199, கோவில் வீதி,நல்லூரில் உள்ள சமகாலக் கலை, கட்டடக்கலை, மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்டியங்கும் ஒளிப்படக்கலைஞரான எஸ். வருண் தனது ஒளிப்படங்கள் மற்றும் திருமண ஒளிப்படக்கலை பற்றிய கலந்துரையாடல் ஒன்றினை நிகழ்த்தவுள்ளார். நிகழ்வில் கலை ஆர்வலர்கள் அனைவரும் தவறாது கலந்து பயன்பெறுமாறு ஆவணக் காப்பகத்தின் பொது முகாமையாளர் ஸ்ரிபன் கனகலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார். (ப)

# மின்சார சபைக்கு 300 கோடி இழப்பு

## அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு



**கொழும்பு,ஜூலை 18**
**கொரோனாத் தொற்றுக் காரணமாக மக்களுக்கு வழங்கும் மின்சாரக் கட்டணச் சலுகையால் இலங்கை மின்சார சபைக்கு 300 கோடி ரூபா இழப்பு ஏற்படும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.**

எனினும் மக்களின் நெருக்கடி நிலை காரணமாக சலுகைகளை வழங்க வேண்டிய கட்டாயத்தில் அரசாங்கம் இருப்பதாக அமைச்சரவை இணை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் மே மாதம் வரையிலான காலப்பகுதியில் மின்சாரக் கட்டணத்தை செலுத்துவதற்காக மின் பாவனையாளர்களுக்கு நிவாரணத்தை வழங்குதல் தொடர்பில் அமைச்சரவையில் ஆராயப்பட்டது. 25 வீத சலுகை, கட்டணம் செலுத்த சலுகைக்காலம் வழங்குவது மற்றும் தண்டப்பணம் அறவிடாமை போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

எனினும் இந்தச் சலுகைகளைவிடவும் மேலதிகமாக சலுகைகளை வழங்குவது குறித்து ஆராய கோரிக்கை விடுத்ததற்கு அமைய, கொவிட் 19 தொற்று நிலைமையின் காரணமாக மார்ச், ஏப்ரல் மற்றும் மே ஆகிய மாதங்களில் ஒவ்வொரு மின்சாரக் கட்டணப் பட்டியலின் பெறுமதி பெப்ரவரி மாதத்தின் பெறுமதியிலும் பார்க்க அதிகமாயின் பெப்ரவரி மாதத்துக்கு சமமான தொகையை மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்காக அறவிடுதல் மற்றும் அந்த மின்சாரக் கட்டண கொடுப்பனவை பூர்த்தி செய்வதற்காக 02 மாத கால அவகாசத்தை வழங்குதல் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்துடன் மார்ச், ஏப்ரல் மற்றும் மே ஆகிய 3 மாதங்களுக்கான மின்சாரக் கட்டணத்தை தற்பொழுது செலுத்தியுள்ள பாவனையாளர்களுக்கு கட்டணத்துக்கான பற்றுச்சீட்டுக்களை விநியோகிக்கும்பொழுது அவர்களினால் கூடுதலாக செலுத்தப்பட்ட தொகையை மீள செலுத்துவதற்கு இலங்கை மின்சார சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உண்மையிலேயே மின்சாரசபை பாரிய நட்டத்தில் இயங்கி வருகின்றது. இந்நிலையில் கொவிட் வைரஸ் பரவலை அடுத்து மக்களுக்கு வழங்க வுள்ள இந்த மூன்று மாதகால கட்டணச் சலுகையால் அரசாங்கத்துக்கு 300 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

ஆனால் அரசாங்கம் அதனை கருத்தில் கொள்ளவில்லை, மக்களின் மீதான சுமையைக் குறைக்கவேண்டும் என்பதற்காகவே அரசு இவ்வாறான சலுகைகளை வழங்குகிறது - என்றார். (ஐ)

# இலங்கையை சேர்ந்த பெண் மீது தாக்குதல்

## ஒருவர் கைது

பிரான்ஸ், ஜூலை 18
பிரான்ஸில் இலங்கையைச் சேர்ந்த இளம் பெண் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவமொன்று தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த 19 வயதுடைய பெண்ணொருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிருக்கு போராடி வருகின்றார். இந்த சம்பவத்துடன் தொடர்புடைய 32 வயதான நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

வீட்டின் படுக்கை அறையில் குறித்த பெண் குருதி வெள்ளத்தில் கிடந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டார்.

உடனடியாக உதவிக்குழு அழைக்கப்பட்டது. உலங்குவானூர்தியில் வந்த மீட்புக்குழு குறித்த பெண்ணை மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றது.

குறித்த இளம் பெண்ணின் உடலில் 15 வெட்டுக்காயங்கள் இருந்த தாகவும், சமையலறை கத்தி மூலம் இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது.

தாக்குதலுக்கு இலக்கான யுவதி இலங்கையைச் சேர்ந்தவர் என முதற்கட்ட விசாரணையின் மூலம் தெரிய வந்துள்ளது. மேலதிக விசாரணைகளை அந்நாட்டுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# நெசவுத் தொழிலை மேம்படுத்துங்கள்


## தர்மபுரம் நெசவு தொழிலாளர் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூலை 18
தமது பாரம்பரியத் தொழிலான நெசவுத் தொழிலை மேம்படுத்துவதற்கு தேவையான ஊக்குவிப்பை வழங்குமாறு நெசவுத் தொழலாளர்கள் கோரியுள்ளனர்.

கிளிநொச்சி, தருமபுரம் நெசவுத் தொழிற்சாலை 1980ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டபோது, அங்கு ஏராளமானவர்கள் நெசவுத் தொழிலில் ஈடுபட்டுவந்தனர். ஊதியம் போதாமை, மற்றும், தொழில் மேம்பாடின்மை காரணமாகவே பலரும் நெசவுத் தொழிலில் ஈடுபடுவதில்லை. எனினும் தற்போது இருவர் மாத்திரமே நெசவுத் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

பாரம்பரியமாகச் செய்துவந்த தொழிலைக் கைவிடக்கூடாது என்ற நோக்கத்திலேயே அவர்கள் அந்தத் தொழிலை மேற்கொண்டுவருகின்றனர். இவர்களுக்கான மூலதனப் பொருள்களை வடக்கு மாகாணசபையினரே வழங்கிவருகின்றனர். எனவே நெசவுத் தொழிலைத் தொடர்ந்தும் மேற்கொள்ள, நெசவுத் தொழிலாளர்களுக்குத் தேவையான ஊதியத்தை அதிகரித்துத் தருமாறு கோரப்பட்டுள்ளது.

தற்போதய சூழலில் வாழ்வாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதால், குறித்த தொழிற்சாலையில் தொழிலில் ஈடுபடும் இரண்டு பெண்களும், பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ப-113)



# ஆறு சாரதிகளுக்கு ரூ. 2,27500 தண்டம்

சாவகச்சேரி, .ஜூலை 18
போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்தினர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட 6 சாரதிகளுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று 2 லட்சத்து. 27 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி நீதிவான் மன்றில் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதே இவ்வாறு தண்டம் விதிக்கப்பட்டது.

மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் இருவருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதமும், மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரம், வாகனவரிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய ஒருவருக்கு 52 ஆயிரத்து 500 ரூபாவும், மதுபோதையில் சாரதிய அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதமும், காப்புறுதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய ஒருவருக்கு 25 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (ப-9)

# இராணுவம் இன்றி கொரோனாவை கட்டுப்படுத்தி இருக்கவே முடியாது!

## மார்தட்டுகின்றார் இராணுவத் தளபதி



கொழும்பு, ஜூலை 18

நாட்டில் கொரோனா வைரஸ் ஒழிப்பில் இராணுவத்தினரின் பங்களிப்பை யாராலும் நிராகரித்துவிட முடியாது. இராணுவம் இன்றி வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடிந்திருக்குமா என்பதை நாம் கூற வேண்டியதில்லை. பொதுமக்கள் இதற்கு பதிலளிப்பார்கள் என்று இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

நாட்டில் கொரோனா பரவல் நிலைவரம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் அண்மையில் கொவிட்19 ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியுடன் நடைபெற்ற சந்திப்பில் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்திலுள்ள அனைவரும் தற்போது பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அதேபோன்று ஆலோசகர்கள் அனைவருடையதும் பி.சி.ஆர். பரிசோதனைகளும் நிறைவடைந்துள்ளன.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களிலுள்ளவர்களின் பரிசோதனை அறிக்கைகள் மாத்திரமே கிடைக்க வேண்டியுள்ளது. நாளை மாலை இந்த அறிக்கைகள் அனைத்தும் கிடைக்கப்பெறும் என்று எதிர்பார்க்கின்றோம். புனர்வாழ்வு பெற்றுவருபவர்களை பார்வையிட வருகை தந்த 116 பேருடன் தொடர்புடைய 360 பேருடைய பரிசோதனைகளும் நிறைவடைந் துள்ளன. இவர்களில் எவரேனும் தொற்றுக்குள்ளாகியிருந்தால் அவர்களுடன் தொடர்புடையவர்களை அடையாளங்காண வேண்டியேற்படும்.

இந்த வாரத்தில் மேலும் சில நோயாளர்களை இனங்காணக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

வேண்டியளவு பி.சி.ஆர். பரிசோதனைகளைச் செய்ய முடியுமானால் சிறந்தது. சுகாதாரத்துறையினரே இது பற்றி தீர்மானிக்க வேண்டும். நாடு முழுவதும் இராணுவத்தினரால் இயக்கப்பட்டு வருகின்ற 60 தனிமைப்படுத்தல் நிலையங்களில் சுமார் 7ஆயிரத்து 300 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் மாத்திரமின்றி எதிர்பாராத விதமாக சமூகத்தில் தொற்றுக்குள்ளானவர்கள் இனங்காணப்பட்டாலும் பின்வாங்காமல் இதனைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு நாம் தயாராகவே உள்ளோம் - என்றார். (து)

---

*மத்திய வங்கி பிணை முறி மோசடி:*

# 8 பேருக்கு எதிராக சி.ஐ.டி.விசாரணை

கொழும்பு, ஜூலை 18

மத்திய வங்கியின் பிணை முறிகள் மோசடி தொடர்பில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக கறுப்புப் பண சுத்திகரிப்பு சட்டத்தின் கீழ் சி.ஐ.டி. விரிவாக விசாரணைகளை முன்னெடுத்துள்ளது என்று சிரேஷ்ட அரசசட்டத்தரணி லக்மினி ஹிரியாகமவுடன் முற்பட்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஹரிப்பிரியா ஜயசுந்தர கொழும்பு பிரதான நீதிமன்றில் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நீதிவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் இது பற்றிய வழக்கு விசாரணைக்கு வந்தது. அதன்போதே மேற்கண்ட தகவலை அறிவித்தனர். இந்த விசாரணைகளின் முன்னேற்றத்தை எதிர்வரும் நவம்பர் 12 ஆம் திகதி மன்றில் சமர்ப்பிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கில் சந்தேகநபர்களான தற்போது பிணையில் உள்ள, பேப்பசுவல் ட்ரசரீஸ் நிறுவனத் தலைவர் அர்ஜுன் ஜோசப் அலோசியஸ், அந்த நிறுவனத்தின் பெயரளவிலான பிரதான நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன, பணிப்பாளர்களான ஜெப்ரி ஜோசப் அலோசியஸ், புஷ்பமித்ர குனரத்ன, சித்த ரஞ்சன் ஹுலுகல்ல, முதுராஜா சுரேந்ரன் மற்றும் பீ.சமரசிங்க ஆகியோர் மன்றில் முற்பட்டிருந்தனர்.

எனினும், முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன், அஜான் புஞ்சிஹேவா ஆகியோர் மன்றில் ஆஜராகவில்லை. அவர்கள் வெளிநாட்டில் தலைமறைவாகியுள்ளனர். (கு)

---

# ரஞ்சன் ராமநாயக்க மீதான நீதிமன்ற அவமதிப்பு உறுதி

## சட்டமா அதிபர் திணைக்களம் அறிவிப்பு

ஐ.தே.கவின் ரஞ்சன் ராமநாயக்க நீதிமன்றை அவமதித்த குற்றச்சாட்டு முழுமையாக உறுதியாகியுள்ளதாக மேலதிக மன்றாடியார் நாயகம் சரத் ஜயமான்ன உயர்நீதிமன்றில் நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளார்.

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்பான சட்டமா அதிபரின் வாதத்தை நிறைவு செய்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சிசிர டி ஆப்ரு, விஜித் மலல்கொட மற்றும் ப்ரீத்தி பத்மன் சூரசேன ஆகிய மூவரடங்கிய நீதியசர்கள் குழாம் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான மேலதிக மன்றாடியார் நாயகம் சரத் ஜயமான்ன, வழக்குக்கு பாதகமா[illegible] தம்மால் மாற்றப்படா என்று பிரதிவாதி ரஞ்சன் ராமநாயக்க நான்கு தடவைகள் கூறினார் என்று தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தை அவமதித்தமை பற்றி குற்றப்பத்திரம் தாக்கல் செய்த பின்னரும் உயர்நீதிமன்ற வளாகத்தில் வைத்து நீதிமன்றத்தை அவமதிக்கும் கருத்தை மீளப்பெறப்போவதில்லை என்று அவர் ஊடகங்களிடம் கூறியுள்ளார் என்றும் மேலதிக மன்றாடியார் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.

நீதிமன்றம் திருடர்களை தைரியப்படுத்துகின்றது, நீதிமன்றம் திருடர்களை ஊக்குவிக்கின்றது என்று ரஞ்சன் ராமநாயக்க நீதிமன்ற வளாகத்தில் கூறியிருந்தார்.

இந்தக் கருத்தின் ஊடாக ரஞ்சன் ராமநாயக்க மக்களை திசைதிருப்பமுயற்சித்துள்ளார் என்று மேலதிக மன்றாடியார் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

ரஞ்சன் ராமநாயக்க நீதிமன்றம் தொடர்பில் இவ்வாறு வெளியிட்டுள்ள கருத்துக்களின் ஊடாக நீதிமன்றம் மீது மக்கள் [illegible]ள்ள நம்பிக்கை சிதைவடையக்கூடும் என்றும் மேலதிக மன்றாடியார் நாயகம் சரத் ஜயமான்ன சுட்டிக்காட்டியுள்ளார். (து)

---

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில்

# பயிற்சி பெற்று நாடு திரும்பியவரை கைதுசெய்வதை உளவுப் பிரிவு தடுத்தது

## நாலக சில்வா ஆணைக்குழுவில் சாட்சியம்

கொழும்பு, ஜூலை 18

'ஐ.எஸ். ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பில் பயிற்சி பெற்றுவிட்டு நாடு திரும்பினார் என நம்பப்பட்ட நிலாப்தீன் ரிம்சான் என்பவரை விமான நிலையத்தில் வைத்து பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் பொறுப்பேற்று, மேலதிக விசாரணைகளுக்கு தயாரானபோது, தேசிய உளவுச் சேவை பிரதிப் பணிப்பாளர் சரத் குமார, அவ்வாறு விசாரிப்பதை நிறுத்துமாறு கோரினார் என்றும் பொலிஸ் மா அதிபர் ஊடாக அதற்கான எழுத்து மூல உத்தரவு தமக்கு அனுப்பப்பட்டதாகவும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக சில்வா தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் நேற்றுமுன்தினம் சாட்சியமளிக்கும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாத விசாரணைப் பிரிவில், அவசர நிலைமையின்போது அதனைக் கையாள எந்தத் திட்டங்களும் இருக்கவில்லை. தேசிய உளவுச் சேவைக்கும் பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கும் இடையே சுமுக உறவுகள் இருக்கவில்லை.

2015 ஆம் ஆண்டு பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் பிரதானியாக அப்போதைய பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்ககோன் என்னை நியமித்தார். அவசரகால சூழ்நிலையில் செயற்படுவதற்கான திட்டம் மற்றும் கொள்கை பற்றி புலனாய்வு ஆய்வுக்கூட்டங்களில் கேள்வி எழுப்பி வந்தேன்.

இது ஒருபுறமிருக்க, 'ஐ.எஸ். ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பில் பயிற்சி பெற்றுவிட்டு நாடு திரும்பினார் என நம்பப்பட்ட நிலாப்தீன் ரிம்சான் குறித்த விசாரணைகளைத் தொடர வேண்டாம் என்று பொலிஸ் மா அதிபரின் எழுத்து மூல உத்தரவும் அனுப்பப்பட்டது.

உண்மையில் இந்தக் கால கட்டத்தில் தேசிய உளவுப் பிரிவின் பிரதானி பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தனவின் அணுகுமுறை காரணமாக தேசிய உளவுச் சேவைக்கும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவுக்கும் இடையிலான உறவு மோசமடைந்திருந்தது.

2016 ஆம் ஆண்டில், முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவிடம் விசேட அதிரடிப் படை ஊடாக சிறப்பு ஆயுதப் பயிற்சியுடன் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவுடன் இணைக்கப்பட்ட 10 பேர் கொண்ட குழுவை உருவாக்குவது, அதற்கு பயிற்சியளிப்பது தொடர்பில் கலந்துரையாடினேன். அதற்கு முன்னாள் பொலிஸ் மா அதிபர் ஒப்புதல் அளித்தார். ஆனால் அதிரடிப் படையினர், அவர்களுடன் இணைக்கும் குழுவுக்கு ஆயுதப் பயிற்சி வழங்குவது பயனற்றது என மறுத்தனர்.

பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் பிரதானியாக அவசரகால சூழ்நிலையை கையாள ஒரு விரைவான எதிர்வினை குழுவை உருவாக்க விரும்பியதாலேயே, அத்தகைய கோரிக்கையை நான் முன்வைத்தேன்.

ஜப்பான் அரசிடமிருந்து பயங்கரவாத புலனாய்வுப் பிரிவுக்கு சிறப்பு கண்காணிப்பு வாகனம் ஒன்று கிடைக்கப் பெற்றிருந்தது. 2018 ஆம் ஆண்டில் அந்த வாகனம் ஊடாக, சந்தேக நபர்களை அடையாளம் கண்டு கைதுசெய்து நடவடிக்கைக்குப் பின்னர் அந்த வாகனம் பயன்படுத்தப்படவே இல்லை. குறிப்பிட்ட சிறப்பு கண்காணிப்பு வாகனம் சந்தேக நபர்களை அடையாளம் காண்பதற்கான அம்சத்தைக் கொண்டுள்ளது - என்றார்.

நாலக சில்வா ஜனாதிபதி மற்றும் பிரதமரை கொலைசெய்யத் திட்டம் தீட்டினார் என்ற குற்றச்சாட்டில் 2008ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு கடந்த வருடம் பிணையில் விடுவிக்கப்பட்டவர் ஆவார். (து)

## உயிர்மாய்ப்பு

கொழும்பு, ஜூலை 18
சிவில் பாதுகாப்பு பிரிவு அலுவலர் ஒருவர் தனது கடமைநேர துப்பாக்கியால் தனக்குத் தானே துப்பாக்கிச் சூடு நடத்தி உயிர்மாய்த்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அம்பாறை புத்தங்கல பகுதியில் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (த)

# ஈ.ரி.ஐ. நிதி மோசடியை மறைக்க அதிகாரிகளுக்கு 113.8 மில்லியன்

### ஜனாதிபதி ஆணைக்குழுவில் மத்திய வங்கி அதிகாரி சாட்சியம்

**கொழும்பு, ஜூலை 18**
**ஈ.ரி.ஐ. நிறுவனத்தின் நிதிமோசடியை வெளிவராமல் தடுப்பதற்காக குறித்த கண்காணிப்பு நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு 113.8 மில்லியன் ரூபா பணம் செலுத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.**

ஈ.ரி.ஐ நிறுவனத்தில் இடம்பெற்றன எனக் கூறப்படும் முறைகேடுகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் ஆராயும் விசேட ஜனாதிபதி ஆணைக் குழுவில் சாட்சியம் வழங்கும்போது இந்த விடயம் தெரியவந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
குறித்த ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் இலங்கை மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் சாட்சியம் அளித்தார்.
2012 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அந்த நிறுவனத்தின் கண்காணிப்புக்காகச் சென்றிருந்தேன் என்று அந்த அதிகாரி சாட்சியம் அளித்துள்ளார். இதன்போது ஈ.ரி.ஐ நிறுவனம் வெளியிடாதவங்கிக்கணக்கு புத்தகங்கள் காணப்பட்டமையைத் தம்மால் அறிந்துகொள்ள முடிந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.
2012ஆம் ஆண்டு வெளியான வங்கிக் கணக்குகளில் 12 பில்லியன் ரூபா இருக்கும்போது வெளிவராத வங்கி கணக்குகளில் 8.6 பில்லியன் ரூபா காணப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

## காட்டு யானைகளின் தொல்லையை எப்போதுதான் தீர்க்கப்போகின்றீர்கள்?

### கேட்கின்றனர் கல்மடுகுளம் மக்கள்

கிளிநொச்சி, ஜூலை 18
கிளிநொச்சி கல்மடுகுளத்தின் கீழ் விவசாயம் மேற்கொண்டுவரும் நெற்செய்கையாளர்களின் உற்பத்திகளை அறுவடைக்காலத்தில் ஒவ்வொரு வருடமும் காட்டு யானைகள் உணவாக்கி விடுகின்றன. பயன்தரும் தென்னை உட்பட பல கனி மரங்களையும் நாசமாக்கிவிடுகின்றன என்று அங்குள்ள விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.
இத்தகைய அழிவுகளை வருடாந்தம் நாங்கள் சுட்டிக்காட்டுகின்றோம். யானைகள் பயிர்நிலங்களுக்குள் நுழைவதைத் தடுக்க இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. சம்மந்தப்பட்ட அதிகாரிகள் எமக்கு மின்சார வேலி அமைத்து அல்லது வேறு ஏதாவது வகையில் யானைகள் வருகின்றமையைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.
இந்த வருடம் கொரோனாவால் பயிர் உற்பத்திகள் பெரியளவில் இலாபத்தைத் தரவில்லை. எஞ்சிய வருமானத்தையாவது கட்டிக்காக்க வேண்டிய கட்டாய நிலைக்குத் நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம்.
யானைகள் அங்கு நுழையும்போது பயிர்களை மட்டுமல்ல, பல குடியிருப்புக்களையும்தான் நாசமாக்கிவிடுகின்றன. நெல் எடுப்பதற்காக வீட்டு ஜன்னல்களையும் கதவுகளையும் வீடுகளில் வாசல் கதவுகளையும் கூட யானைகள் அடித்து உடைத்துவிட்டு நெல் மணிகளைத் திருடி உணவாக்கிய சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன எனத் தெரிவித்துள்ளனர். (த-113)

## கொள்ளையடிக்கச் சென்றவர் அடித்துக் கொல்லப்பட்டார்

### வாழைச்சேனையில் சம்பவம்

மட்டக்களப்பு, ஜூலை 18
மட்டக்களப்பு வாழைச்சேனையில் வீட்டின் உரிமையாளரைத் தாக்கி கொள்ளையடிக்க முற்பட்டபோது கொள்ளையர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் கொள்ளையடிக்க சென்றவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.
வாழைச்சேனை பாடசாலை வீதி மாவடி வேம்பு பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடைய பரசுராமன் நவரட்ணம் என்பவரே உயிரிழந்துள்ளார்.
வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள சுங்கம்கேணி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் வீடு ஒன்றில் இருவர் கொள்ளையடிக்கச் சென்றுள்ளனர்.
வீட்டிலுள்ளவர்களைத் தாக்கி அங்கிருந்த தங்க ஆபரணங்களை கொள்ளையடிக்க முற்பட்டனர். அதன்போது தாக்குதலுக்குள்ளான வீட்டின் உரிமையாளர் தனது உயிரை காப்பாற்றிக் கொள்ள கொள்ளையர் மீது திருப்பித் தாக்கினர். அதன்போது கொள்ளையர்களில் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார். அவருடன் சென்ற மற்றைய நபர் தப்பி ஓடியுள்ளார்.
உயிரிழந்த கொள்ளையன் பல கொள்ளைச் சம்பவங்களில் தொடர்புடையவர் என்றும் சம்பவதினமான நேற்றுமுன்தினம் பிறிதொரு வீட்டில் கொள்ளையடித்திருந்தார் என்றும் ஆரம்பவிசாரணைகளைக் கொண்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (த)

## புளி விதைகளால் இறந்தாரா கொரோனாவால் இறந்தாரா?

### சிலாபத்தில் குழப்பம்

கொழும்பு, ஜூலை 18
சிலாபம் வெல்ல தாலடி பிரதேசத்தில் கொரோனா சட்ட விதிகளை மீறி சடலம் ஒன்றை ஒருநாள் தாமதமாகி தகனம் செய்தமை தொடர்பில் உயிரிழந்தவரின் மனைவிக்கு எதிராக நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு சிலாபம் மருத்துவமனை இறப்பு விசாரணை அதிகாரி சிலாபம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.
சம்பவத்துடன் தொடர்புடைய உயிரிழந்தவரான சிலாபம் வெல்ல தாலடி பகுதியைச்சேர்ந்த 40 வயதுடைய நபர் சுவாசிப்பதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக சிலாபம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காது மறுநாள் உயிரிழந்துள்ளார்.
இதனையடுத்து அன்றைய தினமே சடலம் தொடர்பில் இடம்பெற்ற பிரேத பரிசோதனையின்போது இரண்டு புளி விதைகள் சுவாசக் குழாயில் சிக்கியதால் ஏற்பட்ட இறப்பு என்று தெரியவந்துள்ளது.
எனினும், கொவிட் - 19 வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் உயிரிழந்தவரின் உயிரியல் மாதிரி பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது.
சடலத்தை இரண்டு மணித்தியாலங்களுக்குள் தகனம் செய்ய வேண்டும் என்று திடீர் இறப்பு விசாரணை அதிகாரி உறவினர்களுக்கு உத்தரவிட்டுசடலத்தை ஒப்படைத்திருந்தார்.
எனினும், இந்த உத்தரவை மீறி உறவினர்கள் சடலத்தை மறுநாளே தகனம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர் என்று சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்த விடயம் தொடர்பில் சிலாபம் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததாக சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர். (த)

## கடன் செலுத்தும் காலத்தை நீடிக்க இந்தியாவுடன் இலங்கை பேச்சு

கொழும்பு, ஜூலை 18
இந்தியாவிடம் இருந்து பெற்றுள்ள கடன்களை மீளச்செலுத்துவதற்கான காலத்தை நீடித்துக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைகளை இலங்கையும், இந்தியாவும் மேற்கொண்டு வருகின்றன.
ஏற்கனவே இதற்கான கோரிக்கையை இலங்கையின் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இந்தியப் பிரதமரிடம் முன் வைத்திருந்தார்.
இந்தியாவிடம் இருந்து பெற்றுள்ள 962 மில்லியன் டொலர்களை வட்டியுடன் திருப்பி செலுத்தும் பொறுப்பை இலங்கை அரசாங்கம் கொண்டுள்ளது.
எனினும் தற்போதைய கொரோனா வைரஸ் தொற்று காரணமாக பொருளாதார சுமையை கருத்திற் கொண்டு குறித்த கடனை மீளச் செலுத்துவதில் கால நீடிப்பு தேவை என்று இலங்கை அரசாங்கம் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கனடாவில் தமிழர் ஒருவர்

### ரொரன்றோ பொலிஸாரால் கைது

ரொரன்றோ, ஜூலை 18
கனடாவில் பல்வேறு குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய தமிழர் ஒருவரை அந்நாட்டுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
கடத்தல், பாலியல் துஷ்பிரயோகம், போதைப்பொருள் பாவனை உள்ளிட்ட 5 குற்றச்சாட்டுக்களின் கீழ் 54 வயதுடைய ஒருவரை ரொரன்றோ பொலிஸார் கைது செய்துள்ளனர்.
இதேவேளை 2003 மற்றும் 2014 ஆண்டு காலப்பகுதியில் மூன்று வெவ்வேறு குழந்தைகளை பல சந்தர்ப்பங்களில் பாலியல் வன்கொடுமை செய்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டு 48 வயதான தமிழர் ஒருவர் கைது செய்யப்பட்டார். இந்நிலையில் கனடாவில் மீண்டும் ஒரு தமிழர் தற்போது கைதாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பெற்றோர் திருமணமானவரா என்ற கேள்வி இனி இருக்காது

கொழும்பு, ஜூலை 18
அடுத்த இரண்டு மாதங்களுக்குள் அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய டிஜிட்டல் பிறப்புச்சான்றிதழ் பத்திரத்தில் பெற்றோர் திருமணமானவர்களா/ இல்லையா என்ற கேள்வி நீக்கப்படும் என்று பதிவாளர் நாயகம் எம்.சீ. விதானகே தெரிவித்துள்ளார்.
இந்தக் கேள்வி பிள்ளைகளுக்கும் பாதிப்பானது என்பதால், பழைய பிறப்புச்சான்றிதழ் பத்திரத்தில் இருந்த இந்தப் பகுதியை புதிய பிறப்புச்சான்றிதழ் பத்திரத்தில் உள்ளடக்கவில்லை என்று அவர் கூறியுள்ளார்.
மக்களின் வசதிகளுக்காக இந்த மாத இறுதிக்குள் பிறப்பு, இறப்பு மற்றும் திருமண பதிவுச் சான்றிதழ்களின் பிரதிகளை வழங்கும் அலுவலகம் ஒன்றை குடிவரவு, குடியகல்வு திணைக்களம், ஆள் பதிவு திணைக்களம் ஆகியன அமைந்துள்ள சுஹுருபாயவில் திறக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பதிவாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார். (த)

# உள்ளூராட்சி மன்ற அதிகாரங்களை முழுமையாக நடைமுறைப்படுத்துங்கள்

### பல பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என்கிறார் வடக்கு மாகாண ஆளுநர் சார்ள்ஸ்





**யாழ்ப்பாணம், ஜூலை 18**

**உள்ளூராட்சி மன்றங்களுக்குக் காணப்படும் அதிகாரங்களை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் ஊடாக பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும், உள்ளூராட்சி மன்ற அதிகாரிகள், அனுமதியளிக்கப்படாத எந்தவொரு செயற்பாடுகளுக்கும் இடமளிக்காது பாரபட்சமின்றி செயற்படவேண்டும் என்றும் வடக்கு மாகாண ஆளுநர் பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.**





நேற்றுக் காலை வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்கள அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார் ஆளுநர்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வடக்கு மாகாணத்தில் கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக சுகாதார அதிகாரிகளுடன் இணைந்து உள்ளூராட்சி மன்றங்கள் ஆற்றிய பணிகள் பாராட்டுதலுக்கு உரியன. அந்த வகையில் மக்களோடு மிக நெருங்கிப் பழகி அவர்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் உள்ளூராட்சிமன்ற உத்தியோகத்தர்களுக்கும் ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேவேளைஉள்ளூராட்சி மன்றங்கள், வீதிகளில் காணப்படும் குப்பைகளை அகற்றுவதுடன் வீதிகளில் நடமாடும் விலங்குகளைக் கட்டுப்படுத்தி அதனூடாக நிகழும் வீதி விபத்துக்களையும் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பீ.எஸ்.எம்.சாள்ஸ், வடக்கு மாகாண பிரதம செயலாளர் பத்திநாதன், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ச.மோகநாதன், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் ஒருங்கிணைந்த சேவைகள் குழுத் தலைவர் சோனாலி தாகீர், வடக்கு மாகாண சபை திட்டமிடல் பிரதிப் பிரதம செயலாளர் உமாகாந்தன், உள்ளூராட்சித் திணைக்கள ஆணையாளர் பற்றிக் டிரஞ்சன், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினூடாக நடைமுறைப்படுத்துகின்ற உள்ளூராட்சிமன்ற அபிவிருத்தித்திட்ட முகாமையாளர் வீ.நவநீதன், பிரதேச சபைகளின் செயலாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், மாநகர சபையின் பிரதி முதல்வர் மற்றும் பதில் முதல்வர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ரி3)

## புளொட் அமைப்பினரால் வீரமக்கள் தினம்

வவுனியா, ஜூலை 18

தமிழீழ விடுதலைக் கழகத்தின் வீரமக்கள் தினம் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் வவுனியா மாவட்ட அமைப்பாளரும், நகரசபை உறுப்பினருமான க.சந்திரகுலசிங்கம் (மோகன்) தலைமையில் நேற்றுமுன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா கோவில்குளத்தில் அமைந்துள்ள உமாமகேஸ்வரன் சமாதி வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைக் கழகத்தின் தலைவரும், யாழ் . நாடாளுமன்ற உறுப்பினருமான தருமலிங்கம் சித்தார்த்தன் கலந்துகொண்டிருந்தார்.

ஆரம்ப நிகழ்வாக தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் கொடி தலைவர் த.சித்தார்த்தனால் ஏற்றிவைக்கப்பட்டது. தொடர்ந்து நினைவுச் சுடர் ஏற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து புளொட் அமைப்பின் ஸ்தாபகரும், தலைவருமான அமரர் உமாமகேஸ்வரனின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டதுடன், கழகத் தோழர்களால் மலர் தூவி அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

கடந்த 13 ஆம் திகதியிலிருந்து 16 ஆம் திகதிவரை தொடர்ந்து நான்கு நாள்கள் நடைபெற்ற இந்நிகழ்வின் இறுதிநாளான நேற்று புளொட் அமைப்பின் மத்திய குழு உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (ரி3-110)



## யாழ். மாநகர பிரதேசத்தில் நால்வர் டெங்கால் பாதிப்பு


யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பிரதேசத்தில் டெங்கு நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டோர் இனங்காணப்பட்டுள்ளனர்.

கடந்த இரு வாரங்களில் மட்டும் நல்லூர் மணல்தரை வீதியில் இருவரும், பாஷையூர் புதுக்குடியிருப்பு பகுதி மற்றும் கோவில் வீதியில் தலா ஒருவருமாக நான்கு பேர் டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையுடன், நுளம்பு பெருகுவதற்கு ஏதுவாகக் காணப்படும் குடியிருப்பு களுக்கு சிவப்பு அறிவித்தல்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, மாநகர பிரதேசத்தில் தற்போது டெங்கின் தாக்கம் குறைந்தளவே காணப்படுகிறது என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ரி3-17)





வவுனியா தாண்டிக்குளம் பகுதியிலுள்ள பேயாடிக் கூழாங்குளம் இராணுவ முகாமுக்குச் சொந்தமான பெயர்ப்பலகை சேத மாக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் விபத்துக்கள் ஏற்பட்டுள்ளமைக்கான தடயங்கள் எவையும் தென்படவில்லை எனவும், இது எவ்வாறு சேதமாக்கப்பட்டது என்பது குறித்து விசாரணைகள் நடைபெற்றுவருகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3-110)

## கொஸ்கொட தாரக்கவின் சகாக்கள் இருவர் கைது

கொழும்பு, ஜூலை 18

கொஸ்கொட தாரக்கவின் நெருங்கிய சகாக்கள் இருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பாதாள உலகக்குழு உறுப்பினரான கொஸ்கொட தாரக்கவின் மிக நெருங்கிய சகாக்களான 34 வயதுடைய பெண் ஒருவரும், 43 வயதான ஆண் ஒருவருமே இவ் வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ரி1)





கிளிநொச்சி, உருத்திரபுரம் 8ஆம் வாய்க்கால் பகுதியில் அமைந்துள்ள ஆரோபணம் இளைஞர் இல்லத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மண்டபமும் புனர மைக்கப்பட்ட கட்டடத் தொகுதியும் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்ட கையால் ஆசீர்வதித்து திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஆரோபணம் இளைஞர் இல்ல இயக்குநர் அருட் திரு யூட் அமலதாஸின் தலைமையில் இந்த நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன. (ரி3-222)

# நன்கொடையாளர்களின் உதவிகளூடாக மருத்துவமனைகளை நவீனப்படுத்தலாம்

## வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் தெரிவிப்பு

**பருத்தித்துறை, ஜூலை 18**

**தற்போதைக்கு வரவு – செலவுத் திட்டம் வரப்போவது இல்லை. அவ்வாறு வந்தாலும் மருத்துவமனைக்கு என்று பெருந்தொகையான நிதியை ஒதுக்குவது சந்தேகம். இந்த நிலையில் நன்கொடையாளர்கள், நலன் விரும்பிகள் மூலம் மருத்துவமனைகளை நவீனப்படுத்தலாம் என வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**



பல நன்கொடையாளர்களின் நிதியுதவி மற்றும் அன்பளிப்புக்கள் மூலம் பருத்தித்துறை ஆதார மருத்துவமனை மீளெழுச்சி பெற்றுள்ளது. அவ்வாறு உதவிசெய்த நன்கொடையாளர்களைக் கௌரவப்படுத்தும் வகையில் கடந்த புதன்கிழமை சிலருக்கு நன்கொடையாளர் விருது வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்ததுடன், துரித கதியில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகளையும் அவர் வெகுவாகப் பாராட்டினார்.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் கமலநாதன் தெரிவித்ததாவது: பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் விடுதிகளிலும் அலகுகளிலும் மலசலகூடங்கள் மற்றும் குளியல் அறைகள் போன்றன பயன்படுத்த முடியாத அளவுக்கு கடந்த 3 வருடங்களாக பழுதடைந்து காணப்பட்டன. நோயாளர்களின் நலன்கருதி ஏப்ரல் மாதம் 20ஆம் திகதியிலிருந்து துரித புனரமைப்புத் திட்டம் நன்கொடையாளரின் உதவியோடு ஆரம்பிக்கப்பட்டது. அரச நிதி ஒதுக்கீட்டை எதிர்பார்த்து காத்திராமல் எங்களுடைய மருத்துவமனையை நாங்கள் புனரமைப்போம் என்று எமது நன்கொடையாளர்கள் ஒவ்வொரு விடுதிகளையும் அலகுகளையும் பொறுப்பெடுத்து புனரமைத்து வருகின்றார்கள். இன்னும் சில விடுதிகளும் அலகுகளும் நன்கொடையாளர்களால் பொறுப்பெடுக்கப்பட்டு புனரமைப்புக்காக தயார்ப்படுத்தல் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வைத்தியசாலையில் காணப்படுகின்ற 292 கட்டில்களும் திருத்தம் செய்யப்பட்டு வர்ணம் பூசப்பட்டுள்ளன. அவற்றுக்கான மெத்தைகளும் புதிதாக கொள்வனவு செய்யப்பட்டுள்ளன - எனத் தெரிவித்துள்ளார். (ரி3-422)

# நல்லூர் சூழலில் அலங்காரப் பணிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 18

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு அலங்காரப் பந்தல்கள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆலயத்துக்கு முன்பாகச் செல்லும் பருத்தித்துறை வீதியில் வழமையாக அமைக்கப்படும் பந்தல் அமைக்கும் பணிகள் இம்முறையும் இடம்பெற்று வருகின்றன.

தண்ணீர்ப் பந்தலில் இம்முறை தாகசாந்தி மற்றும் அன்னதானம் என்பன வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எ சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை ஆலயச் சுற்றாடலைப் புனித பிரதேசமாக வைத்திருக்கும் முகமாக ஆலய நிர்வாகத்தினரால் ஆலயத்தைச் சுற்றி ஆலயக் கொடிகள் கட்டப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ரி3-17)

# கந்தகாட்டில் இதுவரையில் 5000 பி.சி.ஆர். பரிசோதனைகள்



கொழும்பு, ஜூலை 18

கொரோனா தொற்று தொடர்பில் கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் அடையாளம் காணப்பட்டவர்களுக்கு, இதுவரை 5000 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம், இராஜாங்கனை பிரதேசத்தில் 12 ஆயிரம் பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இரண்டாவது முறையாகவும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ரி2)





வவுனியா, ஓமந்தைப் பகுதியில் நிரந்தர வீடு இல்லாமல் அசௌகரியங்களை எதிர்நோக்கிய குடும்பம் ஒன்றுக்கு நியூசிலாந்து நல்வாழ்வு மையத்தின் நிதியுதவியுடன் ஜீவஊற்று அன்பின் கரம் அமைப்பால் கடந்த சனிக்கிழமை வீடு அமைத்து அவர்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிகழ்வில் ஜீவஊற்று அன்பின் கரத்தினுடைய நிர்வாக உறுப்பினர்கள் , மக்கள் நல்வாழ்வு மையம் அமைப்பினருடைய இலங்கைக்கான நிர்வாக உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ரி3-222)

# பனை வெல்லத்துக்கு யாழில் பெரும் கிராக்கி

## திடீரென அதிகரித்தது விலை

யாழ்ப்பாணம், ஜூலை 18

ஆடிப்பிறப்பை முன்னிட்டு பனை வெல்லத்தின் விலை நேற்றுமுன்தினம் அதிகரித்துக் காணப்பட்டது.

பனை வெல்லம் ஒன்று 100 ரூபா முதல் 150 ரூபா வரைக்கும் உழுந்து கிலோ 750 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

இதேவேளை, கடந்த ஆண்டைவிட இவ்வாண்டில் தற்போதைய சூழ்நிலையில் பனை வெல்லத்தின் உற்பத்தி மிகக் குறைந்தளவே காணப்படுகிறது என பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்கள் தெரிவித்துள்ளன. (ரி3-17)

# வேட்பாளர் ஒருவர் கைது

கொழும்பு, ஜூலை 18

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் பொதுத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த வேட்பாளர் வாள், தடி போன்ற வற்றை வைத்திருந்தமை மற்றும் அச்சுறுத்தல் தொடர்பிலான குற்றச்சாட்டிலேயே குளியாப்பிட்டி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் சில நபர்களுடன் கிதலவ எத்தறுவ பிரதேச வீடு ஒன்றில் நுழைந்து அச்சுறுத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர் குளியாப்பிட்டி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (ரி2)


# வழமைக்குத் திரும்பியது வெலிசறை படை முகாம்

கொழும்பு, ஜூலை 18

கொரோனாத் தொற்றுக் காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டிருந்த வெலிசறை கடற்படை முகாம் மற்றும் வைத்தியசாலை சுகாதார ஆலோசனைகளுக்கு அமைய தற்போது முழுமையாகத் திறக்கப்பட்டுள்ளன என்று கடற்படை ஊடகப்பேச்சாளர் இந்திக சில்வா தெரிவித்துள்ளார்.

அத்துடன், கடற்படை வைத்தியசாலையில் தற்போது வழமையான சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும், முகாமின் வேலைகள் வழமைபோன்று இடம்பெற்று வருகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட கடற்படை உறுப்பினர்களில் 899 பேர் இதுவரையில் குணமடைந்துள்ளமையுடன், மேலும் 7 பேர் சிகிச்சை பெற்று வருகின்றமையும் குறிப்பி டத்தக்கது. (ரி3)



# கரைச்சி பிரதேச சபையால் நீர்த்தாங்கி இடித்தழிப்பு

கிளிநொச்சி, ஜூலை 18
கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள உருத்திரபுரம் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் செருக்கன் குடியிருப்பில் தனியார் நிறுவனம் ஒன்றால் அனுமதி பெறப்படாது அமைக்கப்பட்ட நீர்த்தாங்கி எனத் தெரிவித்து கரைச்சி பிரதேச சபையினால் நீர்த்தாங்கி இடித்து அகற்றப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச சபையின் கனரக வாகனங்கள் மூலம் நேற்று முன்தினம் பிற்பகல் இந்த நீர்த் தாங்கி மற்றும் அதனோடு இணைந்த மலசலகூடம் என்பன இடித்து வீழ்த்தப்பட்டுள்ளன என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி நகரிலிருந்து சுமார் 12 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள கிராமத்தில் அமைக்கப்பட்டு வருகின்ற உப்பளம் ஒன்றில் செருக்கன் குடியிருப்பைச் சேர்ந்த மக்கள் பலர் பணியாற்றி வருகின்றனர். உவர் பிரதேசமாகக் காணப்படும் இக் கிராமத்துக்கு நீர் விநியோகம் மேற்கொள்ளவேண்டும். ஆனால் கரைச்சி பிரதேச சபையினரால் சீராக குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படுவதில்லை. இவர்களின் குடிதண்ணீர் உள்ளிட்ட நீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில் தனியாரால் அமைக்கப்பட்ட நீர்த் தாங்கி மற்றும் அதனுடன் இணைந்த மலசலகூடம் என்ப னவே பிரதேச சபையால் இடித்து அகற்றப்பட்டுள்ளன.

இவ் விடயம் குறித்து கரைச்சி பிரதேச சபை தவிசாளரிடம் வினவிய போது,

இடிக்கப்பட்ட நீர்த் தாங்கி மற்றும் அதனுடன் இணைந்த மலசலகூடம் என்பன அனுமதி பெறப்படாது அமைக்கப்பட்டவை. இது தொடர்பில் பொது அமைப்புக்கள், விவசாய அமைப்புக்கள் மற்றும் மக்கள் ஆகியோரால் வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் பிரதேச சபை உத்தியோகத்தர்களால் களப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு மூன்று தடவைகள் கடிதம் மூலம் அறிவித்தும் அவர்கள் உரிய அனுமதி பெறவில்லை. எனவேதான் சட்டரீதியாக உடைத்துள்ளோம். அத்துடன் இடித்து அகற்றப்பட்ட நீர்த்தாங்கியானது உப்பள நிர்மாணத்துக்காக உருவாக்கப்பட்டதே தவிர மக்களின் நீர்த்தேவையைப் பூர்த்திசெய்ய அல்ல எனவும், குறித்த செருக்கன் பகுதிக்கு கடந்த மூன்று வருடங்களாக எமது பிரதேச சபையாலேயே குடிதண்ணீர் விநியோகிக்கப் பட்டு வருகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ரி3-35, 214)

## பணயக் கைதிகளை மீட்க புதிய குழு

கொழும்பு, ஜூலை 18
விமானங்கள் கடத்தப்படல் மற்றும் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்படல் போன்ற சந்தர்ப்பங்களில் சர்வதேச விமான போக்குவரத்து விதிமுறைகளுக்கு அமைய பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்காக குழு ஒன்று இலங்கையில் முதன்முறையாக நியமிக்கப்பட்டுள்ளது.

ஒன்பது சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் இந்தக் குழுவில் உள்ளடங்குகின்றனர். அவர்களுக்கான நியமனக் கடிதங்களை முன்னாள் பாதுகாப்பு செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன பாதுகாப்பு அமைச்சில் வைத்து நேற்று வழங்கினார். (ரி1)

## போதைப்பொருள்களுடன் கைதாகினர் மூவர்

கிளிநொச்சி, ஜூலை 18
கிளிநொச்சி, சிவபுரம் பகுதியில் போதைப்பொருள்களுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் மது ஒழிப்புப் பிரிவினருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய கடந்த புதன்கிழமை இடம்பெற்ற சுற்றிவளைப்பின் போதே இந்த மூவரும் கைதுசெய்யப்பட்டு, கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்களிடமிருந்து 310 மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் 7.5 கிலோகிராம் கஞ்சா என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்தியபோது அவர்களை எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ரி3-113)

## மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதன்படி நாளை ஞாயிறு காலை 8 மணியிலிருந்து மாலை 5மணி வரை **யாழ்.பிரதேசத்தில்** பலாலி வீதி திருநெல்வேலி சந்தியிலிருந்து பலாலி வீதி வேம்படி சந்தி வரை, பனிக்கர் லேன், திண்ணை விடுதி, தலங்காவில் பிள்ளையரார் கோவிலடி, திருநெல்வேலி கொமர்ஷல் வங்கி, தபால் பெட்டி சந்தி, கந்தர்மடம் சந்தி, இலுப்பையடி சந்தி, சிவன் அம்மன் வீதி, அன்னசத்திர வீதி, ஆரியகுளம் சந்தி, அம்மன் வீதி கந்தர்மடம், நாவலர் வீதியில் ரயில் கடவையிலிருந்து அம்பலவாணர் வீதி ஆத்தியடி வரை, பலாலி வீதி பருத்தித்துறை வீதியிலிருந்து வீரமாகாளி கோவில் வரை, ஆரியகுளம் சந்தியிலிருந்து இராசாவின் தோட்ட சந்தி வரை, கம்பஸ் லேன், திண்ணைவேலி புறப்பர்ட்டி டெவலப்பர்ஸ் பிறைவேற் லிமிற்ரெட், நொதேர்ண் சென்றல் கொஸ்பிற்றல், Bright Inn, AVNORபிறைவேற் லிமிற்ரெட், டம்றோ பலாலி வீதி, IBC தமிழ், BCCAS, ஆஸ்பத்திரி வீதி வேம்படி சந்தியிலிருந்து கஸ்தூரியார் வீதி சந்தி வரை, மகாத்மா வீதி, முனீஸ்வரன் வீதி, கந்த பரசேகரம் வீதி, யாழ். போதனா வைத்தியசாலை, யாழ் . போதனா வைத்தியசாலையின் மூன்று மாடிக் கட்டடத் தொகுதி, கொமர்ஸல் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, இலங்கை வங்கி, Tilco விடுதி, யாழ்ப்பாணம் பல்கலைக் கழக ஆண்கள் விடுதி, யாழ்ப்பாணம் கார்கில்ஸ் பி.எல்'.சி, அபி கட்டடம், யாழ். ஹோட்டல் பிறைவேற் லிமிற்ரெட், யாழ் மதர் கெயர் பிறைவேற் லிமிற்ரெட், பொம்மைவெளி, நாவாந்துறை, முத்தமிழ் வீதி, மீனாட்சிபுரம், பண்ணை சுற்றுவட்ட வீதி, கண்ணகிபுரம், பண்ணை சுகாதாரக் கிராமம், யாழ். சிறைச்சாலை, யாழ். பொலிஸ் நிலையம், யாழ். துரையப்பா விளையாட்டரங்கு, யாழ். கோட்டை பிரதேசம் ஆகிய இடங்களிலும், **கிளிநொச்சி பிரதேசத்தில்** இரத்தினபுரத்திலிருந்து இரணைமடு வரை, திருவையாற்றிலிருந்து இரணைமடு வரை, ஜெயந்திநகர், செல்வநகர், கனகபுரம், அம்பாள்குளம், உருத்திரபுரம், கோணாவில், ஸ்கந்தபுரம், அம்பலப்பெருமாள்குளம், அக்கராயன் குளத்திலிருந்து வன்னேரிக்குளம் வரை, ஜெயபுரத்திலிருந்து வலைப்பாடு வரை, பல்லவராயன்கட்டிலிருந்து வெள்ளாங்குளம் வரை, நீதிபுரம், அம்பகாமம், ஒலுமடுவிலிருந்து 3ஆவது மைல் கல் வரை,

கற்சிலைமடுவிலிருந்து முத்தையன்கட்டுகுளம் வரை, வற்றாப்பளை, மாமுனை. மாஞ்சோலை, ஒட்டுசுட்டான் சந்தியிலிருந்து நெடுங்கேணியூடாக வெடிவைத்த கல் வரை, கருவேலங்கண்டல், குளவிசுட்டான், நயினாமடு, மதியாமடு, மாங்குளம், வன்னிவிளாங்குளம், அம்பாள்புரம், செல்வபுரம், ஒட்டறுத் தகுளம், மூன்றுமுறிப்பு, பாண்டியன்குளம், பொன்னகர், புவரசங்குளம், விநாயகபுரம், அனிஞ்சியன்குளம், மல்லாவி, யோகபுரம், தேறாங்கண்டல், தெனியங்குளம், துணுக்காய், கல்விளான், ஆனந்தபுரம், கிளிநொச்சி வைத்தியசாலை, பாரதிபுரம், கிருஷ்ணபுரம், மலையாளபுரம், அறிவியல்நகர், முறிகண்டி, கொக்காவில், ஐயன்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.

## இன்றைய நாள்

**மேடம்:** சொத்து வாங்குவது பற்றிய பிரச்சினைக்கு தீர்வு காண்பீர்கள். பிரியமானவர்களை சந்திப்பதால் மகிழ்ச்சி அதிகரிக்கும். தாய்வழி உறவினர்களுடன் இருந்து வந்த மனஸ்தாபங்கள் நீங்கும்.

**இடபம்:** அலுவலக நண்பர்கள் உங்களின் மீது பொறாமை கொள்ளும்படியான சாதனைகள் பல செய்வீர் கள். பெண்களின் நீண்ட நாள் கவலை தீரும்.

**மிதுனம்:** வெளிவட்டாரத்தில் புது நபர்களின் அறிமுகம் கிடைக்கும். அலுவலக ரீதியான பயணங்கள் சிறப்பாக அமையும். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்து செல்வது நல்லது.

**கடகம்:** சிக்கனமாக இருக்க வேண்டுமென்று திட்டமிட்டு செயல்படுவீர்கள். அலுவலகத்தில் நிலுவைப் பணிகளை உடனே முடிக்க வேண்டும் என நினைப்பீர்கள். வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும்.

**சிம்மம்:** அத்தியாவசிய செலவுகளைப் பற்றிக் கவலை கொள்வீர்கள். எதிலும் திட்டமிட்டு செயல்படுவது நல்லது. அலுவலகத்தில் புதிய நபர்களிடம் பேசும் போது கவனமாக இருக்கவும்.

**கன்னி:** கடந்த சில நாட்களாக மனதை அரித்து வந்த கவலைகளிலிருந்து விடு படுவீர்கள். கலைத்துறையினருக்கு நன்மை ஏற்படும். குடும்பத்துடன் மகிழ்ச்சியாக பொழுதை கழிப்பீர்கள்.

**துலாம்:** எல்லோரிடமும் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வீர்கள். ரகசியங்களை வெளியிட்டு சிக்கலில் மாட்ட வேண்டாம். உறவினர்களால் வீண் செலவு ஏற்படும். மகளுக்கு நல்ல வரன் அமையும்.

**விருச்சிகம்:** வியாபார விஷயமாக மேற்கொள்ளும் பயணத்தில் பலன் கிடைக்க தாமதம் ஆகலாம். பெண்களுக்கு தெய்வ வழிபாடு ஒன்றுதான் நிம்மதியைத் தரும்.

**தனுசு:** கடந்த காலத்தில் செய்த தவறுகளை எண்ணி வருத்தப்படுவீர்கள் . புதிய தொழில் தொடங்க நண்பர்கள் உறுதுணையாக இருப்பர். தரமற்ற உணவை வாங்க நேரிடலாம்.

**மகரம்:** பிரியமானவர்களுடன் பொழுதைக் கழிப்பீர்கள். அலுவ லகத்தில் உங்களின் திறமைகேற்ப நற்பலன்கள் கிடைக்கும். கைமாற்றாக வாங்கிய பணத்தை திருப்பித் தருவீர்கள்.

**கும்பம்:** கலைஞர்களுக்கு புதிய திட்டங்கள் வெற்றியை தேடிதரும். வியா பாரிகளுக்கு கொடுத்த கடன் வசூலாகும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் கைகூடும்.

**மீனம்:** அலுவலகத்தில் மாற்றத்தை எதிர்நோக்கி இருப்பவர்களுக்கு நல்ல தகவல்கள் உண்டு. பெண்களுக்கு அரசாங்கத்தின் ஆதரவு கிடைக்கும்.

# சுகாதார வழிகாட்டல்களை கண்காணிக்க விசேட பிரிவு

## சுகாதார அமைச்சர் பவித்திரா பணிப்பு

**கொழும்பு, ஜூலை 18**
**சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல்களை பொதுமக்கள் பின்பற்றுகின்றனரா என்பது தொடர்பில் கண்காணிப்பதற்கு சுகாதார அமைச்சின் கீழ் விசேட பிரிவொன்றை ஸ்தாபிக்குமாறு அமைச்சின் செயலாளரை அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி பணித்துள்ளார்.**



கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக மேலும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்காக சுகாதார அமைச்சினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மீளாய்வுக்குழு நேற்றுக் கூடியபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

போக்குவரத்து , மருந்தகங்கள் , விற்பனை நிலையங்கள் , வைத்தியசாலை மற்றும் வேலைத்தளங்களில் கட்டாயம் பேணப்பட வேண்டிய சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா என ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தெரிவித்த அவர் கொரோனா வைரஸ் பரவல் ஆபத்து தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்துமாறும் ஆலோசனை வழங்கியுள்ளார். (ரி1)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் சட்டவிதிமீறல் முறைப்பாடுகள் அதிகரிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 18
பொதுத்தேர்தலுக்கு இன்னும் 3 வாரங்கள் உள்ள நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் சட்ட விதிகளை மீறிச் செயற்பட்டமை தொடர்பாக, மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் முறைப்பாடுகளை பொறுப்பேற்கும் அலுவலகத்துக்கு இதுவரை 90 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதனடிப்படையில், ஏறாவூர் பொலிஸ் பிரிவில் 22 முறைப்பாடுகளும், மட்டக்களப்பு, வாழைச்சேனை, காத்தான்குடி ஆகிய பொலிஸ் பிரிவுகளில் தலா 20 முறைப்பாடுகளும், களுவாஞ்சிக்குடிப் பொலிஸ் பிரிவில் 3 முறைப்பாடுகளும், வாகரைப் பொலிஸ் பிரிவில் 2 முறைப்பாடுகளும், வவுணதீவு மற்றும் மங்கள கம பொலிஸ் பிரிவுகளில் தலா ஒரு முறைப்பாடும், ஒட்டுமொத்த ரீதியில் ஒரு முறைப்பாடுமாக மொத்தம் 90 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இந்த முறைப்பாடுகளில் தேர்தல் சட்டவிதிமீறல் தொடர்பாக 88 முறைப்பாடுகளும், தேர்தல் வன்முறைகள் தொடர்பில் 2 முறைப்பாடுகளும் பதிவாகியிருந்தன.

இவற்றில் 87 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை முடிவுறுத்தப்பட்டுள்ளன எனவும், ஏனைய 3 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் அரசாங்க அதிபருமான கலாமதி பத்மராஜா தெரிவித்தார். (ரி2-46)

## காபன் குறைந்த தேர்தல் பிரசாரம்

### ஜனாதிபதிக்கு விருது



கொழும்பு, ஜூலை 18
காபன் குறைந்த ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்துக்கு வழங்கப்படுகின்ற 'சூழல்நேய பிரசார சான்றிதழ்' ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ளது. சுபீட்சத்தின் நோக்கு பிரகடனத்தில் சுற்றாடல் கொள்கை உருவாக்க குழுவின் பிரதிநிதிகளால் இந்த சான்றிதழ் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது.

ஜனாதிபதியின் தேர்தல் பிரசாரம் சுற்றாடல் பாதிப்பு மற்றும் பசுமை வாயு வெளியேற்றம் முற்றாக இல்லாத பிரசாரம் என்பதை பசுமை வாயு முகாமைத்துவம் தொடர்பான சான்றிதழ் வழங்குவதற்கு அதிகாரமுள்ள சர்வதேச தரத்தைப் பெற்ற நிலைபேண் எதிர்காலத்துக்கான குழு என்ற சுற்றாடல் அமைப்பு உறுதி செய்துள்ளது.

நாடு முழுவதும் 150க்கும் மேற்பட்ட கூட்டங்களை பொலித்தீன் சுவரொட்டி, பதாகைகள் எதுவுமில்லாமல் நடத்துவதற்கு ஜனாதிபதி வேட்பாளரான கோத்தாபய ராஜபக்ஷ தீர்மானித்திருந்தார்.

மக்கள் சந்திப்புகளுக்கு வருகை தரும் வாகனங்கள் மற்றும் பொதுமக்களால் சுற்றாடலுக்கு வெளியிடப்படும் காபன் அளவு சர்வதேச முறைமையில் கணக்கிடப்பட்டது. அவ்வாறு வெளியிடப்படும் காபன் அளவை உள்வாங்குவதற்காக 21,000 மரங்கள் நடப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 26,000 மரக் கன்றுகள் நடப்பட்டு இதுவரை காலமும் பராமரித்து வருகின்றமையால் காபன் தாக்கம் முழுமையாகத் தடுக்கப்பட்டுள்ளது என்பதை "தேசிய தூய்மை உற்பத்தி மத்திய நிலையம்" கணக்கிட்டுள்ளது. இந்த காலவரையறையில் சுற்றாடல் பாதிப்பு மற்றும் காபன் வெளியேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு சுற்றாடல் பாதிப்பு முற்றாக இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது என்று இலங்கை தராதர அங்கீகார சபை அறிவித்துள்ளது. (ரி1)

## பரீட்சைகளின் திகதிகளில் மாற்றம்

கொழும்பு, ஜூலை 18
இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் மோட்டார் வாகனப் பரிசோதகர்களுக்கான தடைதாண்டல் பரீட்சை 2017 (2020), அதிபர் சேவையின் இரண்டாம் தர அதிகாரிகளுக்கான தடைதாண்டல் பரீட்சை 2019 (2020) ஆகிய பரீட்சைகளை ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில் அவை பிற்போடப்பட்டுள்ளன எனப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாகவே இந்தப் பரீட்சைகள் பிற்போடப்பட் டுள்ளன. இந்தப் பரீட்சைகள் மீண்டும் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனப் பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார். (ரி2)

## பாடசாலை மாணவர்களுக்கு போசாக்குணவுத் திட்டம்

கொழும்பு, ஜூலை 18
தெரிவுசெய்யப்பட்ட 7ஆயிரத்து 716 பாடசாலைகளில் தரம் 1 முதல் 5 வரையான மாணவர்களுக்குப் போசாக்குணவு வழங்கும் வேலைத்திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வேலைத்திட்டம் நேற்றையதினம் கல்வி அமைச்சின் செயலாளர் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆலோசனையின் கீழ் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ரி1)

## மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் கடமைகளில் 329 வாகனங்கள்



மட்டக்களப்பு, ஜூலை 18
எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல் கடமைகளுக்காக 329 வாகனங்கள் போக்குவரத்துக் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளன என மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தேர்தல் நடவடிக்கைகளுக்காக 428 வாக்குச் சாவடிகள், 74 வலயங்கள் மற்றும் தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள விசேட பிரிவுகளுக்குமாக இந்த 329 வாகனங்களும் பயன்படுத்தப்படவுள்ளன. இதற்காக இந்த மாவட்டத்திலுள்ள அரச திணைக்களப் பிக்கப் வாகனங்கள் 149, இலங்கைப் போக்குவரத்து சபைக்குரிய பஸ்கள் 50, தனியார் மினிபஸ்கள் 30, சிறியரக தனியார் வான்கள் 30 உட்பட கொழும்பிலிருந்து ஏனைய திணைக்கள பிக்கப், ஜீப் போன்ற வாகனங்கள் 70 உள்ளடங்கலாக மொத்தம் 329 வாகனங்கள் பயன்படுத்தப்படவுள்ளன என மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் அரசாங்க அதிபருமாகிய கலாமதி பத்மராஜா அரசாங்கத் தகவல் திணைக்கள மாவட்ட ஊடகப் பிரிவுக்குத் தகவல் தெரிவித்தார்.

இதேவேளை, நாடாளுமன்ற பொதுத்தேர்தல் எதிர்வரும் ஓகஸ்ட் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளதுடன் வாக்கெண்ணும் பணிகள் தேர்தலுக்கு மறுதினமாகிய ஓகஸ்ட் 6 ஆம் திகதி மட்டக்களப்பு இந்துக்கல்லூரி மற்றும் மகாஜனக் கல்லூரிகளில் கொரோனாத் தொற்று முன்னெச்சரிக்கை சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி2-46)

## பசு மாடுகளை கடத்திய இருவர் கைது

மட்டக்களப்பு, ஜூலை 18
சட்டவிரோதமாக உரிய அனுமதிப்பத்திரமின்றி கொண்டு செல்லப்பட்ட 40 பசு மாடுகளை சவளக்கடைப் பொலிஸார் மீட்டுள்ளனர். பசு மாடுகளைச் சட்டவிரோதமாக கால் நடையாக நடத்திக் கொண்டு சென்ற இருவரையே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்பகுதியில் இருந்து, அம்பாறை மாவட்டம் சவளக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்ட பசு மாடுகளே கடந்த புதன்கிழமை நள்ளிரவு மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்களை கல்முனை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ரி2)

## பணியாள்கள் தேவை

ஆடைத் தொழிற்சாலை ஒன்றிற்கு (காமன்ஸ்) தையல் இயந்திரம் இயக்குபவர்களும் ஏனைய இயந்திரம் இயக்குபவர்களும் பயில விரும்புபவர்களும் விரும்பத்தக்கது.

**077 470 1495**

குறைந்த செலவில் நிறைவான சம்பளத்துடன் கனடா செல்லும் வாய்ப்பு !

**CHILD CARE(GIRLS )**
வயது 18 – 25.
கற்கையுடன் கூடிய வேலை வாய்ப்பு

**CARE GIVER (GIRLS )**
வயது 21 – 37
கல்வி தகைமை – சுகாதார துறையில் டிப்ளோமோ

**CLEANERS (MALE AND FEMALE)**
London மற்றும் Canada
வயது 25 – 45

Supreme Education and Investment Consulting (Pvt) Ltd
Tel: 076 2358881, 071 2000692 | E-mail: supreme.education@yahoo.com

## தவறிவிட்டது



காது கேட்கும் கருவி
(EAR Phone)
வவுனியா வைத்தியசாலைக்கு கிளினிக் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருக்கும்போது வைத்தியசாலைக்கும் கந்தசாமி ஆலயத்திற்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

**077 668 8934 செ.குமரன்**

## மணமகள் தேவை


சீதாராம சர்மா என்பவர், தன்னுடைய மகனுக்கு அதே குலத்தில் மணப் பெண்பார்க்கிறார். மகள் கொழும்பில் MBBS Doctor, Final Year Student ஆக இருக்கிறார். 1993 இல் பிறந்தவர் உத்திராடம், 7 இல் செவ்வாய் உண்டு. A/L படித தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**077 539 3728**

(ச.32662) (13.17)

# வவுனியாவில் முககவசம் அணியாமல் செல்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை

வவுனியா, ஜூலை 18



வவுனியாவில் முகக் கவசங்கள் அணிந்து வீதிகளில் செல்லாமை, உரிய முறையில் சுகாதாரத் துறையினரின் பாதுகாப்பை பின்பற்ற தவறியவர்களுக்கு எதிராக பொலிசார் கடுமையான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கையில் கொரோனா இரண்டாவது அலைக்கு வாய்ப்புள்ளது என்று எச்சரிக்கப்பட்டுள்ளதை அடுத்தே வவுனியாவில் மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-110)

## வீடு வாடகைக்கு

மொறட்டுவ, இரத்மலானைக்கு அருகில் உள்ள சொய்ஷாபுர தொடர் மாடியில் வீடு வாடகைக்குண்டு. சிறிய குடும்பம், மாணவர்கள் விரும்பத்தக்கது.

**077 131 9151**

## தச்சுத் தொழிலாளர் தேவை

வெள்ளவத்தையிலுள்ள தச்சுத் தொழிற்சாலை ஒன்றிற்கு தொழிலாளர் தேவை. தங்குமிட வசதி உண்டு. (ச.32948) (13.17)

**077 788 2430**

## வீடு வாடகைக்கு விடப்படும்

**கோப்பாய் கல்வியியற் கல்லூரிக்கு** அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடு ஒன்று **(03 Bed room) நாள், கிழமை, மாத, வருட வாடகைக்கு விடப்படும்.**
வாகனத்தரிப்பிட வசதிகளும் உண்டு.
**(அரச நிறுவனங்கள், களஞ்சியசாலைகள், தனியார் நிறுவனங்களுக்கும் வழங்கப்படும்.)**

**077 613 9931, 071 011 0590**

## யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)

திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
பதிவு இலக்கமும் திகதியும் ஜே/1639-12.05.1976
அங்கத்தவர் பட்டியல்கள் காட்சிப்படுத்தல்

மேற்படி சங்கத்தின் அனைத்துக் கிளைகளுக்குமான கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் விரைவில் நடைபெறவுள்ளன. இது தொடர்பாக வாக்களிக்கத் தகுதி பெற்ற அங்கத்தவர் பட்டியல்கள் 30.06.2020 இல் மூடப்பட்டு 18.07.2020ஆம் திகதியிலிருந்து 31.07.2020ஆம் திகதிவரை எமது கிளை நிலையங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. - இவ் அங்கத்தவர் பட்டியலில் சங்கத்தின் துணைவிதிப் பிரிவு 28.1.14 இற்கமைய செயற்பாடு உடையவர்களை இனங்காணக் கூடியவாறு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ் அங்கத்தவர் பட்டியல்கள் தொடர்பாக மேன்முறையீடுகள் அல்லது ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின் அங்கத்தவர்கள் எழுத்து மூலமான பதிலை 05.08.2020 ஆம் திகதிக்குப் பிந்தாது "செயலாளர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து). திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்" என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

17.07.2020 (ஐ.13236) (13.17) **செயலாளர்**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## ஏலவிற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாயபீடத்தின் ஒருங் கிணைந்தபண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தின் பின்வரும் கால்நடைகள் 27.07.2020 அன்று திங்கட்கிழமை ஏலத்தில் விற்பனைசெய்யப்படும்.

**ஆடுகள்:-**

| இல | இலக்கம் | இனம் | வயது | கடா/மறி |
|---|---|---|---|---|
| 01 | 4303-0919-0013 | உள்ளூர் | 6 years | மறி |
| 02 | 4303-0919-0014 | உள்ளூர் | 6 years | மறி |
| 03 | 4303-0919-0015 | உள்ளூர் | 6 years | மறி |
| 04 | 4303-0919-0018 | ஜமுனாபாரிகலப்பு | 6 years | மறி |
| 05 | 4303-0919-0024 | உள்ளூர் | 5 years 9 months | மறி |
| 06 | 4303-0919-0031 | உள்ளூர் | 5 years 6 months | மறி |
| 07 | 4303-0919-0032 | உள்ளூர் | 5 years 6 months | மறி |
| 08 | 4303-0919-0034 | உள்ளூர் | 5 years 5 months | மறி |
| 09 | 4303-0919-0035 | உள்ளூர் | 5 years 5 months | மறி |
| 10 | 4303-0919-0040 | உள்ளூர் | 3 years 10 months | மறி |
| 11 | 4303-0919-0042 | உள்ளூர் | 3 years 09 months | மறி |
| 12 | 4303-0919-0043 | உள்ளூர் | 3 years 09 months | மறி |
| 13 | 4303-0919-0045 | உள்ளூர் | 3 years 08 months | கடா |
| 14 | 4303-0919-0048 | உள்ளூர் | 3 years 08 months | கடா |
| 15 | 4303-0919-0054 | ஜமுனாபாரிகலப்பு | 3 years 7 months | கடா |
| 16 | 4303-0919-0055 | உள்ளூர் | 3 years 07 months | மறி |
| 17 | 4303-0919-0057 | உள்ளூர் | 3 years 06 months | கடா |
| 18 | 4303-0919-0059 | உள்ளூர் | 2 years 08 months | மறி |
| 19 | 4303-0919-0060 | உள்ளூர் | 3 years 04 months | மறி |
| 20 | 4303-0919-0063 | உள்ளூர் | 3 years 04 months | மறி |
| 21 | 4303-0919-0064 | ஜமுனாபாரிகலப்பு | 3 years 04 months | கடா |
| 22 | 4303-0919-0071 | உள்ளூர் | 2 years 09 months | கடா |
| 23 | 4303-0919-0077 | உள்ளூர் | 2 years 09 months | கடா |
| 24 | 4303-0919-0078 | உள்ளூர் | 2 years 09 months | மறி |
| 25 | 4303-0919-0080 | ஜமுனாபாரிகலப்பு | 2 years 09 months | கடா |
| 26 | 4303-0919-0081 | உள்ளூர் | 2 years 09 months | மறி |
| 27 | 4303-0919-0083 | உள்ளூர் | 2 years 09 months | கடா |
| 28 | 4303-0919-0086 | ஜமுனாபாரிகலப்பு | 2 years 07 months | கடா |
| 29 | 4303-0919-0088 | உள்ளூர் | 2 years 07 months | கடா |
| 30 | 4303-0919-0091 | உள்ளூர் | 2 years | கடா |
| 31 | 4303-0919-0092 | உள்ளூர் | 2 years | கடா |
| 32 | 4303-0919-0098 | ஜமுனாபாரிகலப்பு | 2 years | மறி |
| 33 | 4303-0919-0100 | உள்ளூர் | 2 years | மறி |
| 34 | 4303-0919-0108 | ஜமுனாபாரிகலப்பு | 1 year 10 months | கடா |
| 35 | 4303-0919-0109 | உள்ளூர் | 1 year 08 months | கடா |
| 36 | 4303-0919-0110 | உள்ளூர் | 1 year 07 months | கடா |
| 37 | 4303-0919-0112 | ஜமுனாபாரிகலப்பு | 1 year 07 months | மறி |
| 38 | 4303-0919-0119 | உள்ளூர் | 1 year 07 months | கடா |
| 39 | 4303-0919-0120 | உள்ளூர் | 1 year 07 months | மறி |
| 40 | 4303-0919-0124 | உள்ளூர் | 1 year 03 months | கடா |
| 41 | 4303-0919-0126 | உள்ளூர் | 1 year 03 months | கடா |
| 42 | 4303-0919-0129 | உள்ளூர் | 1 year 03 months | மறி |
| 43 | 4303-0919-0130 | உள்ளூர் | 1 year 02 months | கடா |
| 44 | 4303-0919-0131 | உள்ளூர் | 1 year 01 month | மறி |
| 45 | 4303-0919-0133 | உள்ளூர் | 1 year 01 month | மறி |
| 46 | 4303-0919-0134 | உள்ளூர் | 1 year 01 month | கடா |
| 47 | 4303-0919-0137 | உள்ளூர் | 1 year | கடா |
| 48 | 4303-0919-0138 | உள்ளூர் | 1 year | மறி |
| 49 | 4303-0919-0148 | உள்ளூர் | 10 months | கடா |
| 50 | 4303-0919-0153 | உள்ளூர் | 09 months | கடா |

இவ் ஏலவிற்பனையில் கால்நடைகளை வாங்குவதற்கு விரும்புவோர் 24.07.2020 (வெள்ளிக் கிழமை) 10.30 மணிக்கு ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் கால்நடைகளை பார்வையிடலாம். ஏல விற்பனையானது 27.07.2020 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் நடைபெறும். ஏலத்தில் வெற்றிபெறும் ஏலதாரர் தாம் கொள்வனவு செய்தகால் நடைகளுக்கான முழுத்தொகையையும் உடனடியாகச் செலுத்தி அன்றைய தினமே கால்நடைகளை கொண்டு செல்ல வேண்டும்.

**பதிவாளர்**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## ஏலவிற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாயபீடத்தின் ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தின் பின்வரும் கால்நடைகள் 27.07.2020 அன்று திங்கட்கிழமை ஏலத்தில் விற்பனைசெய்யப்படும்.

**மாடுகள்:-**

| இல | அடையாள இலக்கம் | இனம் | வயது | நாம்பன் /பசு |
|---|---|---|---|---|
| 01 | 4303-0919-0037 | ஜமுனாபாரிகலப்பு | 4 years 06 months | நாம்பன் |
| 02 | 4303-0919-0050 | ஜமுனாபாரிகலப்பு | 3 years 03 months | நாம்பன் |
| 03 | 4303-0919-0051 | ஜமுனாபாரிகலப்பு | 3 years 03 months | நாம்பன் |
| 04 | 4303-0919-0053 | ஜமுனாபாரிகலப்பு | 3 years 01 month | நாம்பன் |
| 05 | 4303-0919-0054 | ஜமுனாபாரிகலப்பு | 3 years | நாம்பன் |
| 06 | 4303-0919-0055 | ஜமுனாபாரிகலப்பு | 2 years 10 months | நாம்பன் |
| 07 | 4303-0919-0058 | ஜமுனாபாரிகலப்பு | 2 years 09 months | நாம்பன் |
| 08 | 4303-0919-0059 | ஜமுனாபாரிகலப்பு | 2 years 08 months | நாம்பன் |
| 09 | 4303-0919-0066 | ஜமுனாபாரிகலப்பு | 2 years 01 month | நாம்பன் |
| 10 | 4303-0919-0001 | ஜமுனாபாரிகலப்பு | 11 years | பசு |
| 11 | 4303-0919-0003 | ஜமுனாபாரிகலப்பு | 8 years | பசு |
| 12 | 4303-0919-0005 | ஜமுனாபாரிகலப்பு | 12 years | பசு |
| 13 | 4303-0919-0007 | ஜமுனாபாரிகலப்பு | 11 years | பசு |
| 14 | 4303-0919-0044 | ஜமுனாபாரிகலப்பு | 3 years 08 months | பசு |
| 15 | 4303-0919-0046 | ஜமுனாபாரிகலப்பு | 03 years 08 months | பசு |

இவ் ஏலவிற்பனையில் கால்நடைகளை வாங்குவதற்கு விரும்புவோர் 24.07.2020 (வெள்ளிக்கிழமை) 10.30 மணிக்கு ஒருங் கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் கால்நடைகளை பார்வையிடலாம்.

ஏல விற்பனையானது 27.07.2020 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங் குளத்தில் நடைபெறும்.

ஏலத்தில் வெற்றிபெறும் ஏலதாரர் தாம் கொள்வனவு செய்தகால் நடைகளுக்கான முழுத்தொகையையும் உடனடியாகச் செலுத்தி அன்றையதினமே கால்நடைகளைகொண்டு செல்லவேண்டும்.

(ச.32940) (13.17) **பதிவாளர்**

# மனித உரிமையில் இலங்கை வீழ்ச்சி!

## பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 18

இலங்கையில் மனித உரிமைகள் விடயங்களில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் டொமினிக் ரப் கவலை தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் தொடர்பாக அந்தநாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் டொமினிக் ரப் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது மிகவும் மந்த கதியிலேயே இடம்பெற்று வருகின்றது. முக்கிய பொறுப்புகளுக்கு சர்ச்சைக்குரிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளமையானது மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான அரசின் அர்ப்பணிப்புத் தொடர்பாகக் கேள்விகளை எழும்பியுள்ளது.

2019ஆம் ஆண்டின் இறுதியில் இருந்து சிவில் சமூகத்தினர் மற்றும் மனித உரிமைப் பாதுகாவலர்கள் கண்காணிக்கப்படுவதும், அச்சுறுத்தப்படுவதும் அதிகரித்துள்ளது. அதே வேளை, அரசமைப்புச் சீர்திருத்தம் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் பலவற்றில் முன்னேற்றம் காண வேண்டியுள்ளது- என்றார். (எ)

இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
மங்கையற்கரசி
குமாரசிங்கம்
( ஓய்வு நிலை ஆசிரியர் )
உம் விழிமூடி ஈரண்டு விரைந்தே
- போனதம்மா
வழி எங்கும் உம் நினைவில்
- எம் வாழ்வே தொடருதம்மா
உம் கனிவு உம் கருணை உம்
- நேர்மை எம் நினைவில்
- நிழலாய் தொடருதம்மா
உம் ஆத்மா சாந்தியடைவதாக
தோற்றம் 25.10.1929
மறைவு 09.08.2018
என்றும் உன் நினைவுடன்
குமாரசிங்கம்
குடும்பத்தினர்
கு.முல்லைக்குமரன்
வ/வவுனியா
தமிழ் மத்திய மகாவித்தியாலயம்.
4 ஆம் வட்டாரம்,
முள்ளியவளை.
(cs 709) (13.17)

இரண்டாம் ஆண்டு நினைவுகள்

அமரர் கனகசபாபதி சுரேந்திரன்
(முன்னாள் பொது முகாமையாளர் செட்டிக்குளம்,
பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்)
குவலயத்தில்
14.09.1971
சிவமயத்தில்
09.08.2018
திதி : அபரபக்க திரயோதசி
அன்பின் உறைவிடமாய் அரவணைப்பால் என்றும்
இன்ப உணர்வோடு இணைந்திருந்த எந்தையே
இந்த உலகினிலே எமை நீர் பிரிந்துபோய்
சென்றதுவோ ஈராண்டு! நிலைத்திடுக சிவபதமே
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி!
இல.77, கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.
077 3435 871, 071 834 9957

தேர்தல் முடியும் வரையில்

# வேட்பாளர்களை விசாரணைக்கு அழைக்காதீர்

நாடாளுமன்றத் தேர்தல் முடியும் வரையில், வேட்பாளர்களை விசாரணைக்கு அழைக்க வேண்டாம் என்று பதில் பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் அனுப்ப தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

கட்சித் தலைவர்களுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்தே தேர்தல்கள் ஆணைக்குழு இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

முன்னாள் அமைச்சரும் வேட்பாளருமான ரிசாட் பதியுதீன் விசாரணைக்கு அழைக்கப்படுவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார். அதனை ஆராய்ந்த ஆணைக்குழு, தேர்தல் முடியும் வரையில் ரிசாத் பதியுதீனை விசாரணைக்கு அழைக்கவேண்டாம் என்று பதில் பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் அனுப்பியிருந்தது.

ரிசாட் பதியுதீன் போன்று வேறு பல வேட்பாளர்களும் பல்வேறு விசாரணைக்கு அழைக்கப்படுவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனையடுத்து நேற்றைய கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், ரிசாட் பதியுதீன் விடயத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கை போன்று ஏனைய வேட்பாளர்களையும் தேர்தல் முடியும் வரையில் விசாரணைக்கு அழைக்க வேண்டாம் என்று அறிவுறுத்துவதில் ஆட்சேபனை உள்ளதா என்று தேர்தல்கள் ஆணைக்குழு வினவியுள்ளது. கட்சித் தலைவர்கள் எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. இதனையடுத்து தேர்தல் முடியும் வரையில் வேட்பாளர்களை விசாரணைக்கு அழைக்க வேண்டாம் என்று பதில் பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் அனுப்ப தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. (ஒ.5)

# திருட்டுக் குற்றச்சாட்டில் மூன்று பேர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 18

மின் மோட்டர் மற்றும் காஸ் சிலிண்டர் என்பற்றைத் திருடிய குற்றச்சாட்டில் அரசடியைச் சேர்ந்த 3 இளைஞர்கள் யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஊரடங்கு நடைமுறையில் இருந்த போது, யாழ்ப்பாணம் அரசடிப் பகுதியில் பல வீடுகளில் மின் மோட்டர் மற்றும் எரிவாயு சிலிண்டர்கள் திருட்டு போயிருந்தன என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் 3 பேரைக் கைது செய்துள்ளனர்.

திருடப்பட்ட 12 மின்மோட்டார்களும் 3 எரிவாயு சிலிண்டர்களும் சந்தேகநபர்களிடம் இருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன என்று குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 20 முதல் 25 வயதுக்குட்பட்டவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி முனசிங்க மற்றும் உபபொலிஸ் பொலிஸ் பரிசோதகர் கர்ச சமரக்கோன் தலைமையில் இந்தக் கைது நடவடிக்கை நடந்துள்ளது.

ஊரடங்கு காலப்பகுதியில் களவு மற்றும் கொள்ளை தொடர்பாக 13 முறைப்பாடுகள் தமது பிரிவுக்குக் கிடைத்துள்ளது என்றும், அவற்றில் 12 திருட்டுச் சம்பவங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்த உபபொலிஸ் பரிசோதகர் கர்ச சமரக்கோன் 33 லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் இதுவரை மீட்கப்பட்டதுடன் 20 பேர் வரை கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவித்தார். (எ.25)

“தமிழ்த் தேசியத்தில் தீவகத்தின் வகிபாகம்”
சிறப்புரை:
ஜனாதிபதி சட்டத்தரணி
கே.வி. தவராசா

தலைமை : மாவை.சோ. சேனாதிராசா
( முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்,
தலைவர், இலங்கை தமிழ் அரசுக் கட்சி)
காலம் : 18.07.2020
சனிக்கிழமை
பி.ப. 3 மணிக்கு
இடம் : 282 , அரசடி வீதி
கந்தர்மடம் .

## கொரோனா...

சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் செயலருக்கு எழுத்துப்பூர்வமாக அறிவித்துள்ளார். சட்டப் பாதுகாப்பு இல்லாமல் தனது கடமைகளைச் செய்ய இயலாமையின் அடிப்படையில் தொழிற்சங்கம் இந்த முடிவை எடுத்துள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் போது பின்பற்ற வேண்டிய சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல் ஆலோசனைகள் தொடர்பாக வெளியாகவுள்ள வர்த்தமானியில் தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தே அவர்கள் இந்த முடிவை எடுத்துள்ளனர்.

அரசு தங்கள் கோரிக்கைகள் தொடர்பாகப் பாராமுகமாகச் செயற்படுகின்றது என்று தெரிவித்துள்ள அவர்கள், கொரோனா ஒழிப்பு நடவடிக்கையில் இருந்து விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளனர்.

இன்று நடைபெறவுள்ள தொழிற்சங்கத்தின் மாவட்டப் பிரதிநிதிகள் கூட்டத்தில் எதிர்கால முடிவுகள் அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளனர். (ஒ,எ)

## குழந்தைக்கும்...

ளது. கம்பளையில், கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் பணியாற்றிய ஆலோசகர் ஒருவரின் 2 வயது மகளுக்கே தொற்றுக் கண்டறியப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்றுக்குள்ளான குழந்தை மற்றும் தாய் ஐ.டி.எச். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தாய்க்குக் கொரோனாத் தொற்றுள்ளமை கடந்த 14ஆம் திகதி உறுதி செய்யப்பட்டது. அதையடுத்து அவரின் குடும்பத்தவர்கள் 8 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் குழந்தைக்கு கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. (ஒ,எ)

## பொதுமன்னிப்பு...

ஏடுக்கப்பட்டது.

நீதியரசர்கள் எல்.எச். தெஹிதெனிய, யசந்தகோதாகொட முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சட்டமாஅதிபர் சார்பில் பிரதி மன்றாடியார் நாயகம் நெரின் புள்ளே முன்னிலையாகியிருந்தார். படுகொலைக்குள்ளானவர்கள் சார்பில் இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இந்த வழக்குகள் சார்பில் எம்.ஏ.சுமந்திரன், ஜெப்ரி அழகரட்ணம் ஆகியோர் முன்னிலையா னார்கள்.

இரண்டு பொதுநல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையானார். அம்பிகா சற்குணநாதன் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் கனகஈஸ்வரன் முன்னிலையா னார். நான்கு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்த போதும், ஒரு வழக்கு தொடர்பான ஆவணமே சுனில் ரத்னாயக்கவுக்கு வழங்கப்பட்டிருந்தது. அத்துடன் நீதியமைச்சின் செயலர் மாற்றமடைந்துள்ளமையால் புதிய செயலரின் பெயர் வழக்கில் புதிதாக மாற்றம் செய்யப்பட வேண்டியிருந்தது. இதன் காரணமாக வழக்கை செப்ரெம்பர் 24ஆம் திகதிக்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர். (ஒ,5)



## அடங்க....

டி.பி. முறைப்பாடு செய்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுத் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கும், கட்சித் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இந்தக் கூட்டத்திலேயே ஈ.பி.டி.பி. சார்பில் கலந்து கொண்ட பிரதிநிதி மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சப்ரிகம திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வீதிகளை வேட்பாளர் ஒருவர் திறந்து வைத்தமை தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஆதாரங்களுடன் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இருப்பினும் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. யாழ்ப்பாணத்துக்கு இந்த வாரம் வருகை தந்திருந்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர், இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டாம் என்றும், அப்படி திறக்கப்பட்ட வீதிகளில், இது பொதுமக்களின் வரிப்பணத்தில் மேற்கொள்ளப்பட்டது என்ற பெயர்ப் பலகையை வைக்குமாறும் அறிவுறுத்தியிருந்தார்.

இந்த நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு சில வீதிகளின் திறப்பு விழாக்கள் இடம்பெற்றுள்ளன. அது தொடர்பான முறைப்பாடு யாழ்ப்பாண மாவட்ட தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவுக்கு உரிய நேரத்துக்கு தெரிவிக்கப்பட்டபோதும், அதிகாரிகள் தாமதமாகச் சென்றுள்ளனர். அதேவேளை, அதிகாரிகள் சென்ற பின்னர் இடம்பெற்ற நிகழ்வுகளில் அரசியல்வாதியும் பங்கேற்கவில்லை.

இந்த விடயங்கள் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுத் தவிசாளருக்கு நேற்று முறையிடப்பட்டது. இது தொடர்பில் பொலிஸார் உரிய நடவடிக்கையை உடனடியாகவே எடுக்க வேண்டும் என்று தவிசாளர் தெரிவித்துள்ளார். (ஒ.5)

### வலிகாமம் வடக்கு பிரதேச சபையால் விடுக்கப்படும் அறிவித்தல்

எதிர்வரும் 2020-07-20 ஆம் திகதி திங்கட்கிழமை ஆடி அமாவாசை தினத்தை முன்னிட்டு பிதிர்க்கடன் நிறைவேற்றும் பொதுமக்கள் தற்போது நாட்டில் நிலவி வரும் அசாதாரண சூழ்நிலையான covid 19 நோய்த்தடுப்பிலிருந்து பாதுகாத்தக்கொள்வதற்கு ஏதுவாக தத்தமது பிரதேசத்திற்கு அருகிலுள்ள தீர்த்தக்கரையில் பிதிர்க்கடன்களை நிறைவேற்றுமாறு கேட்டுக் கொள்வதுடன் அவ்வாறு தங்கள் பிரதேசங்களில் பிதிர்க்கடனை நிறைவேற்றுவதற்கு வசதி இல்லாதவர்கள் மட்டும் கீரிமலை தீர்த்தக்கேணியில் பிதிர்க்கடன் நிறைவேற்றுவதற்கு பின்வரும் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு சமூகமளிக்க வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**நிபந்தனைகள்**

1. பிதிர்க்கடன் நிறைவேற்றுவோர் மட்டும் அனுமதிக்கப்படுவர் அத்துடன் ஏனையோரை அழைத்து வருவதை தவிர்த்துக் கொள்ளவும்.
2. கடமை நிறைவேற்றும் குருக்கள்மார் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தெல்லிப்பளை உப அலுவலகத்தில் முன்கூட்டியே பதிவினை மேற்கொள்ள வேண்டும். முற்பதிவினை மேற்கொண்ட 25 குருக்கள்மார் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
3. சகல வியாபாரங்களும் தடை செய்யப்பட்டுள்ளது.
4. Covid 19 நோய்த்தடுப்பிலிருந்து பாதுகாப்பதற்கு ஏற்ற வகையில் முகக்கவசம் அணிந்து வருகை தர வேண்டும்.
5. கீரிமலை தீர்த்தக்கேணிக்கு பிரவேசிப்பதற்கு முன் உடல் வெப்பநிலையினை பரிசோதிப்பதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் பரிசோதனை செய்த பின்னரே உட்பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.
6. பிதிர்க்கடன் நிறைவேற்ற வருவோர் உள்நுழைவதற்கு முன் பதிவினை மேற்கொள்ள வேண்டும்.
7. .பொதுமக்கள் சமூக இடைவெளியை பின்பற்ற வேண்டும்
8. குறிப்பிட்ட நேரத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலானோரே உள்வாங்கப்படுவர்.

**திரு.சோ.சுகிர்தன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை**

## சின்னவன்...

யும் நோக்குடன் கைக்குண்டு ஒன்றுடன் உரும்பிராயில் இருந்து சாவகச்சேரி நோக்கிப் பயணித்த போது பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

சின்னவன் என்று கூறப்படும் இரத்தினசிங்கம் சந்திரகுமார் என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார். இவர் வவுனியாவில் நடந்த சங்கிலி அறுப்புக் குற்றத்துக்காக 3 மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. அவரது மனைவி தென்மராட்சியைச் சேர்ந்த ஒருவருடன் வாழ்கின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது. தன் மனைவியுடன் வாழ்ந்து வருபவரைக் கொலை செய்யும் நோக்குடன் இன்னொருவருடன் சாவகச்சேரிக்குப் பயணித்தபோதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து வெளிநாட்டுத் தயாரிப்பான கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் 16 பவுண் நகைகள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றைக் கொள்வனவு செய்து உடமையில் வைத்திருந்த மற்றும் விற்பனை செய்த குற்றச்சாட்டுக்களின் கீழ் 3 பெண்கள் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் விசாரணைகளின் பின்னர் யாழ்ப்பாணம் நீதிவான் நிதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸ் பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்ஸின் வழிகாட்டலில் உப பரிசோதகர் பிரதீப் தலைமையிலான அணி இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டிருந்தது. (ஒ.எ.26)

## தேர்தல்...

பட்டுள்ளது. இந்த வர்த்தமானி கடந்த ஒரு மாத காலத்துக்கு மேலாக வெளியிடப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வந்தது. இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய விசனம் வெளியிட்டிருந்த நிலையில் நேற்று இரவு வெளியிடப்பட்டுள்ளது.

தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் ஆகக் கூடியது 300 பேர் பங்குபற்றலாம் என்றும், கட்சித் தலைவர் கலந்து கொள்ளும் கூட்டத்தில் 500 பேர் வரையில் பங்குபற்றலாம் என்றும் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.5)

## கூட்டமைப்பின்...

ளார். யாழ்ப்பாணம் மார்டீன் வீதியில் அமைந்துள்ள இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் இது வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளவுள்ளனர். அதேவேளை, ஏனைய மாவட்டங்களில் வைத்து அந்தந்த மாவட்ட முதன்மை வேட்பாளர்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடுவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.5)

# மரண அறிவித்தல்

# ஜெகதேவன் சீதாமோகன் (மோகன்)



பிறப்பு 10.04.1971
இறப்பு 17.07.2020

யாழ். உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும், **LLFord** லண்டன் **(Uk)** மற்றும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெகதேவன் சீதாமோகன் நேற்று (17.07.2020) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் ஜெகதேவன் திருமதி ஜெகதேவன் கங்காதேவி ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான க.இ.சரவணமுத்து (முன்னாள் ஆசிரியர்), மகேஸ்வரி (முன்னாள் அதிபர்) தம்பதியரின் அன்பு மருமகனும் திருமதி சாந்திதேவி (**Trinity catholic High School** லண்டன்) அவர்களின் அன்புக் கணவரும் சீதாராம், சிந்துராம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வாகீசன், வித்தியதீப்ன் (லதன் - கனடா), பிரகாசினி (லதனி - பிரான்ஸ்), இந்திரன் (உரும்பிராய்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் குமுதினி (பிரான்ஸ்), சசிதா (கனடா), கபிலன் (பிரான்ஸ்), சுதாமதி (உரும்பிராய்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி, திருமதி இந்திராணி கிருஷ்ணமூர்த்தி, காலஞ்சென்றவர்களான கதிரவேலு, மங்கயர்க்கரசி, தேவராஜா, திருமதி கமலநாயகி தேவராஜா (பேபி - கொக்குவில்), காலஞ்சென்ற ஜெகதீசன், யோகேஸ்வரி (பிள்ளையக்கா - உரும்பிராய்), லோகேஸ்வரி (லண்டன்), சுரேஷ்குமார் (ராசன் - லண்டன்), திருமதி பத்மாவதி சுரேஷ்குமார் (லண்டன்), சிவலிங்கம், திருமதி மங்கயற்கரசி சிவலிங்கம் (மலேசியா) ஆகியோரின் பாசமிகு பெறாமகனும் ஞானபிரகாஷ் (மலேசியா), சிவேந்திரா **(UK)**, காலஞ்சென்றவர்களான தர்மசீலன், ஜெயசீலன், ஞானசீலன் மற்றும் குணசீலன், திருமதி மாலதி, கிரிஷாந்தன் **(UK)**, துஷாந்தன் **(UK)**, டுசியந்தி **(UK)**, இன்பசாந்தன் **(UK)**, கம்ஷானந்தி **(UK)**, டஷிகா **(HNB)**, விதுர்ஷன் **(Commercial Bank)**, ஜனகரூபன் **(SLT)** ஆகியோரின் அன்புச் சகோதரனும் சாரதாதேவி (லண்டன்), பாரதிதேவி (ஆஸ்திரேலியா), மகேஸன் (லண்டன்), வாணிதேவி (ஆஸ்திரேலியா), சபேசன் (லண்டன்), கலாதேவி (லண்டன்), வித்தியாதேவி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும் அனந்தநாதன் (ஆஸ்திரேலியா), ஷாமினி (லண்டன்), விக்னராஜா (லண்டன்), சிவகுமார் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் சகலனும் வித்தகன் (பிரான்ஸ்), ஆத்மிகா, அஸ்மிகா (கனடா) ஆகியோரின் பெரியப்பாவும் ஜீவிகா, நிரோஜிகா, ஹரிணிகா, அஜிலன் (பிரான்ஸ்), சுருதி, ஹரிணி, சாகித்தியா (உரும்பிராய்) ஆகியோரின் மாமனாரும் திருவேணி, பிரணவன், சரவணன் ஆகியோரின் சித்தப் பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக ஞானவைரவர் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயிலுள்ள அவரது உறவினர் வீட்டில் இன்று (18.07.2020) சனிக் கிழமை மாலை 4.00 மணிமுதல் வைக்கப்பட்டு நாளை (19.07.2020) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்.**

**ஜனகரூபன்:- 077 326 8358, டஷிகா:- 077 771 9552,**
**சாந்திதேவி:- 0044 7478 311994 (லண்டன்), லதன்:- 0014 1684 48376 (கனடா),**
**லதனி :- 0033 6528 26280 (பிரான்ஸ்), கபிலன்:- 0033 6618 92404 (பிரான்ஸ்)**

## தலைவிரித்தாடும்...

அவரது பதவி விலகல் கடிதம் சட்டத்துறை தலைவருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளபோதும், கலைப்பீடாதிபதி ஊடாக தகுதி வாய்ந்த அதிகாரியின் கைக்கு நேற்று மாலை வரையில் கிடைக்கவில்லை.

அவரது பதவி விலகல் கடிதத்தில், பல்கலைக்கழகப் பேரவை தன்னைச் சட்டத் தொழிலில் ஈடுபடுவதில் இருந்து தடை செய்துள்ளமையைக் குறிப்பிட்டுள்ளார். இந்தத் தடைக்கு எதிராகத் தான் உயர்நீதிமன்றில் தொடர்ந்திருந்த வழக்குப் பல்வேறு காரணங்களுக்காக விவாதத்துக்கு எடுக்கப்படாது ஒத்திவைக்கப்பட்டுக் கொண்டிருக்க இந்த விடயத்தில் இனியும் காத்திருப்பதில் பயனில்லை என்று அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தனது வாழ்வில் நிச்சயத்தன்மை இல்லாது இருக்க அனுமதிக்கப் போவதில்லை என்றும் அவர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தன்மீது விதிக்கப்பட்ட தடை பல்கலைக் கழகம் தனது சுயாதீனத்தை முழுமையாக இழந்து விட்டமைக்கான முக்கியமான சான்று என்று குறிப்பிட்டுள்ள குருபரன், தனது நலன்கள் தொடர்பில் சுயாதீனமாக முடிவு எடுக்க முடியாத பல்கலைக் கழகம் யாருக்காகச் செயற்படுகின்றது என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

நல்லாட்சி, சட்டத்தின் பாலான ஆளுகை, சுயாதீனம் ஆகியவற்றைத் தொலைத்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் நல்லாசிரியர்களை ஈர்க்கவும் முடியாது, தொடர்ந்து வைத்திருக்கவும் முடியாது நலிவடைந்து கொண்டிருக்கின்றது என்றும் அவர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்டக்கல்வி மீதான ஆர்வத்தை ஒருபோதும் கைவிடப் போவதில்லை என்று குறிப்பிட்டுள்ள குருபரன், உயர் நீதிமன்றில் வழக்கைத் தொடர்ந்து கொண்டு நடத்துவேன் என்றும், தனக்குச் சார்பாக கட்டளை ஆக்கும்பட்சத்தில் மீள யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் உள்நுழைய விண்ணப்பிப்பேன் என்றும் தெரிவித்துள்ளார்.

இடைப்பட்ட காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சட்டத்துறையின் இடைவிடாத இயங்குகைக்குத் தேவையான இயலுமான ஒத்தாசைகளை வழங்குவேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சட்டத்துறையில் பணியாற்றும் சட்டத்தரணிகள் நீதிமன்றங்களில் முன்னிலையாவதற்குத் தடை விதித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவுறுத்தல் வழங்கியமைக்கும், தான் நீதிமன்றங்களில் முன்னிலையாவதைத் தடுக்கும் வகையில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகப் பேரவை எடுத்த தீர்மானத்துக்கு எதிராக கலாநிதி கு.குருபரன் உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

கலாநிதி கு.குருபரன் சார்பில் சட்டத்தரணி மோகன் பாலேந்திரா இந்த மனுவைக் கடந்த டிசெம்பர் மாதம் 17ஆம் திகதி உயர்நீதிமன்றில் சமர்ப்பித்தார். இந்த மனு கடந்த ஜுன் மாதம் 30 ஆம் திகதி உயர்நீதிமன்ற அமர்வு முன்னிலையில் பரிசீலனைக்கு வந்தது. உயர் நீதிமன்ற நீதியரசர் பிரியந்த மற்றும் ஜெயவர்த்தன ஆகியோர் மனுவைக் கேட்பதில் இருந்து விலகிக் கொள்வதாக அறிவித்ததுடன், மனு மீதான விசாரணையை நேற்றுமுன்தினம் வரை ஒத்திவைத்தார்.

நேற்றுமுன்தினம் மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டு எதிர்வரும் செம்ரெம்பர் மாதம் 9ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. உயர்நீதிமன்றில் தன்னால் தொடுக்கப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுத் தொடர்பில் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு அரசியலாக்கும் பணியையே முன்னெடுத்துள்ளது என்று கலாநிதி கு.குருபரன் குற்றஞ்சாட்டியிருந்தார். இந்த விடயம் பல மாதங்களாக இழுபடும் நிலையில் இன்று கலாநிதி கு.குருபரன் தனது பதவி விலகல் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் சிறந்த ஆளுமையான விரிவுரையாளர் ஒருவரை இழந்துள்ளது என்று கல்விமான்கள் பலரும் கருத்துத் தெரிவிததுள்ளனர். லண்டனில் மேற்படிப்பை முடித்தபோதும், தனது மக்களுக்காகச் சேவையாற்ற வந்த ஒருவரைச் சரியாகப் பயன்படுத்த யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் தவறிவிட்டது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குருபரனின் பதவி விலகல் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்துக்கும், பல்கலைக் கழக ஆணைக்குழுவுக்கும் ஒரு கரும்புள்ளி என்று குறிப்பிட்டுள்ள அவர்கள், தமிழ் மக்களின் நலன்களுக்காக வாதாடும் சிறந்த சட்டத்தரணி ஒருவர் கிடைத்துள்ளார் என்றும் தெரிவித்தனர்.

**பின்னணி**

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பின்னர் காணாமல் ஆக்கப்பட்டனர் என்று பெற்றோரால் தெரிவிக்கப்படும் இளைஞர்கள் 12 பேர் தொடர்பில் 2017ஆம் ஆண்டு நவம்பர் 9ஆம் திகதி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் ஆள்கொணர்வு எழுத்தாணை மனுக்கள் தனித்தனியே தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்களை சட்டத்தரணி எஸ்.சுபாசினி தாக்கல் செய்தார். அந்த மனுக்களின் ஊடாக பாதிக்கப்பட்ட பெற்றோருக்கு நீதி கிடைக்கவேண்டும் என்று சட்டத்தரணி கலாநிதி கு.குருபரன் முன்னிலையாகி வாதாடி வருகிறார். மனுதாரர்களின் கோரிக்கைகள் தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுத்து மேல் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் படி சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றுக்கு பொறுப்பு பாரப்படுத்தப்பட்டது.

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் இந்த மனுக்கள் மீதான விசாரணை கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட போது, பாதிக்கப்பட்ட தரப்பான மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி கலாநிதி கு.குருபரன் முன்னிலையாகியிருந்தார். மனுக்கள் மீதான விசாரணைகள் நிறைவடைந்து மன்றிலிருந்து சட்டத்தரணி கலாநிதி கு.குருபரன் வெளியேறிய போது அவரை, இராணுவப் புலனாய்வாளர் ஒருவர் அலைபேசியில் ஒளிப்படமோ அல்லது காணொலிப் பதிவோ செய்திருந்தார். அந்த இராணுவப் புலனாய்வாளர் பிரதி மன்றாடியார் அதிபதி சேய்த்திய குணசேகரவின் வாகனத்தில் ஏறியிருந்து ஒளிப்படம் எடுத்ததையும் அதில் பயணித்தமையையும் சட்டத்தரணி கலாநிதி கு.குருபரன் கண்டிருந்தார். இது தொடர்பில் உடனடியாக சாவகச்சேரி நீதிவானின் கவனத்துக்கு கொண்டு வந்த சட்டத்தரணி கு.குருபரன், சட்ட மா அதிபர் உள்ளிட்ட தரப்புகளுக்கு கடிதம் ஊடாகவும் முறையிட்டிருந்தார்.

இந்த நிலையில் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி இராணுவத் தலைமையகத்திலிருந்து பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. அதில், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி குமாரவடிவேல் குருபரன், போதனைசார் அலுவலகராக உள்ள நிலையில் நீதிமன்றங்களில் முன்னிலையாகுவதற்கும் அனுமதி உண்டா? அவர் இராணுவத்தினருக்கு எதிராக நீதிமன்றங்களில் முன்னிலையாகின்றார், என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் கேட்கப்பட்டிருந்தது.

அந்தக் கடிதம் கிடைத்த அன்றைய தினமே அவசர அவசரமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தகுதிவாய்ந்த அதிகாரிக்கு ஓர் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது. அதில், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி குமாரவடிவேல் குருபரன், போதனைசார் அலுவலகராக உள்ள நிலையில் நீதிமன்றங்களில் முன்னிலையாகுவதற்கும் அனுமதி பெற்றுள்ளாரா என்பது தொடர்பில் இலங்கை இராணுவத்தால் கோரப்பட்டுள்ளது. அதற்கான அனுமதி வழங்கப்பட்டமை தொடர்பில் விளக்கமளிக்கவேண்டும், என்று தகுதி வாய்ந்த அதிகாரியிடம் கோரப்பட்டது.

பல்கலைக்கழக தாபன விதிக் கோவை 8ஆம் பிரிவின் கீழ் கலாநிதி குமாரவடிவேல் குருபரன் நீதிமன்றங்களில் முன்னிலையாகுவதற்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பேரவையால் 2011ஆம் ஆண்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று தகுதி வாய்ந்த அதிகாரியால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு பதிலளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தகுதிவாய்ந்த அதிகாரியின் பதில் கடிதம் மற்றும் இலங்கை இராணுவத்தால் வழங்கப்பட்ட கடிதம் என்பன பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கடந்த செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதிய அமர்வில் முன்வைக்கப்பட்டன.

அவை தொடர்பில் நடவடிக்கை எடுத்து கலாநிதி குமாரவடிவேல் குருபரனை நீதிமன்றங்களில் முன்னிலையாகுவதைத் தடை செய்வது என்றும் அவர் பிரசித்த நொத்தாரிசு பணியை முன்னெடுக்க அனுமதியளிப்பது என்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தத் தீர்மானம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தகுதிவாய்ந்த அதிகாரிக்கு செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டது. இந்தக் கடிதம் கடந்த ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தகுதிவாய்ந்த அதிகாரிக்கு கிடைக்கப்பெற்றது. அதுதொடர்பில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பேரவைக்கு கடந்த நவம்பர் 9ஆம் திகதி தகுதிவாய்ந்த அதிகாரியால் முன்வைக்கப்பட்டது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் வழங்கியது.

இதேவேளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவைக்கு, ஆட்சிமாற்றத்தின்பின்னர் நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் சிலரின் தகுதி குறித்து குருபரன் பகிரங்கமாகக் கேள்வி எழுப்பியிருந்த நிலையில், பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தீர்மானத்துக்கு மறுப்பு ஏதுமின்றி பேரவை ஒப்புதல் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)






## சபையில் சரவணபவன்



இன்று வலிகாமம் வலிகாமம் வடக்கு, கேப்பாப்பிலவு, முள்ளிக்குளம் உட்பட பல விவசாய பூமிகளை இராணுவம் கையகப்படுத்தியுள்ளது. இவற்றில் இன்றும் பல பகுதிகளில் இராணுவமே விவசாயத்தில் ஈடுபட்டுப் பண்ணைகளை நடத்தி வருகின்றது. மணலாற்றில் தமிழ் மக்களின் 6ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் விவசாய நிலங்கள் மகாவலி அபிவிருத்தி சபையால் கையகப்படுத்தப்பட்டு சிங்கள விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. தற்சமயம் 40 இடங்கள் வனஜீவராசிகள் திணைக்களம் தனக்குச் சொந்தமானவை எனக் கூறி நிலஅளவை செய்ய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இவற்றில் பெரும்பாலானவை விவசாய நிலங்கள், இன்னொருபுறம் இரணைமடு நீர் கிளிநொச்சி விவசாயத்துக்கே பற்றாக்குறையாக இருக்கும்போது யாழ்ப்பாணத்துக்கு அதிலிருந்து குடிதண்ணீர் வழங்க வேண்டும் என சிலர் பல்வேறு அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றனர்.

இவ்வாறு விவசாயிகளுக்குரிய நிலமும் நீரும் பல்வேறு தரப்பினராலும் அபகரிக்கப்படும்போது விவசாய உற்பத்தி மேம்பட முடியுமா?

வலிகாமம் வடக்கு வெங்காயம், மிளகாய், வாழை, வெற்றிலை, முந்திரிகை போன்ற பயிர்கள் அமோக விளைச்சலைத் தரக்கூடிய செம்மண் பூமியாகும். இதன் பெரும்பகுதி இன்றும் இராணுவக் கட்டுப்பாட்டிலேயே உள்ளது என்பதைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

கோழிக்காடு என அழைக்கப்படும் கப்பல் வாழைப் பழத்துக்கு மேற்கு நாடுகளில் நல்ல கேள்வி உண்டு. இப்பிரதேசம் முழுமையாக விடுவிக்கப்பட்டு பலாலி விமான நிலையமும் இயங்குமானால் கப்பல் வாழைப்பழ ஏற்றுமதி மூலம் நாட்டுக்கு கணிசமான அந்நியச் செலாவணியைப் பெற முடியும். முந்திரிகை உற்பத்தியை அதிகரித்து கொழும்புக்கு ஏற்றுமதி செய்தால் வெளிநாடுகளிலிருந்து முந்திரிகை இறக்குமதிசெய்ய செலவிடும் அந்நியச் செலாவணியைக் குறைக்க முடியும்.

2019 மார்ச்

# இ.போ.ச பேருந்து மீது கல்லெறிந்து தாக்குதல்

கொழும்பு, ஜூலை 18

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து மீது கொடிகாமம் இராமாவில் பகுதியில் வைத்து நேற்று கல்லெறி தாக்குதல் நடத்தப்பட்டது. மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே தாக்குதலை நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று இரவு 11 மணியளவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பேருந்தின் நடத்துநரும் பயணி ஒருவரும் காயமடைந்த நிலையில் 1990 அவசர அம்புலன்ஸ் மூலம் சாவகச்சேரி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-159)

# ரயில் சேவை இரத்து

யாழ்ப்பாணம், ஜூலை 18

கல்கிசை - காங்கேசன்துறை இடையேயான குளிரூட்டப்பட்ட நகர்சேர் ரயில் சேவை இந்த வாரம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட பல ரயில் சேவைகளை மீண்டும் தொடங்க ரயில்வே திணைக்களம் முடிவு செய்தது. அதனடிப்படையில் காங்கேசந்துறை - கோட்டை இடையிலான குளிரூட்டப்பட்ட நகர்சேர் ரயில் சேவை நாளை இன்று, நாளை, நாளைமறுதினம் அதிகாலை 5:10 மணிக்கு கல்கிசையிலிருந்து புறப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதேபோன்று காங்கேசன்துறையிலிருந்து பிற்பகல் 1:15 மணிக்கு கல்கிசை நோக்கிப் புறப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் ரயில் சேவை ரத்துச் செய்யப்பட்டுள்ளது. ஆசனங்களை முன்பதிவு செய்தவர்களுக்கான கொடுப்பனவு மீளச் செலுத்தப்படும் என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. (ம)

# ஹெரோய்ன் கடத்தியவர் விளக்கமறியலில் வைப்பு

சாவகச்சேரி, ஜூலை 18

முச்சக்கரவண்டியில்வைத்துஹெரோய்ன்கடத்திச்சென்றார்என்றகுற்றச்சாட்டில்யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபரொருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரிமதுவரிநிலையத்தினருக்குநேற்றுமுன்தினம்கிடைத்ததகவலையடுத்துநிலையப் பொறுப்பதிகாரி இந்திக்க பிரியசாந்த தலைமையில் நகர்ப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே மேற்படி ஹெரோய்ன் மீட்கப்பட்டது. சந்தேக நபர் எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ம-9)

# இங்கிலாந்து அணி வலுவான ஆரம்பம்

## பதிலடி கொடுக்குமா தீவுகள்



லண்டன், ஜூலை 18

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய இரண்டாம் நாளில் இங்கிலாந்து அணி 9 இலக்குகள் இழந்து 469 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தியது. பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் ஓர் இலக்கை இழந்து 32 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நேற்றுமுன்தின முதல் நாள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 207 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. சிப்லி 86 ஓட்டங்களுடனும், ஸ்ரோக்ஸ் 59 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். சிறிது நேரத்தில் சதம் கடந்தார் சிப்லி. ஸ்ரோக்ஸும் சதத்தை நிறைவுசெய்தார். அணி 341 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 120 ஓட்டங்களுடன் சிப்லி ஆட்டமிழந்தார். அதன் பின்னர் பட்லர் சற்றுச் சிறப்பாக விளையாடி 40 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். ஸ்ரோக்ஸ் 176 ஓட்டங்களுடன் வீழ்ந்தார். 9 இலக்குகளை இழந்து 469 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இங்கிலாந்து அணி ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பந்துவீச்சில் சேஸ் 5 இலக்குகளையும், றோச் 2 இலக்குகளையும், ஜோசப், கோல்டர் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகளுக்கு கம்பல் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். இதையடுத்து அல்சாரி ஜோசப் பகுதிநேர (இரவு நேர) வீரராக களமிறக்கப்பட்டார். மேற்கிந்தியத் தீவுகள் அணி ஓர் இலக்கை இழந்து 32 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது நாள் முடிவுக்கு வந்தது. ஆட்டத்தின் மூன்றாம் நாள் இலங்கை நேரப்படி இன்று மாலை 3.30க்கு ஆரம்பமாகும். (ம)

**வேலைக்கு ஆள் தேவை**
அலுவலக எழுத்து வேலைக்கு ஆள்கள் தேவை.
076 050 3863, 076 311 9485

**Your Royal Auto Mobile**
எமது வாகன சுத்திகரிப்பு நிலையத்திற்கு
**வேலையாள்கள்**
தேவைப்படுவதால் உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:- 077 776 3533
இவ்வேலையில் அனுபவம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

**வீடு தேவை (அலுவலக பாவனைக்கு)**
தனியார் நிறுவனம் ஒன்றின் அலுவலகம் மற்றும் தொழிற்கூடம் அமைப்பதற்கு வளவுடன் கூடிய வீடு தேவை.
மாநகர சபை எல்லைக்குள் நாவலர் வீதி, பிறவுண் வீதி, கோயில் வீதி விரும்பத்தக்கது.
தொடர்பு:- 077 346 0128

**பணியாளர்கள் தேவை**
யாழ். நகரில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பதவிகளுக்கு பணியாளர்கள் தேவை.
❊ எழுது வினைஞர்
❊ தகவல் தொழில்நுட்ப உதவியாளர் (It)
ஆர்வம் உள்ளவர்கள் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் சுயவிபரக் கோவையினை அனுப்பிவைக்கவும்
jaffnavacancy@gmail.com

**அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு**



கடந்த (20.06.2020) சனிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்
**அமரர்**
**வேலுப்பிள்ளை இலட்சுமி**
அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (19.07.2020) ஞாயிற்றுக்கிழமை மு.ப 8.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் அன்றைய தினம் முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் தாங்களும் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
சர்வோதயா வீதி,
ஆவரங்கால், புத்தூர்.
குடும்பத்தினர்.

# பெற்றோல்...

வம் நேற்று மாலை 5:30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. 3 மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களே இந்த பெற்றோல் குண்டு தாக்குதலை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். வீட்டுக்கு வெளிநாட்டிலிருந்து உறவினர்கள் வருகை தந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏன் எதற்கு இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது தொடர்பில் யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில், வீட்டு உரிமையாளரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை சந்தேக நபர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ஒ.5,25,26)

**CHEMISTRY**
**KaSubeesan**
**A/L மாணவர்களுக்கான மாபெரும் கருத்தரங்கு**
வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம்.
ஜீலை 26 (ஞாயிறு) 27 (திங்கள்)
▶ 800 நாட்களுக்கு மேற்பட்ட பாட அலகுகளை வெறும் 8 நாட்களில் கற்கும் வாய்ப்பு
▶ அலகு ரீதியான துரித மீட்டல்
▶ அனைத்து மாணவர்களும் 80 புள்ளிகளுக்கு மேற்பட்ட பாடப்பரப்பினை 8 நாட்களில் கற்றுக்கொள்ள ஒரு அரிய வாய்ப்பு
○ Inorganic - 2 Days
○ Organic - 2 Days
○ Physical - 2 Days
○ General - 2 Days
அனுமதிக்கட்டணம் 1000/=
ஒவ்வொரு அலகிலும் 250MCQ, இறுதி 3 வருட Part ii வினாக்கள் கற்றுத் தரப்படும்
▶ ஆர்வம் உடைய மாணவர்கள் 'A' சித்தி பெற்றுக் கொள்ள உறுதுணையாக இருக்கும்
அனுமதிகள் ஜூலை 18 லிருந்து 23 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
077 430 7829 / 075 566 3375



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.